பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 03 வெள்ளிக்கிழமை (17.06.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :203

## மத்திய மற்றும் மாகாண அரசுகளிலிருந்து வெளியேறியது ஜே.வி.பி.!

### தேவைப்பட்டால் ஐ.தே.கவுடனும் கைகோர்க்குமாம்



சோமவன்ஸ அமரசிங்க

கொழும்பு.ஜூன்17

மத்திய அரசிலிருந்து விலகியதுபோல் மாகாண சபைகளிலிருந்தும் மாகாண அரசுகளுக்கு வழங்கிவரும் ஆதரவை வாபஸ் பெறப்போவதாக நேற்று அறிவித்திருக்கும் ஜே.வி.பியினர், தங்களது அருமையை ஆட்சியாளர்கள் இன்னும் ஓரிரு நாள்களில் உணர்வாளர்களென்று தெரிவித்திருக்கின்றனர்.

இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சங்கத்தின் கேட்போர்கூடத்தில் நேற்றுச் செய்தியாளர் மாநாடொன்றை நடத்திய ஜே.வி.பி. அரசிலிருந்து விலகியது தொடர்பில் தனது நிலைப்பாட்டைச் செய்தியாளர்களுக்கு விளக்கியது.

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, தலைமைச் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, நாடாளுமன்ற உறுப்பினர்களான நந்தன குணதிலக்க, அநுரகுமார திஸாநாயக்க, கே.டி.லால்காந்த

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. வசம் இருந்த அமைச்சுகளை ஏனையோரிடம் பகிர்வது பற்றி ஆராய்வு

கொழும்பு.ஜூன்17

ஜே.வி.பியின் அமைச்சர்கள் நான்கு பேரும் இதுவரை வகித்துவந்த அமைச்சுப் பொறுப்புகளை அமைச்சரவையிலுள்ள ஏனைய அமைச்சர்களுக்குப் பகிர்வது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுத் தமது ஆலோசகர்களுடன் கலந்துரையாடியிருக்கிறார்.

இதன்படி காணி, நீர்ப்பாசன, விவசாயக் கால்நடை அபிவிருத்தி அமைச்சு, சிறிய மற்றும் கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, மீன்பிடி நீரியல் வளத்துறை அமைச்சு, தேசிய விழுமியங்கள் பாதுகாப்பு மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு ஆகிய நான்கு அமைச்சுகளே ஜே.வி.பியினர் வசம் இருந்தன. அவற்றை ஏனைய அமைச்சுகளுக்குப் பகிர்வது குறித்தே

(16ஆம் பக்கம் பார்க்க)

# ஓரிரு நாளில் ஒப்பந்தம் என்ற அரசின் தீர்மானம் புலிகளுக்கு!

## நோர்வேயின் ஊடாகத் தெரிவிப்பு எனினும் இறுதிநேர இழுபறி நீடிப்பு

கொழும்பு,ஜூன்17

**ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானத்துக்கான பொதுக்கட்டமைப்புத் தொடர்பான ஒப்பந்தத்தில் அடுத்த ஓரிரு நாள்களில் ஒப்பமிடுவதற்கு இலங்கை அரசுத்தரப்புத் தயாராக இருக்கின்றது. இதனைத் தெரியப்படுத்தும் செய்தி ஒன்றை அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பு விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி அலுவலகத்துக்கு நேற்றுமுன்தினம் அனுப்பியிருக்கின்றது. நோர்வே அனுசரணையாளர்களுடன் தொடர்புடைய வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.**

எனினும், ஒப்பந்தம் செய்வதற்கான இறுதி நேர ஏற்பாடுகளில் - ஒரு சில விடயங்களில் - இழுபறி நிலை இன்னும் நீடிப்பதாகவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுக்கட்டமைப்பு நடவடிக்கை தொடர்பான நிதி கையாள்கை விடயங்களில் திறைசேரியின் பங்களிப்பு - கட்டுப்பாடு மற்றும் இந்தக் கட்டமைப்பு ஏற்பாடு இலங்கை அரசின் ஓர் அமைச்சுக்குக் கீழ்வருவது போன்ற விடயங்கள் புலிகள் தரப்பில் அதிருப்தி மற்றும் விசனத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சின் செயலாளர் மட்டத்தில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இலங்கை ஜனாதிபதியும், இலங்கை

(16ஆம் பக்கம் பார்க்க)

## திங்களன்று ஹெல்கிஸன் கிளிநொச்சி செல்வார்

கொழும்பு.ஜூன்17

வாரஇறுதியில் (நாளை அல்லது மறுதினம்) கொழும்பு வரும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் எதிர்வரும். திங்கட்கிழமை கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்கிறார்.

அவர் இலங்கை வரும் சமயத்தில் பொதுக் கட்டமைப்பு உடன்பாடு ஏற்பாடுகள் இறுதி செய்யப்பட்டிருக்கும் என்றும் -

அதற்கான ஆயத்தங்களை கொழும்புக்கான நோர்வேத் தூதுவர், ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்று விடிகாலை கொழும்பு வந்துசேர்ந்த கையோடே ஆரம்பித்துவிட்டார் என்றும் -

விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் முயற்சிக்கு அமெரிக்கா ஆதரவு

கொழும்பு.ஜூன்17

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் ஜனாதிபதியின் முயற்சிக்கு அமெரிக்கா மீண்டும் ஆதரவு தெரிவித்துள்ளது. தேக்கநிலையில் உள்ள அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கான அரிய அடித்தளமாக அது அமையும் என்று தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கிறிஸ்டினா ரொக்கா தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பை இலங்கை அரசு விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஆசிய பசுபிக் நாடுகளுடனான சர்வதேச உறவுகள் குறித்த உபகுழுவின் முன் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தெற்காசிய நாடுகள் தொடர்பான அமெரிக்காவின் பொருளாதார, அரசியல் கொள்கைகள் குறித்து நீண்ட விளக்கமளித்த கிறிஸ்டினா ரொக்கா இலங்கை விவகாரம் குறித்தும் பேசினார். (எ-க)

## 'சுயநிர்ணயத்துடன் வாழ தமிழர்கள் முடிவு' ஞாயிறன்று பல்கலையில் பொதுப்பிரகடனம்

யாழ்ப்பாணம்,ஜூன்17

பௌத்த சிங்களப் பேரினவாத பயங்கரவாதத்தை தமிழ் மக்கள் நிராகரிக்கின்றனர் என்பதையும் -

தமிழ் பேசும் மக்கள் சுயநிர்ணயத்துடன் வாழ முடிவு செய்துவிட்டனர் என்பதையும் -

சர்வதேசத்துக்கும் தெற்குத் தலைமைக்கும் எடுத்துக்கூறும் பொதுப்பிரகடனம் ஒன்று நாளை மறுதினம் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படவிருக்கின்றது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும். *'தமிழ்த் தேசியத்தின் குரல்'* நிகழ்வில இந்தப் பிரகடனம் வெளியிடப்படவிருக்கின்றது.

குடாநாட்டில் உள்ள புத்திஜீவிகள், மதத் தலைவர்கள், அரச அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்த நிகழ்வில் ஒன்றுகூடுவர்.

'எண்ணக் கலப்புக்கான அரங்கு' என அழைக்கப்படும் இந்த நிகழ்வில் கலந்துகொள்பவர்களின் எண்ணங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி.விலகலால் அரசு இம்மியளவும் அசையாது மக்கள் ஆணையை நடைமுறைப்படுத்தியே தீருவேன்!

### தொலைக்காட்சி உரையில் ஜனாதிபதி திடசங்கற்பம்



கொழும்பு.ஜூன்17

ஜே.வி.பியினர் விலகினாலும் அரசு இம்மியளவும் அசையாது. ஸ்திரமற்ற அரசு ஒன்று ஏற்படாது. நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைந்தாலும் அரசுக்கு அதனால் பாதிப்பு ஏற்படாது இவ்வாறான முக்கியமான சந்தர்ப்பத்தில் மக்கள் வழங்கிய ஆணையை காட்டிக் கெடுக்காமல் - தவறானதும் முட்டாள்தனமானதுமான - தனது தீர்மானத்தை ஜே.வி.பி. மீள்பரிசீலனை செய்யவேண்டும். ஜே.வி.பி. வந்தாலும் வராவிட்டாலும் மக்கள் வழங்கிய ஆணையை நடைமுறைப்படுத்தியே தீருவேன்.

- இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றிரவு கண்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் ஜனாதிபதி கலந்துகொள்ள ஏற்பாடாகியிருந்தது தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஜனாதிபதி அதில் கலந்துகொள்ளவில்லை. ஆனாலும் ஜனா

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஒஸ்லோ, டோக்கியோ இணக்கப்பாடுகளின்படி பொதுக்கட்டமைப்பு இருந்தால் அதற்கு ஆதரவு

### நாடாளுமன்றில் அதனை சமர்ப்பிப்பது இழுத்தடிப்புக்கே என்கிறது ஐ.தே.க.

கொழும்பு.ஜூன்17

புலிகளுடன் ஏற்கனவே இடம்பெற்ற பேச்சுகளின்போது காணப்பட்ட ஒஸ்லோ இணக்கப்பாடு மற்றும் உதவி வழங்கும் நாடுகளுடன் செய்துகொள்ளப்பட்ட டோக்கியோ உடன்படிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் பொதுக்கட்டமைப்பு அமையுமானால் அதற்கு ஐ.தே.க. முழு ஆதரவைவழங்கும்.

அதைவிடுத்து பொதுக்கட்டமைப்பை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை இழுத்தடிக்க முயன்றால் அது தொடர்பான எந்தவொரு விடயத்தையும் தமது கட்சி புறக்கணித்துவிடும் என்று ஐ.தே.க பேச்சாளரும் முன்னாள் அமைச்சருமான ஜி.எல்.பீரிஸ் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நிறைவேற்று அதிகாரங்களைத் தன்வசம் வைத்துள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதனைப் பயன்படுத்தமுடியாமல் தனது பொறுப்புகளில் இருந்து ஒதுங்கிக் கொள்வதற்காகவே நாடாளுமன்றத்தின் முன் இக்கட்டமைப்புத் திட்டத்தைத் தாம் சமர்ப்பிக்கப்போகிறார் எனப் பாசாங்கு காட்டுகின்றார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான முதலாவது பகுதிக்கொடுப்பனவு வழங்கும் வைபவம் நேற்று யாழ். செயலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், மா.க.ஈழவேந்தன், வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், யாழ். அரச அதிபர் கே.கணேஷ், வீடமைப்பு அமைச்சின் பிரதிநிதி மதனராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் - வீடமைப்பு, புனர்நிர்மாணத்திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன் உரைநிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும் - நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பயனாளி ஒருவருக்கு கொடுப்பனவு வழங்குவதை மூன்றாவது படத்திலும் - நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (செய்தி 14ஆம் பக்கத்தில்) *(படங்கள்: கவிதரன்)*

# பழிவாங்கல் புலனாய்வுக்குழு இறுதி அறிக்கை சமர்ப்பிப்பு

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரால் நியமனம் செய்யப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான அரசியல் பழிவாங்கல் புலனாய்வுக்குழு தனது விசாரணைகளை நிறைவு செய்துள்ளது. இது குறித்த இறுதி அறிக்கையை திருமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் ஆளுநரின் செயலாளரிடம் கடந்த புதன கிழமை இக்குழு கையளித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி குழுவின் செயலாளர் ரீ.குலவீரசிங்கம் தெரிவித்துள்ளதாவது:-

இக்குழுவிற்கு மொத்தம் 439 முறைப்பாட்டு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. குழுவின் ஆரம்ப பரிசீலணையின் பிரகாரம் அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஆதாரங்கள் இருப்பதாக அவதானிக்கப்பட்ட 179 முறைப்பாடுகள் மேலதிக விசாரணைக்காக எடுக்கப்பட்டன. அவை குழுவின் அவதானிப்புகளுடன் உரிய சிபாரிசுகளும் செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் 153 முறைப்பாடுகள் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பானவை என்பது குறிப்பிடத்தக்கது.

மீதி விண்ணப்பதாரர்கள் தமது முறைப்பாடுகள் தொடர்பில் அரசியல் பழிவாங்கலை நிரூபிக்கப்போதுமான ஆவணங்களைச் சமர்ப்பிக்கவோ அல்லது சான்றுகளுடன் நிரூபிக்கவோ தவறியதன் காரணத்தால் அவ்விண்ணப்பங்கள் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு இது எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. என்றார் அவர்.

(ஒ)

# பட்டதாரி நியமன விண்ணப்பதாரிகளுக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்17

வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவையில் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின்கீழ் யாழ்.மாவட்டத்தில் விண்ணப்பித்த பட்டதாரிகளின் தராதரப் பத்திரங்களை பரிசீலனை செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 22ஆம் திகதி மற்றும் 26 ஆம் திகதிகளில் யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப்பரீட்சையில் தோற்றவரும் விண்ணப்பதாரிகள் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, பட்டதாரிச் சான்றிதழ், கிராம உத்தியோகத்தரால் வழங்கப்படும் வதிவிடச்சான்றிதழ் (மூலப்பிரதி) இத்திட்டத்தின் கீழ் பட்டதாரிப் பயிலுநராக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு ஆரம்பப் பயிற்சியையும் தற்பொழுது நடைபெறும் முறையான பயிற்சியைப் பெற்றமைக்கான சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் சமுகமளிக்க வேண்டும் என்று பிராந்திய ஆணையாளர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

(ஒ)

# பொதுக்கட்டமைப்புக்கு மேலும் ஆதரவு ஜே.வி.பி. வெளியேறியதால் கிடைக்கிறது

## சந்தோஷம் தெரிவிக்கிறார் டி.எம்.ஜயரட்ண

கொழும்பு,ஜூன்17

ஜே.வி.பி., அரசிலிருந்து விலகியது என்பதற்காக எமக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. யாரும் நினைப்பதுபோல் எமது அரசு கவிழப்போவதுமில்லை. பொதுக்கட்டமைப்பை எதிர்த்துத்தான் ஜே.வி.பி. வெளியேறியது. ஆனால், அவர்கள் வெளியேறிய பின்னர் பொதுக்கட்டமைப்பு அமைக்கும் எமது முயற்சிக்கு மேலும் ஆதரவுகிடைத்துள்ளது.

நேற்று இவ்வாறு உதயனுக்குக் கருத்துத் தெரிவித்தார் தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர் டி.எம்.ஜயரட்ண. அரசிலிருந்து ஜே.வி.பி. வெளியேறியமை குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

அரசிலிருந்து ஜே.வி.பி. வெளியேறியமை குறித்துக் கவலைப்படாதீர்கள். உலகமயமாக்கலிலும் முதலாளித்துவ சிந்தனையிலும் சிக்குண்டு ஜே.வி.பி. எடுத்த முடிவுகள்தான் ஆட்சியில் இருந்து வெளியேறுவது தொடர்பிலான அவர்களின் தீர்மானம்.

பொதுக்கட்டமைப்புக்கு எதிராகவே அவர்கள் அரசை விட்டு வெளியேறினாலும் இந்த வெளியேற்றத்தினால்தான் பொதுக்கட்டமைப்பு மேலும் பலமடையப் போகிறதென்பதை அவர்கள் உணரவில்லை. இவர்களின் வெளியேற்றத்தினால் அரசு கவிழாது. நாட்டின் மீதும், அமைதி முயற்சிகள் மீதும் அக்கறைகொண்ட இதர சக்திகளின் ஆதரவு எமது அரசுக்குக் கிடைக்கும்.

ஒரு சில இனவாதக் கூட்டமே ஜே.வி.பியின் பின்னால் நிற்கின்றது. எமது நாடு, எமது சமயம், எமது இனம், எமது குலம் என்றெல்லாம் ஒரு சிறிய குழுவே கூக்குரலிடுகிறது. ஆனால், எமது நாட்டின் பெரும்பான்மை மக்கள் அவ்வாறில்லை. அமைதியையே அவர்கள் விரும்புகின்றனர்.

- இவ்வாறு அமைச்சர் டி.எம்.ஜயரட்ண மேலும் கூறினார்.

(எ-க)

# ஜனாதிபதியின் பதில் திருப்திகரமாயில்லை

## ரில்வின் சில்வா கூறுகின்றார்

கொழும்பு,ஜூன்17

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகத் தமது கட்சி ஜனாதிபதியிடம் முன்வைத்த கேள்விகளுக்கு அவர் அளித்திருக்கும் பதில் எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு தொடர்பில் ஜனாதிபதி அளித்திருக்கும் வியாக்கியானங்கள் எவ்விதத்திலும் எமக்குத் திருப்தியைத் தரவில்லை. நாம் எதிர்பார்த்த பதில் எமக்குக் கிடைக்கவில்லை. தனது நிலைப்பாட்டை விளக்கி அவர் கூறுபவற்றை எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாது. எல்லா விடயங்களையும் எம்மிடம் தாம் கூறியிருந்தார் என ஜனாதிபதி குறிப்பிடுவது தவறு. புதன் இரவுவரை நாம் அரசின் பங்காளிகளாகவே இருந்தோம். ஆனால், புதன் மாலை பொதுக்கட்டமைப்புக் குறித்து மக்களுக்கு விளக்கி சுதந்திரக்கட்சி விநியோகித்த துண்டுப்பிரசுரங்களில் அரச இலச்சினை குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபற்றி எமக்கு ஒரு வார்த்தையேனும் கூறவில்லை. இந்த விடயத்தில் சுதந்திரக்கட்சி தனது இலச்சினையைப் பயன்படுத்தியிருக்கலாம். தேசிய இலச்சினை இதற்குப் பயன்படுத்துவதை நாம் ஆட்சேபிக்கிறோம். இதைப்பற்றிக்கூட அவர்கள் எம்மிடம் கூறவில்லை.

- இவ்வாறு ரில்வின் சில்வா மேலும் கூறினார்.

(எ-க)

# பல்கலை ஊழியர் நேற்று அடையாள வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜூன்17

இரண்டு அம்சக்கோரிக்கைகளை முன்வைதது யாழ். பல்கலைக்கழக ஊழியா சஙகத்தினர் நேற்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களினதும் சம்பள முரண்பாடுகள் 01.01.2004ஆம் திகதியிலிருந்து சீராக்கம் செய்யப்பட்டு அத்திகதியிலிருந்து புதிய சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்றும் -

பல்கலைக்கழக சேவையில் 09.03.1997ஆம திகதிக்குப் பின்னர் இணைந்து கொண்ட சகல ஊழியர்களுக்கும் மாதாந்த இழப்பீட்டுப்படியை அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் - கோரியே அடையாள வேலைநிறுத்தம் நடத்தப்பட்டதாக ஊழியர்கள் தரப்பில் கூறப்பட்டது. பாதுகாப்பு, நீர்விநியோகம் மற்றும் பரீட்சை கடமைகளில் ஈடுபடும் ஊழியர்களைத்தவிர ஏனையோர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (எ-7-86)

# மனித உரிமை அலுவலகத்துக்கு புதிய இணைப்பதிகாரி நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூன்17



மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திற்கு புதிய இணைப்பதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவில் இணைப்பதிகாரியாக கடமையாற்றிய ரோகித பிரியதர்சன யாழ்.அலுவலகத்தின் இணைப்பதிகாரியாக நேற்றுப் பதவியேற்றுக் கொண்டார்.

இவ்வலுவலகத்தில் முன்னர் கடமையாற்றிய ருவான் சந்திரசேகர கனடாவிலுள்ள மனித உரிமை அலுவலகத்திற்கு மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள் கையாளும் பதவிக்கு நியமனம் பெற்றுச்சென்றுள்ளார். இதனையடுத்தே புதியவர் இங்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஒ-13)

# நாய்களுக்கு தடுப்பூசி

அச்சுவேலி,ஜூன்17

அச்சுவேலிப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 10.30 மணிவரை பத்தமேனி ஞானவைரவர் சனசமூக நிலையத்திலும் -

முற்பகல் 11 மணிமுதல் 12 மணிவரை தோப்பு கலைமகள் சனசமூக நிலையத்திலும் -

பிற்பகல் ஒரு மணிமுதல் 2.30 மணிவரை அச்சுவேலி தெற்கு, சிவசக்தி கோயிலடியிலும் - தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக பிரதேசசபை உப அலுவலகப் பொறுப்பதிகாரி எஸ்.மாணிக்கவாசகர் தெரிவித்தார். (ஒ-11-202)

# நாட்டுப்பற்றாளர் சாவு

யாழ்ப்பாணம்,ஜூன்17

நாட்டுப்பற்றாளர் ஒருவர் சுகயீனம் காரணமாக 16.06.2005 அன்று சாவடைந்துள்ளார்.

துன்னாலை தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த பொன்னையா சிவகாந்தன் என்பவரே இவ்வாறு சாவடைந்தவர் ஆவார். (எ-ரி)

# கலாபூஷணம் இரத்தினத்தின் நினைவஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்17

சோக சோபித சொர்ணக் கவிக்குயில் அரியாலை வி.கே.இரத்தினத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ் மயில் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், நினைவுச்சுடர் ஏற்றல், உருவப்படத்திற்கு மாலையிடல் என்பன இடம்பெறும்.

நினைவஞ்சலி உரைகளை பேராசிரியர் சு.மோகனதாஸ், கலாநிதி அ.சண்முகதாஸ், நடிககலாமணி வ.செல்வரத்தினம் நா.விமலநாதன், கலாநிதி த.கலாமணி, சி.சிவதாசன், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, கவிஞர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் நிகழ்த்துவர். (எ-204-30)

# சுனாமி பாதித்த நாகர்கோவில் மாணவர் சுற்றுலா செல்வர்

ஆழிப்பேரலையால் பதிக்கப்பட்ட மாணவர்களின் நலன்கருதி செயல்திறன் அரங்க இயக்கம் சுற்றுலா ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது.

சிறுவர்களின் அறிவு விருத்தியை நோக்கமாகக் கொண்டு இந்தச் சுற்றுலா ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது என்றும் -

நாளை சனிக்கிழமை நாகர்கோவில் மகா வித்தியாலத்தைச் சேர்ந்த 100 மாணவர்கள் யாழ். மாவட்டத்தில் பிரசித்திபெற்ற இடங்களுக்குச் சுற்றுலா மேற்கொள்வர் என்றும் -

செயல்திறன் அரங்க இயக்கம் விடுத்த செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளது. (எ)

# பேரினவாதிகளைக் கண்டித்து கைதடியில் நேற்று உண்ணாவிரதம்

பேரினவாதிகளின் அராஜகப் போக்கைக் கண்டித்து நேற்று இரண்டாவது நாளாக தென்மராட்சி - கைதடிச் சந்தியில் அடையாள உண்ணாவிரதப் போராட்டமும் பொதுக்கூட்டமும் இடம்பெற்றன.

தென்மராட்சி வர்த்தகர் சங்கங்களின் ஒன்றியம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

இந்நிகழ்வுகளில் வர்த்தகர்கள், தேசிய எழுச்சிப் பேரவையினர், பொது அமைப்புகளின பிரதிநிதிகள். பாடசாலை மாணவர்கள் எனப் பல நூற்றுக்கணக்கானோரும் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவநேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் பங்கேற்றனர்.

ஏழு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கும் வெளிநாடுகளின் தூதரகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.

இதற்கிடையில், இந்த நிகழ்வுகள் இடம்பெற்ற அதே நேரத்தில் பெரும் எண்ணிக்கையான படையினரும் பொலீஸாரும் கைதடிச் சந்தியில் காணப்பட்டனர். (எ-75-86-31-117)

# நலன்புரி முகாமில் வசிப்போருக்கு சமையல் உபகரணங்கள்

வலி.தென்மேற்கு,ஜூன்17

வலி.தென்மேற்குப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் வசித்துவரும் குடும்பங்களுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரால் சமையல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கான விவரங்கள் வலி. தென்மேற்குப் பிரதேச செயலகத்தின் மூலம் தற்போது திரட்டப்பட்டு வருகின்றன.

மேற்படி பிரதேச செயலகப் பிரிவில் 12 பதிவுசெய்யப்பட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களும் இரண்டு பதிவுசெய்யப்படாத இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களும் தற்போது இயங்கிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(எ-135)

# பின்லேடனின் உடல் நிலை ஆரோக்கியமாகவே உள்ளது

## தலிபான் தளபதி தெரிவிப்பு



இஸ்லாமாபாத்ஜூன்17

ஒஸாமா பின்லேடன உடல் நலமில்லாமல் இருக்கிறார் என்ற செய்தி உண்மையானதல்ல. அவர் ஆரோக்கியத்துடன் இருக்கிறார். தலிபான்களின் தலைவர் முல்லா முகமது ஓமரும் நன்றாக இருக்கிறார். ஓமர் ஆப்கானிஸ்தானிலுள்ள தலிபான்களுக்கு நேரடியாகவே உத்தரவு பிறப்பித்து வருகிறார் எனத் தலிபான் தளபதி முல்லா அக்தார் உஸ்மானி அறிவித்துள்ளார். தலிபான் கிளர்ச்சியாளர்களின் 10 முக்கிய தலைவர்களில் ஒருவரான முல்லா அக்தர் உஸ்மான், பாகிஸ் தான் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே மேற கண்டவாறு கூறியுள்ளார்.

கடவுளின் அருளால் ஒஸாமா பின்லேடன் நன்றாக இருக்கிறார். அவர் உடல் நலத்தில் எந்தக் குறையுமில்லை. நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறார். தலிபான் தலைவர் முல்லா முகம்மது ஓமரும் நன்றாக இருக்கிறார். அவர் இன்றும் எங்கள் தளபதியே. நாங்கள் அவரிடமிருந்து நேரடியாக உத்தரவுகளைப் பெற்றுச் செயற்பட்டுவருகிறோம் ஓமர் உடல் நலம் பாதித்துள்ளார் என்ற செய்தியை எங்களின் எதிரிகள் பரப்பிவருகின்றனர் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஒஸாமாவின் மறைவிடம் குறித்த கேள்விக்குப் பதில் சொல்ல மறுத்த அவரிடம் உங்களுக்கும் உத்தரவுகள் அனைத்தும் ஓமரிடம் இருந்துதான் வருகின்றன என்பதை உங்களால் எப்படி உறுதியாகச் சொல்லமுடிகிறது என்று கேட்டபோது நான் ஓமரின் குரலைப் பலமுறை கேட்டிருக்கிறேன். அவர் குரல் எனக்கு நன்றாகத் தெரியும். எனவே, எங்களுக்கு உத்தரவிடுவது ஓமர்தான். அவர் இன்னும் உயிருடன் இருக்கிறர் என்று கூறினார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் எல்லா இடங்களிலும் இருக்கின்றனர். ஒரு சில இடங்கள் தவிரப் பல இடங்கள் எங்கள் அதிகாரத்தின் கீழ்தான் உள்ளன. குறிப்பாக கிழக்கு, தெற்கு மற்றும் தென்மேற்கு மாகாணங்கள் எங்கள் ஆதிக்கத்தின் கீழுள்ளன - என்றும் அவர் கூறினார்.

10இற்கும் மேற்பட்ட தலிபான்களுடன் வந்திருந்த அக்தார் உஸ்மானி பேட்டியின்போது கறுப்புத் துணியால் முகத்தை மறைத்திருந்தார் என்றும் - அவரது இரு புறங்களிலும் ஆயுதம் ஏந்திய தலிபான்கள் நின்றிருந்தனர் என்றும் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

## இந்திய சினிமாவில் சிகரெட் காட்சிக்கு காந்தி பிறந்ததினம்முதல் தடை

டில்லி,ஜூன்17

திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இனி புகை பிடிப்பது உள்ளிட்ட புகையிலைப் பொருள்களைப் பயன்படுத்துவது போன்ற காட்சிகள் இடம்பெறக்கூடாது என்றும்- மகாத்மா காந்தியின் பிறந்ததினமான எதிர் வரும் ஒக்டோபர் 2 ஆம் திகதி முதல் இத் தடை நடைமுறைக்கு வருவதாகவும் - இந்திய அரசு அறிவித்துள்ளது.

இந்திய சுகாதாரத் துறை அமைச்சர் அன்பு மணியுடன் நடைபெற்ற அரை மணிநேர சந்திப்புக்குப் பிறகு இந்தியத் தகவல், ஒலிபரபுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்ப்பால்ரெட்டி நேற்றுமுன்தினம் இதனை அறிவித்தார்.

இது தொடர்பாக விரிவாக விவாதித்தோம். எந்த முறையில் இதை அமுல்படுத்துவது என்பது தொடர்பாகப் புரிந்துணர்வு எட்டப்பட்டது என்றார் ஜெய்ப்பால் ரெட்டி. (ஓ)

## புருணையில் குப்பை கொட்டிய இந்தியர்கள் பிடிபட்டனர்

புருணை,ஜூன்17

புருணை நாட்டில் பொது இடத்தில் சட்டத்துக்குப் புறம்பாகக் குப்பை கொட்டி அசுத்தம் செய்த இரண்டு இந்தியர்கள் உட்படப் 10 பேர் பிடிபட்டுள்ளனர்.

பிடிபட்டவர்களில் இரண்டு பேர் இந்தியர்கள், இரண்டு பேர் வங்கதேசத்தினர், எஞ்சிய 6 பேரும் இந்தோனேசியாவைச் சேர்ந்தவர்கள். பாண்டார் செரி நகரில் உள்ள பஸ் மற்றும் வாடகைக் கார் நிறுத்தும் அருகில் குப்பை கொட்டி அசுத்தம் செய்ததால் இவர்களைப் பிடித்தோம் என்று சட்ட அதிகாரி முகம்மது நுார் முகம்மது ரயின் தெரிவித்தார்.

புருணையில் பொது இடங்களைக் தூய்மையாகப் பராமரிக்கும் வகையில் தெருக்களிலும் சாலைகளிலும் சிகரெட் துண்டுகள், குப்பை போன்றவற்றைப் போடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இத்தடை உத்தரவை மீறுபவர்களுக்கு ரூபா 26 ஆயிரம் அபராதம் விதிக்கும் சட்டம் கடந்த மே15 இல் நடைமுறைக்கு வந்தது.

இச்சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு முதன் முறையாக தண்டனைக்கு ஆளாகியிருப்பது இவர்கள்தான். (ஓ)

## சர்ச்சைகளைக் கிளப்பியுள்ள சோனியாவின் ரஷ்யப்பயணம்

புதுடில்லி,ஜூன்17

இந்திய காங்கிரஸ் கட்சித்தலைவி சோனியா காந்தி, தனது ரஷ்யப் பயணத்துக்குத் தனியார் விமானத்தைப் பயன்படுத்தியமை சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை சோனியா ரஷ்யாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். அப்போது இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தனது கட்சித் தலைவியை விமான நிலையத்துக்குச் சென்று வழியனுப்பிவைத்தார்.



காங்கிரஸ் கட்சித் தலைவி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆகிய பதவிகளை மட்டுமே வகிக்கும் சோனியாவைப் பிரதமரான மன்மோகன் சிங் விமான நிலையம் சென்று வழியனுப்பியமை மரபுமீறிய செயல் என்று எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

இந்த நிலையில் 'ரிலையன்ஸ்' என்ற தனியார் விமானத்தில் சோனியா ரஷ்யா சென்றமை மற்றொரு பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. காங்கிரஸ் கட்சியுடன் 'ரிலையன்ஸ்' குடும்பத்தினர் எப்போதும் நெருக்கமானவர்கள். அதேசமயம் தொலைத்தொடர்புத் துறையில் செய்த முறைகேடுகள், மும்பைப் பங்குச் சந்தை தில்லுமுல்லுகள், ஆவண மோசடி என ரிலையன்ஸ் குழுமத்தின் மீதான பல குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இந்த நிலையில் ரிலையன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானத்தைச் சோனியா பயன்படுத்தியமை சர்ச்சையை உருவாக்கியுள்ளது. (ஓ)



ரஷ்யா சென்றுள்ள இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா மொஸ்கோ அருங்காட்சியகத்தைப் பார்வையிடுகிறார்.

## பாக். இற்கு போர் விமானங்களை விற்க அமெ.நாடாளுமன்ற உறுப்பினர் எதிர்ப்பு

வாஷிங்ரன்,ஜூன்17

அணுவாயுதங்களை ஏற்றிச்செல்லக்கூடிய அளவு சக்தி படைத்த எப்-16 ரகப் போர்விமானங்களை அமெரிக்கா பாகிஸ்தானுக்கு விற்கக்கூடாது என்று அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச உறவை நிலைக்கச் செய்ய இத்திட்டம் குறித்துப் பரிசீலணை செய்யுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாகிஸ்தானுக்கு எப்-16 ரகப் போர்விமானங்களை விற்பதற்கு விதிக்கப்பட்ட தடையை அமெரிக்கா சமீபத்தில் ரத்துச்செய்தது. இதைத் தொடர்ந்து எப்-16 ரகப் போர்விமானங்களை விற்பதற்கு அமெரிக்கா முன்வந்துள்ளது.

இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்த ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள், குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் ஆகியோர் கூறியதாவது:-

ஏற்கனவே அமெரிக்கா விற்ற எப்-104 ரகப் போர் விமானங்களை இந்தியாவுக்கு எதிராகப் பாகிஸ்தான் பயன்படுத்தியது. அத்தோடு, அணுவாயுத கள்ளச் சந்தை உருவாகவும் பாகிஸ்தான் காரணமாக இருந்துள்ளது. பாகிஸ்தானில் ஜனநாயகம் கிடையாது. சட்டப்படியான ஆட்சி கிடையாது. மனித உரிமைக்குப் பாதுகாப்புக் கிடையாது.

இந்த நிலையில் 'எப்-16' ரகப் போர் விமானங்களைப் பாகிஸ்தானுக்கு விற்றால், அது நம்மை நாமே எமாற்றிக்கொள்வது ஆகும். - என்றார்.

## 2030இல் செவ்வாய்க் கிரகத்திற்கு விண்கலம் அனுப்ப நாஸா திட்டம்

வாஷிங்ரன்,ஜூன்17

2030ஆம் ஆண்டில் விண்வெளி வீரர்கள் அடங்கிய விண்கலத்தை செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்ப நாஸா விண்வெளி ஆய்வு மையம் திட்டமிட்டுள்ளது என நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

நாஸா விண்வெளி ஆய்வு மையம் ரோவர் விண்கலத்தை 2005,2009,2011ஆம் ஆண்டில் செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளது. விண்வெளி வீரர்கள் அடங்கிய விண்கலம் வரும் 2015ஆம் ஆண்டில் சந்திரனுக்கு அனுப்பப்படும்.

இதுதவிர, வரும் 2030ஆம் ஆண்டில் விண்வெளி வீரர்கள் அடங்கிய விண்கலத்தைச் செவ்வாய்க்கிரகத்துக்கு அனுப்ப முடிவுசெய்யப்பட்டுள்ளது.

சந்திரன் மற்றும் செவ்வாய்க் கிரகங்களில் மேற்கொள்ளப்படும் இதுபோன்ற நடவடிக்கைகளால் விண்வெளி கப்பல் மற்றும் விண்வெளி வீரர்களுக்குத் தேவையான உயிர்காக்கும் கருவிகளை மேம்படுத்தமுடியும்.

செவ்வாய்க்கிரகத்துக்கு அனுப்பப்படும் விண்கலத்தின்மூலம் கிரகத்தில் உள்ள சுற்றுச்சூழல் நடவடிக்கைகளைக் கண்டறிய முடியும்.

கொலம்பிய விண்கலம் வெடித்துச் சிதறிய துரத்தில் இருந்து கற்ற பாடம்மூலம் "விண்கலத்துறையில் அடிமட்ட ஊழியர்களில் இருந்து மேலதிகாரிகள் வரையில் செய்தித் தொடர்பை அதிகரிக்க வேண்டும்'' என்பது தெளிவாகிறது - என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.




## அமெரிக்காவில் நேற்று நிலநடுக்கம்!

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் நேற்று ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பின்னர் இந்த எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டது.

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் நேற்று 7 ரிச்டர் அளவுக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் மெக்சிக்கோ, கனடாவைத் தொடர்ந்து கலிபோர்னியா கடலோரப் பகுதியைச் சுனாமி தாக்கும் அபாயம் உள்ளதாக அதிகாரிகள் எச்சரித்தனர்.

இதனால், கலிபோர்னியாவில் பதற்றநிலை காணப்பட்டது. சில மணிநேரங்களில் இந்தச் சுனாமி எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டது. நேற்றைய நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து உடனடியாகத் தகவல் இல்லை. (ஓ)

## சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்க ஜி8 மாநாட்டில் நேற்றுப் பேச்சுகள்

லண்டன்,ஜூன்17

நேற்று ஆரம்பமான ஜி8 மாநாட்டில் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிரான திட்டத்திற்கு அங்கீகாரம் பெறுவது குறித்து பேச்சுக்கள் நடத்தியதாக பிரிட்டன் அறிவித்துள்ளது.

ஜி8 மாநாட்டில் கலந்து கொண்டுள்ள நிதிய மைச்சர்கள் இந்தத் திட்டத்தை இந்த ஆண்டுக்குள் நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுத்துள்ளனர் என பிரிட்டன் உள்துறை செயலாளர் சார்ள்ஸ் கிளார்க் தெரிவித்துள்ளார்.

இம்மாநாட்டில் இத்திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்படும் பட்சத்தில் உடன் அமுல்படுத்தப்படும் என்றும் -

தீவிரவாத அமைப்புகள், குற்றச்செயல்கள் என்பவற்றுக்கு சிறுவர்களை பயன்படுத்துவதைத் தடுப்பதே இதன் மற்றுமொரு நோக்கம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சூடான் போன்ற உள்நாட்டு கலவரமுள்ள நாடுகளில் சிறுவர்கள் யுத்தங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி

## விண்ணப்பம் கோரல்

2005ஆடி மாதம் ஆரம்பமாக இருக்கும் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண பிரிவு பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவத்தினையும் விவரத்தினையும் ரூபா 10/- செலுத்திக் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: **29.06.2005**

**அதிபர்**

51, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். (C/43468)(21-14-15-24)

## வேலையாள்கள் தேவை

சுன்னாகம் நகரில் இயங்கும் சில்லறை வர்த்தக வியாபார நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை. முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:

**ஸ்ரீ கணேசா ஸ்ரோர்ஸ்**
No: 16, K.K.S. வீதி,
சுன்னாகம்.
(36646) (21-14-15-24)

## கேள்வி அறிவித்தல்

### அரசாங்க அதிபர் அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்

1. கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரினால் 07-07-2005 புதன்கிழமை காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் அரச அதிபர் அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்குக் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு அல்லது அதற்கு மேல் பதிவுசெய்யப்பட்டுள்ள, ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோர் ஆவர்.

கேள்விகளைச் சமர்ப்பிக்கும்போது கேள்விப்பத்திரங்களுடன் பெறுமதி சேர் வரி (VAT) பதிவுச் சான்றிதழ் புகைப்படப் பிரதியைச் சமர்ப்பிக்கவேண்டும். VAT பதிவு இல்லாத விடத்தில் பதிவுசெய்யப்படவில்லை என்பதற்கான கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும். இல்லையேல் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

4. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட, செய்யப்படுகின்ற வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப்புத்தகத்தை மாகாணக் கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளரிடம் சமர்ப்பித்து, தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். கேள்வி வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டைப்பெற்று, கேள்விப்பத்திரங்களை 04-07-2005 அன்று 3.00 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படாத (கேள்விப்பணம்) | ICTAD பதிவுத்தரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப்பணம் |
|---|---|---|---|
| 1. யாழ். கால்நடை அபிவிருத்திசுகாதாரத் திணைக்கள பிராந்திய அலுவலகம் நிர்மாணித்தல் | 1,000/= | M7 | 48,000/= |

கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன், ஏதும் மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், மாகாணக் கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடம் இருந்து வேலை நாள்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.
17.06.2005. (சி-43476)(26-14-15-24)

**கே.கணேஷ்,**
அரச அதிபர், மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

## காணவில்லை

எனக்குச் சொந்தமான 500 - 8908 இலக்க Honda MD 90 சிவப்பு நிற மோட்டார் சைக்கிள் கடந்த 07.06.2005 அன்று காணாமற் போய்விட்டது.

செசி இலக்கம் - MD 90 - 2011015
என்ஜின் இலக்கம் - MD 90E - 2011004

இதனைக் கண்டுபிடித்து, சரியான தகவல் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: **செ.செல்வநாதன்**
செல்வா தச்சுத் தொழிற்சாலை, 117. கனகரட்ணம் வீதி. பலாலி வீதி, திருநெல்வேலி. (36643)(21-14-15-24) அரியாலை.

## சிங்களம்

தமிழ் மூலம்

**480 பக்கங்கள்**
**ரூபா : 540/-**

வெளிவந்துவிட்டது

எமது நிறுவனத்தின் தமிழ்மொழி மூலமான சிங்களப் பாடநூலுக்கான முன்பதிவினை மேற்கொண்டோர் நேரடியாக எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விரைவில் ஜேர்மன் மற்றும் பிரெஞ்சு புத்தகங்கள்......

புதிய பதிவுகளை மேற்கொள்வோருக்கு **சலுகைக் கட்டணம் ரூ. 400/-** அடுத்த மூன்று நாள்களுக்கு மட்டுமே.

SAAMSTECH,
841, HOSPITAL RD , JAFFNA
(36664)

## VACANCY

**LECTURER - ENGLISH**

Work : Mon - Fri, 9.00 to 5.00
Salary Negotiable (36645)

**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna.

## சேவை நலன் பாராட்டுவிழா

யாழ்ப்பாணம்ஜூன்17

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஓய்வு பெற்ற அதிபர்களான நா.சண்முகரத்தினம், திருமதி ஞா.திலகராசா, திருமதி அ.குணசிங்கம் ஆகியோருக்குச் சேவை நலன் பாராட்டு விழா இடம்பெறவுள்ளது.

(ஒ-203)

## C.B.COMPUTER ACADEMY

### Kondavil, Jaffna.

### Course Details

| Se. No. | Courses | Course Fee | Discount 50% | Duration | Time | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Week | | Weekend | |
| | | | | | a.m. | p.m. | a.m. | p.m. |
| 01 | Diploma in M.S. Office | 3,000/= | 1,500/= | 3 Months | 9 | 4,6 | 9 | 3 |
| 02 | Diploma in Desktop Publishing | 3,000/= | 1,500/= | 3 Months | 9 | 4,6 | 9 | 3 |
| 03 | Diploma in Hardware Technology | 3,000/= | 1,500/= | 4 Months | - | 7 | 9.30 | 8 |
| 04 | Internet and E-mail | 1,500/= | 750/= | 4 Months | 10 | 5 | 8.30 | 4 |
| 05 | Visual Basic Programming | 4,000/= | 2,000/= | 3 Months | - | 5 | 8 | 6 |
| 06 | Diploma in Web Design | 4,000/= | 2,000/= | 3 Months | 10.30 | 4 | 10 | 5 |
| 07 | A/L GIT Program | 40/= (per hour) | 20/= | - | - | 4 | 8 | 5 |
| 08 | Children Program | 60/= (per hour) | 30/= | - | - | 4 | 9 | 3 |

### SPECIAL OFFER FOR SCHOOL STUDENTS

| Levels | Age Level | Duration (Hours) 03 Months | Monthly Fees |
|---|---|---|---|
| Level - 1 | 7 to 8 | 2 hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 2 | 9+ | 2 hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 3 | 10+ | 2 hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 4 | 11+ | 2 hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 5 | 12+ | 2 hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 6 | 13+ | 2 hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 7 | 14+ | 2 hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 8 | 15+ | 2 hrs x 2 days per week | Rs. 500/= |

- கட்டணச் சலுகை (18/06/2005 - 19/07/2005) மட்டுமே.
- எமது நிறுவனம்தான் புதியது. ஆனால், எமது விரிவுரையாளர்கள் புதியவர்கள் அல்லர். அவர்கள் பல வருடங்களாகக் கணனித்துறையில் ஆற்றல் அனுபவம் மிக்கவர்கள்.
- இங்குள்ள பயிற்றுவிப்பாளர்கள் நன்கு பயிற்றப்பட்டவர்கள்.
- அனுமதிக்கட்டணம் நீங்கலாக Course Feeஇல் 50% கட்டணச் சலுகை சொற்ப நாள்களுக்கு மட்டுமே.
- விரிவுரைகள் உங்கள் வசதிக்கேற்ப நடத்தப்படும்.
- கட்டணம் பகுதிபகுதியாகச் செலுத்த அனுமதிக்கப்படும்.
- மேலதிக விவரங்களுக்கு 021 4590291 என்ற இலக்கத்துடன் அல்லது நேரில் தொடர்புகொள்ளவும்.

முகாமைப்பணிப்பாளர்
**R.M.நாகலிங்கம்.**

பணிப்பாளர்
**K.R.சுகுமார்.**

(சி-43467) (24-14-15)

யாழ்.மக்களின் அமோக ஆதரவுடன்

## நல்லூரில் தொடர்மாடி வீடுகள்

### உத்தியோகத்தர்கள் குடியிருப்புக்கள்


★ "வீடு" என்ற சொல்லுக்கே குறைந்தது 70இலட்சம் தேவைப்படும் இக்காலகட்டத்தில் ----


★ வெறுங்காணிகளே விற்பனைக்கில்லாத நல்லூர்ப் பிரதேசத்தில் ----

★ வெறும் 28 இலட்சத்துடன் 950 - 1000 சதுர அடி கொண்ட, Tiles பதிக்கப்பட்ட,வாகனத்தரிப்பிடங்கள் கொண்ட தனித்தனி மின்சார, தண்ணீர் வசதி கொண்ட, ஆலயத்தை அண்மித்த ரம்மியமான சூழலில் அழகிய அளவானவீடு ஒன்று உங்களிற்காகக் காத்திருக்கின்றது.

★ உறுதியான உறுதிப்பத்திரங்கள் வழங்குகின்றோம்.

**உத்தேச வரைபடம்**





☞ எதிர்வரும் (22/06/2005) புதன்கிழமையன்று வாங்குபவர்களை இறுதியாகத் தீர்மானிக்கவுள்ளோம். அதன்பின்னர் எவ்வித விசாரணைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

## தயா ஏஜென்சி

இல. 3, நவீன சந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம்.

★ இரவு 7 மணிக்குப்பின் 0777 - 283795தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம்.

(C/43412)(53)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## குழப்பத்தின் பின்னணியில்....!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. 'தேன்நிலவு' சுமார் ஒன்றரை வருட காலத்தில் முடிவுக்கு வந்துவிட்டது. 'மணமுறிவு' நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டு விட்டது. அதற்கு முன்னரே மாறிமாறி சேறு வாரிவீசும் கைங்கரியத்தை இரு தரப்பினரும் ஆரம்பித்துவிட்டனர். அது இனி இன்னும் வீச்சாக இருக்கும; சூடு பிடிக்கும்.

ஆறு வருட ஆட்சிக்கு அறுதிப் பெரும்பான்மையோடு தெரிவான ஐக்கிய தேசிய முன்னணி அரசை, நேர காலத்தோடு - நான்கு வருடங்கள் முந்தியே - வீட்டுக்கு அனுப்பிவிட்டு, ஆட்சிக் கட்டைப் பிடிப்பதற்குத் திட்டம் தீட்டிய ஜனாதிபதி குமாரதுங்க, அதற்கு ஜே.வீ.பியை வகையாகப் பயன்படுத்த எண்ணினார். தமது திட்டப்படி ஜே.வி.பியின் முதுகில் ஏறி, தட்டுத்தடுமாறி ஆட்சியையும் பிடித்தார். ஆனால், ஜே.வி. பீயோவேறு விதமாகச் சிந்தித்தது. ஜனாதிபதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குரிய செல்வாக்கை நாசூக்காகப் பயன்படுத்தித் தனது எம்.பிக்கள் எண்ணிக்கையை நாடாளுமன்றத்தில் வலுப்படுத்த அது வலை பின்னியது.

ஸ்ரீ.ல.சு.க.-ஜே.வி.பி. 'திருமணம்' நடந்தேறியது. கூட்டமைப்பின் நோக்கம் நல்ல இல்வாழ்க்கை (நல்ல ஆட்சி) நடத்துவதாக இருக்கவில்லை.

ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பது சு.கவின் எண்ணமாகவும், தனது நாடாளுமன்ற வலுவை அதிகரிப்பது ஜே.வி.பியின் திட்டமாகவும் இருந்தது. இருவருமே தத்தமது இலக்கை - நோக்கை - அடைந்துகொண்டார்கள்.

நாட்டின் தேசியப் பிணக்கான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்திலேயே தமக்குள் ஒத்திசைவு இல்லை என்பதைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு, அதை எழுத்தில் பதிந்து வைத்துவிட்டு, ஒப்புக்குக் கூட்டமைத்து, ஆடசியைப் பிடித்திருக்கும் இந்த அணியினால் இனப்பிரச்சினையின் அடிப்படைகளைக் கூடத் தெளிவாக - ஒத்திசைந்து - புரிந்து கொள்ள முடியாது என்பதையும் -

தீர்வு முயற்சியில் கொள்கை முரண்பாடு கொண்ட கட்சிகளின் இக்கூட்டமைப்பால் அமைதித் தீர்வுக்கான முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் கிஞ்சித்தும் முன்நகர்த்த முடியாது என்பதையும் -

இப்பத்தியில் திரும்பத் திரும்ப - ஆணி அடிப்பது போல் - அறைந்து குறிப்பிட்டு வந்தோம்.

இவ்வளவு குறுகிய காலத்தில் எமது கூற்று நிருபனமாகியிருக்கின்றது.

அறுதிப் பெரும்பான்மையோடு ஆட்சியில் இருந்த அரசை, குறுகிய அரசியல் லாபங்களுக்காக - சொந்தக் கட்சி நலனுக்காக - கலைத்து வீட்டுக்கு அனுப்பிய ஜனாதிபதி, இன்று தொங்கு நாடாளுமன்றம் ஒன்றை - அறுதிப் பெரும்பான்மை பெறாத அரசு ஒன்றை -அதன் மூலம் உருவாக்கியிருக்கின்றார்.

அதுமட்டுமல்ல, முன்னைய ஆட்சியைக்கலைத்து, பௌத்த - சிங்களப் பேரினவாதிகளைக் கூட்டுச் சேர்த்து, அவர்களின் வலிமையை நாடாளுமன்றில் உயர்த்திவிட்டு, அரசியல் ஸ்திரமற்ற நிலை ஒன்றையும் நாட்டில் ஏற்படுத்தியிருக்கின்றார்.

நிறைவேற்று அதிகாரமும், படை - பாதுகாப்பு அதிகாரங்களும் ஜனாதிபதி சந்திரிகாவிடம் குவிந்திருக்கின்றன. மறுபுறத்தில் சட்டமாக்கும் அதிகாரம் கொண்ட நாடாளுமன்றம் ஸ்திரமற்ற - அறுதிப் பெரும்பான்மையற்ற - பலவீனமான - தொங்கு நிலைக்கு வந்திருக்கின்றது. இது மிக ஆபத்தான நிலைமை.

ஜே.வி.பியின் பிடிவாதத்தால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது போல ஜனாதிபதியும், அவரது கட்சிக்காரர்களும் வெளியே காட்டிக் கொண்டாலும் - உலகம் கூட அப்படி நம்பினாலும் - இது ஜனாதிபதி தரப்பினால் விரும்பி வரவழைக்கப்பட்ட ஒரு நிலைமைதான் என்பதே உண்மை. இந்த நிலைமையை ஜனாதிபதி ஏற்படுத்தியதற்குக் காரணங்கள் இரண்டு.

ஒன்று - நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியின் அந்தத்தில் நிற்கும் ஜனாதிபதி குமாரதுங்க, ஆட்சி அதிகாரத்தில் தாம் நீடிப்பதற்கு வழிசெய்ய வேண்டும். அதைச் செய்வதற்கு அவருக்கு இரண்டு வழிகளே உள்ளன. ஒன்றில நாடாளுமன்றில் அதீத பலத்தை வைத்துக்கொண்டு அதன் மூலம் அரசமைப்பை மாற்றி தம்மைப் பதவியில் வைத்திருக்க வேண்டும். ஆனால், அது சாத்தியமற்றது என்பது தெளிவு, அப்படி இல்லை என்றால், நாடாளுமன்றத்தை ஸ்திரமற்றதாக்க நாட்டைக் குழப்பி, நாடாளுமன்றின் அதிகாரத்தையும் தாம் கையிலெடுத்து, தமக்குரிய வழிவகைகளைப் பார்த்துக்கொளள வேண்டும் அதற்கான அத்திபாரமே இப்போது போடப்படுவதாகக் கொள்ளலாம்.

இன்றைய நிலைமையை ஜனாதிபதி உருவாக்கியதற்கு இரண்டாது காரணம், நாட்டில் மீண்டும் யுத்தம் வெடிக்கலாம் என்ற அச்சநிலை அவருக்கு ஏற்பட்டிருப்பதுதான்.

சமாதான முயற்சிகளில் முன்னர் ஈடுபட்டிருந்த ஐ.தே.மு. அரசைக் கலைத்து, பேரினவாதிகளுடன் கூட்டுச்சேர்ந்து அரசு அமைத்ததன் மூலம் அமைதி முயற்சிகளை அடியோடு தகர்த்துவிட்டார் சந்திரிகா. காலம் வெறுமனே இழுபட்டு, சம்பந்தப்பட்ட தரப்புகளிடையே நம்பிக்கையீனம் தீவிரமடைந்து, எப்போது போர் வெடிக்கும் என்ற சூழல் ஏற்பட்டுள்ளது. அத்தகைய சூழ்நிலை உருவானதற்கும் ஜனாதிபதியின் போக்கும், நடவடிக்கைகளும், உதாசீனமான செயற்பாடுகளும்தான் கால்கோள் இட்டன.

அந்த யுத்த நிலையிலிருந்து தம்மையும் நாட்டையும் விடுவிப்பதாயின், இப்போதும் ஒரு நாடகம் ஆட வேண்டிய நிலை அவருக்கு.

அமைதி முயற்சிகளுக்கான களநிலையை ஏற்படுத்துவதற்காக, சிங்கள - பௌத்த பேரினவாதிகளுடனான தமது உறவை - தனது அரசைப் பறிகொடுக்கும் ஆபத்துக்கு மத்தியிலும் - துண்டித்து, அமைதி விரும்பியாகத் தன்னை சர்வதேச சமூகத்துக்கு முன்னிலைப்படுத்துவதன் மூலமும், வரப்போகும் யுத்த நெருக்கடியைத் தவிர்க்கலாம் அல்லது சமாளிக்கலாம் அல்லது அந்த நெருக்கடியின்போது சர்வதேச ஆதரவை முன்னர் போல தன் பக்கம் வைத்துக்கொள்ளலாம் என ஜனாதிபத கருதுகின்றார்.

சமாதான முயற்சிகளுக்கான வாய்ப்புகளைக் குழிதோண்டிப் புதைத்த ஜனாதிபதி சந்திரிகா, அதனால் வெடிக்கப் போகும் யுத்தத்தின் பழி தம் மீது விழாமல் தவிர்ப்பதற்காக இப்படி பேரினவாதிகளைத் தனது அணியிலிருந்து துண்டிக்கும் 'ஸ்டனட்' டுகளை லாபகமாக அடிக்கிறார்.

இம்முறையும் சர்வதேச சமூகம் முன்னர் போல ஏமாளியாகி எடுபடுமா என்பதே கேள்வி.

# சேதுசமுத்திரத் திட்டத்தால் பாதிப்பா?
# ஆராய்ந்து அறிக்கையிடக் குழுக்கள்!
## கிளிநொச்சி ஆய்வுப்பட்டறையில் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்17

சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டத்தினால் மன்னார் உட்பட தமிழர் தாயகப் பிரதேசத்தில் பாதிப்புக்கள் ஏதும் ஏற்படுமா என்று ஆராய்வதற்காக வல்லுநர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் உள்ள பொருண்மியம் மதியுரையகத்தில் இடம்பெற்ற சேதுசமுத்திரக் கால்வாய்த்திட்டம் தொடர்பான ஆய்வுப் பட்டறையையடுத்தே இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

இந்த ஆய்வுப்பட்டறைக்குத் துறைசார் வல்லுநர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். தமிழர் தாயகப் பிரதேசத்தில் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்தும் அதன் தாக்கம் குறித்தும் இதில் விரிவாக ஆராயப்பட்டன.

பின்னர் தமிழர் தாயகப் பிரதேசத்திற்கு ஏற்படும் தாக்கம் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காகக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

சூழல் மீன்பிடி, பொருளாதாரம் மற்றும் சமூகவியலும் சட்டங்களும் ஆகிய நான்கு பிரிவுகள் குறித்து ஆராயச் தனித்தனியே குழுக்கள் அமைக்கப்பட்டன. அந்தக் குழுக்களுக்கு ஒவ்வொருவர் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சூழல் குழுவுக்கு யாழ். பல்கலைக்கழக விவசாய பீட விரிவுரையாளர் திருமதி எஸ்.சிவச்சந்திரனும், மீன்பிடியியல் குழுவிற்கு யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறைத் தலைவர் கலாநிதி திருமதி எஸ்.குகநாதனும் பொருளாதாரக் குழுவிற்கு சிரான் பணிப்பாளர் எஸ்.செல்வினும், சமூகவியலும் சட்டங்களுக்குமான குழு விற்கு கிளிநொச்சி அரச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.கேதீஸ்வரனும் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த துறைசார் நிபுணர்களுடன் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இது தொடர்பான இரண்டாவது ஆய்வுப் பட்டறையை ஜூலை மாதம் பிற்பகுதியில் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஒ-7)

# மறியல் போராட்டத்தினால் நேற்று வலி.கிழக்குப் பிரதேச சபை ஸ்தம்பிதம்


கோப்பாய்,ஜூன்17

வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளரின் செயற்பாடுகளைக் கண்டித்து நேற்று நடத்தப்பட்ட மறியல் போராட்டத்தால் மேற்படி பிரதேச சபை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்கள் ஸ்தம்பித்தன.

வட பிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கம் இந்த மறியற்போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது. வலி. கிழக்குப் பிரதேச சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள், ஆயுர்வேத மற்றும் நூலக ஊழியர்கள் இப்போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்தப் போராட்டத்தால் வலி. கிழக்குப் பிரதேச சபை அலுவலகமும் அச்சுவேலி, புத்தூர், உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி ஆகிய இடங்களில் உள்ள உப அலுவலகங்களும் செயற்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தமது போராட்டத்துக்கு நியாயமான தீர்வு கிடைக்காவிட்டால், பொது அமைப்பினர் மற்றும் பொதுமக்களைத் திரட்டிப் போராட்டங்களை முன்னெடுப்பார்கள் என்று வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தலைவர் தெரிவித்தார். (ஒ-180-86)



வலி. கிழக்குப் பிரதேச சபை அலுவலகம் முன்பாக நேற்று மறியல் போராட்டம் இடம்பெற்றபோது... (படம்: கோப்பாய்ச் செய்தியாளர்)

# வடமராட்சி மீனவருக்காக ஏல விற்பனை நிலையங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்17

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பிரதேசத்தில் கடற்றொழிலாளர்களின் வசதிகருதி ஏலவிற்பனை நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத திணைக்களத்தின் உதவிப் பணிபபாளர் க.தர்மலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடலில் இருந்து திரும்பும் கடற்றொழிலாளர்கள் தாம் கொண்டுவரும் கடலுணவு வகைகளை மொத்தமாக விற்பதற்கு வசதியாக ஏல விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

கடந்த வருட இறுதியில் ஏற்பட்ட ஆழிப பேரலை அனர்த்தத்தின்போது அவை அழிந்து போய்விட்டன. அவற்றை மீண்டும் அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

வடமராட்சிக் கடற்கரையோரத்தில் இதற்காக 23 ஏலவிற்பனை நிலையங்கள் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்படவுள்ளன.

தற்போது இதற்காகப் பொருத்தமான இடம் தெரிவு செய்யப்பட்டு அங்கீகாரம் கிடைத்ததும் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்படும் - என்றார் அவர். (ஒ-7)

### நாளை

ஆனி 04
சனிக்கிழமை
18.06.2005
திதி : ஏகாதசி
பிற்பகல் 04.22 வரை
நட்சத்திரம் : சுவாதி
பின்னிரவு 12.55 வரை
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 02.53- 04.23
ராகுகாலம்: 08.53 - 10.23
(யாவும் பழைய நேரப்படி)

# கலாசார விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

வலி.கிழக்கு,ஜூன்17


நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கலாசார விருதுக்காக விண்ணப்பிப்பவர்கள் எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்பு தத்தமது பிரிவு கிராம உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி அனுப்பி வைக்குமாறு நல்லூர்ப் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மகாண சபையினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் - கலாசார விருது பெற விண்ணப்பிப்போர் உடன் தொடர்புகொள்ளுமாறும் -

அவர் மேலும் கேட்டுள்ளார். (ஒ-180)

### உதயவாக்கு

வறுமையில் நிறைவு காண்பவனே மிகப்பெரிய பணக்காரன்.
- கொரியப் பழமொழி



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் செல்லாச்சி அம்மையார் வீதியில் 8 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.ஹரிகரன், 'செல்வமஹால்', N.S.B. Bank முன்பாக சுன்னாகம். T.P. 0779005856.(36623)

இல.57 சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தில் நிலப்பரப்பு 2 குளி 9 கொண்ட ஆதனம் கிணறு, சிறிய வீடு, 2 கடைகளுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி சிறிகாந்தன், 49, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 0777 238297. (36628)

## வீடு, காணி விற்பனைக்கு

பங்களா றோட், மீசாலை தெற்கில் பயன் தரு மரங்கள் உட்பட நன்னீர்க் கிணற்றுடன் 8 பரப்புக் காணியில் அமைந்த பெரிய கல் வீடும், 256 கச்சாய் றோட், சாவகச்சேரியில் முதலாம் கட்டையிலுள்ள வருமானமுள்ள 50 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசித் தீமானிக்கலாம். தொடர்பு: க.தர்மகுலசிங்கம், 21, பொன்னப்பா ஒழுங்கை, யாழ்ப்பாணம். T.P.: 0777 551431 (குறிப்பு நேரில் சந்தித்துப் பேசவும்.) (சி-43465)

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பத்திற்கு நல்ல சூழலில் உள்ள வீடு வாடகைக்குத் தேவை. (யாழ். நகர்ப்புறம் விரும்பத்தக்கது). தொடர்பு: T.P 074 - 4590974. (36603)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 20.06.2005 திங்கட்கிழமை பிற்பகல் தொடக்கம் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம்-தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம், திருநெல்வேலி. முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர் ஆகிய இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். (36569)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அழகான நற்குணமுள்ள பெண்ணிற்கு ஏறக்குறைய 35 வயது நிரம்பிய உயர்பதவி வகிக்கும் மணமகன் தேவை. சீதனம் பேசித் தீர்மானிக்கலாம். குறிப்புடன் தொடர்பு: T.P.: 021 222 6658, 0777 1022 . (36602)

## தவறிவிட்டது

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த செல்வராசா சசிக்குமார் என்பவரின் தேசிய அடையாள அட்டை (861822435V), விசேட அடையாள அட்டை (0903040399) என்பன கல்வியங்காட்டுக்கும் கச்சேரிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0776991898 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (36616)

## காணி விற்பனைக்கு

**கோப்பாய் பிரதேச செயலக அலுவலகத்துக்கு மேற்கு எல்லைப்புறமாக உள்ள 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

தொடர்புகளுக்கு:-

**திருமதி ம.சுப்பிரமணியம்**

கந்தசாமி கோயிலடி,
கோப்பாய் வடக்கு,
(36612) கோப்பாய். (21-11-15)

# தமிழ்நாட்டுக் கட்சிகளின் எதிர்ப்பையும் மீறி இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம்

## புதுடில்லி அதிகாரிகள் திட்டவட்டம்

கொழும்பு,ஜுன் 17

இலங்கை - இந்தியா இடையேயான பாதுகாப்பு ஒப்பந்தம் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்படும என்று இந்திய அரச அதிகாரிகள் கூறியுள்ளனர் எனச் செய்தி நிறுவனங்கள் சில தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் இரு நாடுகளிடையேயும் இப்போது அரசமைப்பு ரீதியில் நடைமுறையில் இல்லையென்றாலும் ஒப்பந்தத்தில் கூறப்படும் பல விடயங்கள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஒப்பந்தம் குறித்தும் இருநாட்டு உயர் அதிகாரிகளும் இறுதி முடிவுகளை மேற்கொண்டு விட்டனர் என்றனர்- புதுடில்லி அதிகாரிகள்.

தற்போது 450 இலங்கை படையினர் மற்றும் பொலஸ் அதிகாரிகளுக்கும் இந்தியாவுக்கு வெளியேவைத்து இந்தியா பயிற்சியளித்து வருகின்றது. அதேபோல் ஆயிரக்கணக்கான இலங்கை இராணுவத்தினருக்கு தற்போது இந்தியாவிலும் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பிட்ட பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு தமிழகத்தின் ம.தி.மு.க.மற்றும் பா.ம.க. போன்ற கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இவை மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசில முக்கிய பங்காளிகளாக உள்ளன.

நடைபெற்ற தமிழக சட்டப்பேரவைத் தேர்தல வரைதான் இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழகத்தில் தேர்தல் நடைபெறவுள்ளது. எனினும், அதனை டிசெம்பரில் நடத்த தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில் பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மதிமுகபொதுச் செயலாளர் வைகோ பிரதமருக்குக் கடிதம் எழுதியமை குறித்து ஆளும் கூட்டணி தலைமைக் கட்சியான பிரதான கட்சியான காங்கிரஸின் பேச்சாளர் அனந்தசர்மா கூறுகையில் -

"கூட்டணி அரசில் இடம்பெற்றுள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் தனது ஆட்சேபனையைக் கூட்டுக் கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே தெரிவிக்கவேண்டும்" - எனக் குறிப்பிட்டார்.

# நாட்டு மக்களுக்கு அரசு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாததே ஜே.வி.பி. வெளியேறக் காரணம்

## ஐ.தே.கட்சி தரும் விளக்கம் இது

கொழும்பு,ஜுன்17

அரசை விட்டு ஜே.வி.பியினர் வெளியேறுவதற்கு பொதுக்கட்டமைப்பு ஒரு காரணமே இல்லை. மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியாமல் போனதாலேயே அவர்கள் இப்படி அரசியல் ஸ்டண்ட் அடித்து வெளியேறுகின்றனர். இதுதான் உண்மை.

- இவ்வாறு கூறுகிறார் ஐ.தே.கவின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க.

அரசின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பியினர் அரசை விட்டு வெளியேறுவது தொடர்பாக ஐ.தே.கவின் கருத்து என்ன என்று கேட்டதற்கே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி தாம் அமைக்கப்போகின்றார் எனக் கூறும் பொதுக்கட்டமைப்பில் என்ன விடயங்கள் அடங்கியுள்ளன. அதனால் ஏற்படக்கூடிய பாதிப்பு என்ன என்பது பற்றிக்கூட அறிந்துகொள்ளாமல் ஓர் அரசியல் கட்சி சின்னத்தனமாக நடந்துகொள்வது கேலிக்குரிய விடயமாகும்.

கடந்த தேர்தலில் நாட்டு மக்களுக்கு வாரி வழங்கிய வாக்குறுதிகளைத் தாம் சார்ந்த அரசால் நிறைவேற்றவே முடியாது என்று ஜே.வி.பியினர் நன்கு அறிந்துகொண்டனர். இதிலிருந்து எப்படித் தப்பிப்பது என்று ஆராய்ந்து கொண்டிருந்தவர்களுக்கு ஜனாதிபதி முன் வைத்த பொதுக்கட்டமைப்பு யோசனை நல்ல சாட்டாக அமைந்துவிட்டது.

இந்த விடயத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்ட ஜே.பி.பியினர் அதற்குக் கால், கை, மூக்கு வைத்துக் கதைத்தனர். மேடைதோறும் முழங்கினர். சிங்கள மக்கள் மத்தியில் இதை ஒரு பூதாகரமான விடயமாக ஆக்கியுள்ளனர்.

தமது அரசியல் சுயலாபத்துக்காகப் பொதுக் கட்டமைப்பைப் பயன்படுத்தி உண்மையான பிரச்சினைகளில் இருந்து தப்பித்துக் கொண்டு விட்டனர் - என்றார். அப்படியெனில், ஜனாதிபதி முன் வைத்திருக்கும் பொதுக் கட்டமைப்பை ஐ.தே.க. ஆதரிக்கின்றதா? - என்று அவரிடம் கேட்டதற்கு-

பொதுக்கட்டமைப்பு விடயம் பற்றி ஜனாதிபதி எம்மிடம் எதுவும் தெரிவிக்கவில்லை. அப்படியிருக்கும்போது, எம்மால் அதுபற்றி எதுவும் கூற முடியாது. - என்று பதிலளித்தார் அவர்.

நாடாளுமன்றில் பொதுக்கட்டமைப்பு சமர்ப்பிக்கப்படும்போது தமது நிலைப்பாட்டை ஐதேக. வெளிப்படுத்தும் என்றும் அவர் மேலும் கூறினார்.

ஜே.வி.பியினர் அரசைவிட்டு வெளியேறினால், பொதுக்கட்டமைப்பு விடயத்தில் தமிழர் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவளிக்கும் என்று கூறியுளளது. அதேநேரம், ஐ.தே.கவில் அங்கம் வகிக்கும தமிழ் எம்.பிக்களும் அரசை ஆதரிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது பற்றி ஐ.தே.க.வின நிலைப்பாடு என்ன? - என்று கேட்டதற்கு, இந்த விடயத்தில் ஐ.தே.கவில் உள்ள தமிழ் எம்பிக்கள் அரசுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக எமது கட்சி எவ்வித எதிர்ப்பையும் காட்டாது. இன ரீதியான உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். தமிழ் எம்.பிக்கள் பொதுக் கட்டமைப்புக்காக தமது ஆதரவை வழங்கவேண்டிய கட்டாயம் அவர்களுக்குண்டு. அதேசமயம் தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்களைப் புலிகளின் பிரதிநிதிகள் என்று நாடாளுமன்ற விவாதங்களின்போது கடுமையாகச சாடியவர்களுடன் இணைந்து தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் எப்படிச் செயற்படுவார்கள் என்பதுதான் கேள்வியாகும் - என்றார் அவர்.

## வவுனியாவில் கொள்ளை

வவுனியாவில் நேற்றுமுன்தினம் பிற்பகல் தனியார் வங்கியொன்று இனம் தெரியாதோரால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

வவுனியா நகரப்பகுதியில் அமைந்துள்ள மேற்படி வங்கிக்கு பிற்பகல் 2 மணியளவில் மோட்டார்ச் சைக்கிளில் வந்தவர்களால் மேற்படி கொள்ளை நடத்தப்பட்டுள்ளதாகச் செய்தி ஒன்று தெரிவித்தது.



உ

சாவகச்சேரி - கல்வயல் - பெரும்குளம்

## ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

### மகோற்சவ விஞ்ஞாபனம் 2005

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் 13.06.2005 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆலய **இரதோற்சவம 21-06-2005** செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணிக்கும் **தீர்த்தோற்சவம் 22.06.2005** புதன்கிழமை பகல் 10.00 மணிக்கும் நடைபெறும் என்பதை விநாயகர் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

தேவஸ்தானகுரு: **பிரம்மஸ்ரீ இ.தேவபாலசர்மா**

தேவஸ்தான மகோற்சவ பிரதமகுரு:

**ஸ்ரீ விஸ்ணு ஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக்குருக்கள்**

(பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்)

கல்வயல், சாவகச்சேரி. -ஆலய பரிபாலனசபை.

விளம்பரஅனுசரணை:

**சாரங்கன் நகை மாடம் அன் சென்ரர்**

45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 6059
(36629) (21-11-15)

## வாடகைக்கு

ஸ்ரான்லி வீதியில் மக்கள் வங்கி அமைந்துள்ள தனராஜா கட்டடத்தின் இரண்டாவது/ மூன்றாவது மாடிகள் (ஒவ்வொன்றும் 4800 ச.அடி) வாடகைக்கு விடப்படும். தொடர்பு: **பார்த்திபன் - 0777-711339 அல்லது 2226727**

(36614)(21-11-15)

உ

## நாரந்தனை - சரவணை

### கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

### சங்காபிஷேகம் - 18.06.2005

*மேற்படி ஆலயத்தின் கும்பாபிஷேக தினமாகிய 18.06.2005 சனிக்கிழமை சங்காபிஷேகம் நடைபெற முருகன் திருவருள் கூடியுள்ளது. அன்றைய தினம் முற்பகல் 10.00 மணிக்க சங்காபிஷேகம் நடைபெற்று, பூசைகள் இடம்பெற்று சுவாமி வீதிவலம் வருவார். முருகன் அடியார்கள் அனைவரும் வருகைதந்து முருகன் அருள்பெறுக.*

(36621)(21-11-15)

பிரதமகுரு: சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக்குருக்கள்
ஆலயக்குரு: சிவஸ்ரீ ந.கணேசராசக் குருக்கள்

விழா உபயகாரர்

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த பத்மலோஜன் - அனுஜா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி செல்வி பத்மலோஜன் கிர்த்திக்கா இன்று (17-06-2005) வெள்ளிக்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா; ஆசை அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பாட்டி, சித்தப்பாமார்களான முரளி, இளங்கோ, கேசவன், மாமாமார்களான அனுராஜ், லோகநாதன் (டோகா), சுகந்தன் அத்தைமார்களான திரு.திருமதி சற்குணமூர்த்தி பத்மலோஜினி (கனடா), திருமதி புவனேந்திரன், தர்சினிதேவி (பிரான்ஸ்), குமுதினி, மச்சான் விஜய், மச்சாள் திவ்யா மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கிர்த்திக்காவை ஆத்திசூடி சித்திவிநாயகர் அருள்பெற்று சீருஞ்சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



தகவல்:
**திரு.திருமதி பத்மலோஜன்**
ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்.
(36624)(50-11-15)

## M.A., M.Com. (காமராஜர் பல்கலைக்கழகம்) (மதுரை)

- மேற்குறிப்பிட்ட பாடநெறிக்கு பல்கலைக்கழத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- பட்டதாரிகளும் H.N.D.A கற்கைநெறி முடித்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவர்.
- பதிவுகள் பரீட்சை தொடர்பான விண்ணப்பங்கள் அனைத்தும் எமது நிறுவனத்தினால் செய்து கொள்ளலாம்.
- இவற்றுக்குரிய பரீட்சைகள் யாவும் இங்கும் நடைபெறும்.
- வீவரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

சகல பாடங்களுக்கும் உரிய விரிவுரைகள்

**ஆரம்பம் 02.07.2005 பிற்பகல் 2 மணி**

குறிப்பு: M.A., M.ED. முடித்தவர்கள் M. Phill க்கு விண்ணப்பிக்கத்தகுதி உடையவர்களாவார்கள்

**புதிய உயர்கல்லூரி,**

யாழ். இணைப்பாளர் ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P.No. 222 8148
(36619) (21-11-15)

# தாயினும் சாலப் பரிந்தூட்டும் இறைவன்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் ஒரு கலை. அதிலும் இறைநெறி நின்று நாம் வாழ்ந்தால் அது பெரும் பேறாகும். தான் மட்டும் வாழ்தல் போதும், எப்படியும் வாழலாம் என்பது வாழ்க்கையே அல்ல. சிலர் இதை கால்நடை வாழ்க்கை என்பர். மனிதன் காலால நடக்கிறான். அவனை நாம் கால்நடை என்று சொல்வதில்லை. அவன் அன்பால் நடக்கின்றான், பண்பால் நடக்கின்றான். எனவே தான், அவனை மனிதன் என்கின்றோம். எனவே, நாம் அன்பும் அறனும் கொண்ட வாழ்க்கையை வசை ஒழித்து வாழ்க்கையை வாழவேண்டும்.

இறைவன் ஒருதாய் காட்டும் பரிவை விடத் தகுதி மிகுதியான பரிவுடன் அடியார்களை வாழ்விக்க எண்ணுகின்றான். தாயின் பரிவே பரிவு. தாய் கூட்டும் அன்பே இத்தரணியில் தலையாது என்பர். ஆயினும் எல்லாத் தாய்மாரும் ஒன்று போலத் தம் குழந்தைகளிடம் அன்பு காட்டுவதில்லை. ஒரு சில தாய்மார் குழந்தை அழுதாலும் கவனிப்பதில்லை. அலட்சியப் போக்குடன் இருப்பர். இவர்கள் தாய்மாரே அல்லர். ஒரு சில தாய்மார் குழ்ந்தை அழுதவுடன் பாலூட்டுவார்கள். இவர்கள் பரவாயில்லை. ஒரு சில தாய்மார் குழந்தைக்குப் பசிக்குமே என்று நினைத்து அழத் தொடங்குவார்கள். இவர்கள் நற்றாய்மார்கள். ஆனால், இறைவனாகிய தாய் நினைந்து ஊட்டுவதிலலை. மறப்பு என்ற ஒன்றினைத் தொடர்ந்து வருவதே நினைப்பு. இறைவன் உயிர்களை மறப்பதே இல்லை. அதனால், இறைவன் நினைந்து ஊட்டும் தாயினும் சிறந்து விளங்குகின்றான்.

**வே.பரமநாதபிள்ளை**

வாழ்க்கைக்கு நாம் சமயத்தை பயன்படுத்துவதில்லை. சமயத்தை சடங்குச் சமயமாக்கி விட்டோம். சமயம் என்றால் என்ன? மக்களை மாக்களாக அன்றி மக்களாக வாழ வைப்பதே சமயம். கோவிலில் திருவிழாக்கள் தொடங்கியவுடன் விரதம் இருப்போம். நோன்பு உடல் நலத்திற்கும் பயன்பட வேண்டும். வாழ்க்கைக்கும் பயன்படவேண்டும்.

விரதம் என்பது வடசொல். முஸ்லிமகள் விரதம் என்பதை தூய தமிழ்ச் சொல்லால் நோன்பு என்று அழைபபர். நாமும் தூய தமிழ்ச் சொற்களை பயன்படுத்த முன்வரவேண்டும். ஸ்ரீ என்பதை அருள்மிகு என்றும் மகா உற்சவம் என்பதை பெருந்திருவிழா என்றும் பயன்படுத்த முன்வரவேண்டும்.

ஞானக்கதிர்

இவ் வாறு அபிசேகம், சந்நிதி, பூசை, புஷ் பம், மத்தியானம், வந்தனம் ஆகிய சமஸ்கிருத சொற்களைப் பயன்படுத்துகின்றோம். இதற்கு முறையே முழுக்கு, முன்னிலை, வழிபாடு, பூ, நண்பகல், வணக்கம் ஆகிய தூய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி தமிழை வளர்க்க வேண்டும்.

எனவேதான், நாம் சமய நெறிகளை வாழ்க்கைக்குப்பயன்படுத்த வேண்டும். அவ்வாறு பயன்படுத்தினால வாழ்க்கை வளம் பெறும். ★

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூன்17

செல்வி மாதுமை சிவசுப்பிரமணியத்தின் 'தூரத்து கோடை இடிகள்' என்னும் சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு அறிவாலயம், இணுவில் கந்தசுவாமி கோயிலில் நடைபெறவுள்ளது.

சோ.பரமசாமியின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வாழ்த்துரையை கவிஞர் ச.வே.பஞ்சாட்சரமும், அறிமுகவுரையை யாழ்.இந்துக் கல்லூரி ஆசிரியர் இ.பாலச்சந்திரனும் ஆய்வுரையை வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும் நிகழ்த்துவர்.

நூலை யாழ்.பல்கலைக்கழக கல்வித்துறைப் பேராசிரியர் கலாநிதி சபா. ஜெயராஜா வெளியிட்டு வைப்பார். (ஒ-202)

## மருந்தகத்துக்கு அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம்,ஜூன்17

பருத்தித்துறை தெங்கன் கிணற்றடிக் காணியில் மத்திய மருந்தக அடிக்கல் நடும் விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10.40 மணிக்கு நடைபெறவுள்ளது.

பி.வின்சன் டீபோல் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பிரதி சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அடிக்கல் நட்டுவைப்பார்.

நிகழ்வில் ஆசியுரைகளை சிவாகம கிரியா தத்துவநிதி சிவஸ்ரீ தாணு வாசுதேவக் குருக்கள், பருத்தித்துறை பங்குத்தந்தை வண.பிதா ப. இருதயதாஸ் ஆகியோர் வழங்குவர். (ஒ-202)

## நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் இன்று மஞ்சம்

யாழ்ப்பாணம், ஜூன்17

நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் திருமஞ்சத்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று காலை அம்பாளுக்கு 108 கலச சங்காபிஷேகம் நடைபெற்று, கைலாச வாகனத்தில் அம்பாள் வீதியுலா வருவார்.

இரவு விசேட மங்களவாத்தியங்களுடன் கலைமிளிர் சித்திர மஞ்சத்தில் விநாயகப்பெருமான், வள்ளி தேவசேனா சமேத முருகப்பெருமான் சகிதம் அம்பாள் திருவீதி வலம் வருவார். (ஒ-203)

## அலைகடல் நடுவுள்ள அற்புதமே!



அலை கடல் நடுவுள்ள அற்புதமே - எமை
ஆண்டருள் நாகம்மை பொற்பாதமே
சிலை வடிவாய் நிற்கும் தெய்வமே - இத்
தீவெல்லாம் உந்தன் கைவசமே

அவளை அறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவமில்லை
அவளின்றி எவராலும் ஆவ தொன்றில்லை
அவளின்றி எவ்வுயிருக்கும் உயிரே இல்லை

தேடி உன்னைச் சரணடைந்தோம்
இசையால் பாடி உன்னைச் சரணடைந்தோம்
உலகமெல்லாம் கோடி நலம் செய்திடுவாய்
எங்கள் குறைகள் எல்லாம் தீர்த்திடுவாய்

கு.மேகலா
நயினாதீவு.

# இந்தியாவே, ஈழத்தமிழர்களின் போராட்டத்துக்கு உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாதே!

### உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தத்தைக் கண்டித்து திருகோணமலைத் தமிழ் மக்கள் பேரவை அறிக்கை

திருகோணமலை,ஜூன் 17

"இந்தியாவே! ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு உதவி செய்யவேண்டிய உன் கடமையைச் செய்யாவிட்டாலும் உபத்திரமாவது செய்யாமல் இரு!"

- இப்படி இந்தியாவைக் கோரியிருக்கின்றது திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை.

உத்தேச இலங்கை - இந்திய ஒப்பந்தம் தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் கொழும்பில் வைத்து வெளியிட்ட கருத்துக்களுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் பேரவையின் தலைவர் வலிச்னேஸ்வரன் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.


அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இந்தியா, தமிழ் மக்களினது விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிக்கும் மறைமுக செயற்பாடுகளுடன் நடந்துகொள்வது தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது. தமது நாட்டின் பாதுகாப்பு என்ற போர்வையில் ஸ்ரீ லங்கா அரசுடன் செய்வதற்கு உத்தேசித்துள்ள பாதுகாப்பு உடன்படிக்கை உண்மையில் கபடத்தனம் கொண்டதாகவே தமிழ்மக்கள் கருதுகிறார்கள். 20 வருட கொடிய யுத்தத்தினால் வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற தமிழ்பேசும் மக்கள் தங்கள் வாழ்வை இழந்து அல்லல்பட்டு, அவலப்பட்டு தமிழீழப் பிரதேசமெங்கும் இரத்த ஆறு ஓடிக்கொண்டிருந்த வேளையில வாய்மூடி மௌனியாக இருந்த இந்திய அரசு, இன்று தமிழ்மக்களுக்கெதிராக அவர்களது கண்ணீரால் கட்டியெழுப்பப்பட்ட விடுதலைப் போராட்டத்திற்கெதிராக - செயற்படுவதற்கு முனைந்துள்ளமையை வேதனையுடன் கண்டிக்கின்றோம்.

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நாளிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையில் ஒரு நிரந்தர சமாதானம் ஏற்பட்டு தமிழ் மக்களினது பிரச்சினைக்கு நீதியானதும் நியாயமானதுமான தீர்வொன்றினைப் பெற்றுத்தருவதற்கு இந்திய அரசு உதவவேண்டுமென்று பல தடவைகள் கேட்டுக்கொண்டனர். நடுநிலையாளராகவோ, ஏற்பாட்டாளராகவோ பங்காற்றுமாறு கேட்டுக்கொண்ட போதெல்லாம் அதனைத் தட்டிக் கழித்த இந்திய அரசு இன்று சமாதானத்தின் பெயரால் நோர்வே, அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகளும் கால்பதித்துள்ளமையைப பொறுக்கமாட்டாத நிலையில் - தமது பொருளாதார நலனும், இராணுவ நலனும் பறிபோய்விடுமோ என்ற அச்சத்தில் இன்று பாதுகாப்பு ஒப்பந்தம் என்ற பெயரிலும் எண்ணெய் ஒப்பந்தம் என்ற பெயரிலும் ஸ்ரீ லங்கா தேசத்துக்குள் உள்நுழைய முற்பட்டுள்ளது.

இந்திய அரசு இன்று தமது நட்புறவுச் சக்திகளாக ஸ்ரீலங்கா தேசத்தில் தெரிவுசெய்துள்ள ஜே.வி.பி. எனப்படும் மக்கள் விடுதலை முன்னணி கம்யூனிசத்தின் பெயரால் காட்டுமிராண்டித்தனம் புரியும் சர்வதேச கட்டாலிக் காலிக் கும்பல் என்பதை நினைவூட்ட விரும்புகிறோம். இவர்கள் தான் முன்பு இந்திய தேசத்திற்கெதிராக கூச்சல் போட்டு திரிந்தவர்கள் என்பதை இந்தியா மறந்துவிட்டதால் நட்வர்சிங் இலங்கைக்கு வந்தபொழுது முதன்முதலில் சந்தித்தது தமிழ்த் தேசிய விரோத சக்திகளையே, இவர்களையே இந்தியாவுக்கு அழைத்து மாநாடுகளும் விருந்துபசாரங்களும் மேற்கொள்வது இந்திய அரசின் கபடத்தனத்தை எடுத்துக்காட்டுவதாகும். எமது விடுதலைப் போராட்டம் கண்ணீராலும், பதினெட்டாயிரம் மாவீரர்களின் உதிரத்தாலும், சதைப் பிண்டங்களாலும் கட்டியெழுப்பப்பட்டது. எங்களது நியாயமான போராட்டத்திற்கு சமாதான வழியில் நியாயமானதொரு தீர்வு கிடைக்கவேண்டுமென்று நாம் மனதார விரும்புகிறோம். அத்தீர்வினைத் தருவதற்கு ஸ்ரீலங்கா தேசத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கு இந்தியா தனது பங்கினைச் செய்ய வேண்டுமென்று தமிழ்பேசும் மக்கள சார்பில் கேட்டுக் கொள்கின்றோம். அவ்வாறின்றி சமாதானத்தைக் குழப்புகின்ற துரோகத்தனத்தில் ஈடுபட்டால் தமிழ்நாட்டில் வாழ்கின்ற ஆறரைக்கோடி தமிழ் மக்களினது உணர்வுகளுக்கு இந்தியா பதில் சொல்லவேண்டிய நிலை ஏற்படும். எங்களுடைய விடுதலைப் போராட்டத்திற்கு உதவி செய்யாவிட்டாலும் தொந்தரவு தருகின்ற நிலையிலிருந்தாவது விலகிக்கொள்ளவேண்டுமென்று இப்போராட்டத்திற்குத் தங்களை அர்ப்பணித்த மாவீரர்களது தியாகத்தின் பெயராலும், ஏழுகோடி தமிழ் மக்களின் உயிர்த்துடிப்பின் பெயராலும் இந்தியாவைக் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

# தெய்வீக ஸ்தலங்களில்



முழங்காவில், வேரவில் விநாயகர் ஆலய வருடாந்தத் திருவிழாவின் தேர் உற்சவத்தின்போது எடுக்கப்பட்ட படம். *(படம்: வேரவில் செய்தியாளர்)*




நற்கருணை ஆண்டையும் கிறிஸ்துவின் திருவுடல், திரு இரத்தப் பெருவிழாவையும் முன்னிட்டு நற்கருணைப் பேரணி இடம்பெற்றது. கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்திலிருந்து நற்கருணைப் பேழையுடன் இரதம் புறப்படுவதைப் படத்தில் காணலாம். *(படம்: குருநகர்ச் செய்தியாளர்)*



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் சைவ கலை, பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் அண்மையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சமய, சமூக சேவையாளர் சிவத்திரு. வ.குமாரசாமிக்கு மணிவிழா நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் எடுக்கப்பட்ட படம் இது. இடமிருந்து வலமாக பேரவையின் தலைவர் க.அருள்லிங்கம், தம்பசிட்டி வல்லை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயப் பிரதம குருவும், சந்நிதியான் ஆச்சிரம பேரவைக் காப்பாளருமான சிவஸ்ரீ சோ.தண்டபாணிகதேசிகர், நல்லை திருஞானசம்பந்த ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சந்நிதியான ஆச்சிரம இயக்குநர் அமுதகலாயோதி செ.மோகனதாஸ் சுவாமிகள், மணிவிழா நாயகர் சிவத்திரு.வ.குமாரசாமி அவரது பாரியார், பேரவையின் பொதுச் செயலாளர் ந.அரியரத்தினம் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

*(படம்: தொல்புரம் செய்தியாளர்)*



நாரந்தனை - சரவணை கர்ணந்தோட்டம் சிவசுப்பிரமணியர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா அண்மையில் நடைபெற்றது. திருவிழா நாள்களில் தொடர் ஆலயச் சொற்பொழிவை நிகழ்த்திய செஞ்சொற்செல்வர் இரா.செல்வவடிவேலினால், சமய அறிவுப் போட்டியில் சித்திபெற்ற மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (எ)

ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

பண்டிதர் நரசிம்ம நாயுடு

PANDIT NARASEMANAIDU

(World Expert Astrologer)

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வருகைதந்துள்ளார் சர்வதேச ஜோதிடர். இவர் கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன் - மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்:

பிள்ளையார் இன்,
அறை எண் 9, 31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 077 9122836. (26-14-19)

Pillaiyar Inn,
Room No. 9,
31, Manipay Road,
Jaffna, Sri Lanka.

(36520)


## அறிவித்தல்

### இறைச்சிக் கடை நடத்துதல்

வலி.மேற்குப் பிரதேசசபையால், வட்டுக்கோட்டைப் பொதுச் சந்தையில் 01-07-2005 ஆம் திகதியிலிருந்து ஆட்டிறைச்சிக்கடை அமைத்து நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 28-06-2005ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு வலிகாமம் மேற்குப் பிரதேசசபைச் செயலாளர் பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றார்.

திருமதி பு.சிவலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.

(சி-43450)(26-14-19)

## சனிப்பெயர்ச்சி விசேட ஹோமம்

வலி.தெற்கு,ஜூன்17

எதிர்வரும் 24ஆம் திகதி இடம்பெறவுள்ள சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீவேங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் அன்றையதினம் விசேட நவக்கிரக ஹோமம், அபிஷேக ஆராதனைகள் என்பன இடம்பெறவுள்ளன.

அன்றையதினம் சனிபகவான் மிதுன ராசியில் இருந்து கற்கடக இராசிக்குள் பிரவேசிக்கவுள்ளார். மேடம், மிதுனம், கற்கடகம், சிங்கம, தனு ஆகிய இராசிகளில் பிறந்தவர்கள் சனீஸ்வர பகவானை வழிபடுவது அவசியமாகின்றது.

வண்ணை.பெருமாள் கோயிலில் அன்றைய தினம் காலை நவக்கிரக ஹோமம், அபிஷேக ஆராதனைகள், சனீஸ்வரபகவானுக்கு சகஸ்ரநாம அர்ச்சனை என்பன இடம்பெறவுள்ளன. (3-152)

## விசேட கலந்துரையாடல்

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த உளவளத்துணையாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9மணிக்கு வலிகாமம் கல்வி வலயப் பணிமனையில் நடைபெறவுள்ளது. எதிர்காலத்தில் வலிகாமம் கல்வி வலயத்தில் உளவள செயற்பாடுகள் தொடர்பாக மீளாய்வு செய்தலும் அதற்கான திட்டமிடலும் அன்றைய தினம் மேற்கொள்ளப்படவுள்ளன. (3-152)


# உடன் தேவை

### வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம் கட்டட நிர்மாண ஒப்பந்த வேலைகள்

கூலி ஒப்பந்த அடிப்படையில் அடுக்குமாடிக் கட்டடங்கள், சாதாரண கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு தகுதியான ஆளணி உடையோரும், ஆற்றலுடையோரும் உடன் தேவை.

★ கூலி வீதம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

தகுதியுடையோர் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்,
கண்டி வீதி, ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

(சி-43410) தொலைபேசி எண்: 021 228 5917 (26-14-19)


# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் விவரப்படி இக்ராட் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

*கேள்விப்படிவம் பெறல் – 22–06–2005 நண்பகல் 12. 00 மணி வரை*
*கேள்விப்படிவம் ஏற்றல் – 28–06–2005 நண்பகல் 12. 00 மணி வரை*
*கேள்விகள் திறத்தல் – 28–06–2005 பிற்பகல் 2. 00 மணி.*

| வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | கேள்விப் பத்திரப் பணம் வற்வரியுடன் |
|---|---|---|
| 1. ஆலமோடை வீதி திருத்தம் பகுதி 1 சுழிபுரம் - எம் 9 | 4750.00 | 575.00 |
| 2. கிராவோலை வீதி திருத்தம் பகுதி 1 அராலி - எம் 9 | 1250.00 | 575.00 |
| 3. உடுக்கியவளை வீதி திருத்தம் வட்டுக்கோட்டை - எம் 9 | 5000.00 | 575.00 |
| 4. அராலி உப அலுவலகக் கிணறு திருத்தமும் நீர் விநியோகமும் பகுதி 1 - எம் 9 | 3300.00 | 575.00 |
| 5. அராலி உப அலுவலகக் கட்டடம் அமைத்தல் - கட்டடம் 5 - எம் 7 | 9500.00 | 1150.00 |
| 6. தலைமையலுவலக மதில் அமைத்தல் - எம் 9 | 7500.00 | 1150.00 |
| 7. சங்கானை மரக்கறிச் சந்தைக் கடை அமைத்தல் - எம் 9 | 2800.00 | 575.00 |
| 8. இன்பச்சோலை வீதிக்கான மதகு அமைத்தல் | 2000.00 | 575.00 |

மேற்படி கேள்விப்பத்திரத்தின் மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேலதிக விவரங்களையும் நிபந்தனைகளையும் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
தலைமையலுவலகம்.
சுழிபுரம்
2005-06-13.

(சி-43449)(26-14-19)

திருமதி பு.சிவலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை,
சுழிபுரம்.


DEWALT®
High Performance Industrial Tools
BLACK&DECKER®

மின் சக்திக் கருவிகள் ஏராளம்

தச்சு வேலைக்கு, இரும்பு வேலை
மற்றும் வீடமைப்பு வேலைகளுக்கும்




டெல்மேஜிடம் இருந்து
பிளெக் அண்ட் டெக்கர் மற்றும் டிவோல்ட்

இப்பொழுது நாடு முழுவதிலுமுள்ள விற்பனை முகவர்களிடமும்

டெல்மேஜ் காட்சியறை களிலும்

விபரங்களுக்கு அழையுங்கள் : 2665913, 4717319





# கிறீன் பலஸ் எம்போறியம்

மலிவு விலைதானா என்பதை அறிந்துகொள்ளவும் நாளைய நாகரிகத்தை முதன்முதலில் இன்றே அறிமுகம் செய்தவர்களா என்பதைப் பார்வையிடவும் ஒருமுறை விஜயம் செய்துபாருங்கள்.

யாழ்நகரில் குறைந்த விலையில் நிறைந்த ரகங்கள்!

நிகரில்லாத் தரங்கள்!

அழகிய புடைவைத் தினுசுகளின் குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்யம்.

சந்திரமுகி சச்சின் ஜித்தன்

புதிய சாறிவகைகள்! ஸ்கேட் அன் பிளவுஸ்–சல்வார் புதியரகம் கண்ணைக் கவரும் புத்தம் புதிய டிசைன்கள்

பொக்ஸ் சேட், டெனிம் விதம் விதமான சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள் அனைத்துமேவியத்தகு மலிவு விலையில் கிடைக்கும்.

இன்றே வாருங்கள்! கிறீன் பலஸ் எம்போறியம்

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.

(சி-43459)

# பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பவர்கள் அதற்கான தீர்வையும் கூறவேண்டும்

நாட்டில் இன்று நிலவும் நிச்சயமற்ற - ஸ்திரமற்ற - அமைதியற்ற அரசியல் சூழ்நிலையில் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் விதண்டாவாதக் கருத்து வெளிப்பாடுகளைக் கண்டிக்கும் இக் கருத்து வெளிப்பாடு, யதார்த்தபூர்வமான கருத்துக்களை வெளியிட்டு வரும் 'ராவய' பத்திரிகையின் இவ்வார ஆசிரிய தலையங்கமாகும்.

குட்டையைக் குழப்பி மீன்பிடிக்க முயலும் சந்தர்ப்பவாதப் பேரினவாதச் சிங்கள அரசியல்வாதிகளின் இவ்வித நிலைப்பாட்டைக் கண்டித்து சிங்களமொழி ஊடகமொன்றே கருத்து வெளியிட்டுள்ளது.

உத்தேச பொதுக்கட்டமைப்பு யோசனையை முன்னிலைப்படுத்தி நாட்டின் சகல மக்களையும் இரு தரப்புக்களாகப் பிரிந்து செயற்பட வைகைகும் நிலைமை உருவாக்கப்பட்டு வருகின்றது.


பௌத்த பிக்குவின் வீதிமறியல்

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மட்டுமன்றி, விடுதலைப் புலிகள் அமைப்புத் தொடர்பாகக் கடும் விரோதப் போக்கைக் கடைப்பிடித்து வரும் இந்தியாவும் கூட பொதுக்கட்டமைப்பு யோசனைக்கு ஆதரவளிக்கின்றது. அதே போன்று ஸ்ரீ.ல.சு.கட்சி மற்றும் ஐ.தே.கட்சி என்பன மட்டுமன்றி, விடுதலைப் புலிகள் அமைப்புடன் கடும் விரோதப்போக்குடன் செயற்படும் ஈ.பி.டி.பி கட்சியும்கூட இப் பொதுக்கட்டமைப்பு யோசனையை ஆதரிக்கின்றது. ஆக, ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய இவ்

அமைந்து விடுமென 'ஜே.வி.பி'யும் 'ஜாதிக ஹெல உறுமய'வும் கூறிவருகின்றன. அது மட்டுமன்றி, தனியான இராச்சியம் என்ற விடுதலைப்புலிகள் அமைப்பின் குறிக்கோளுக்கு வழியமைத்துக் கொடுப்பதாக இப்பொதுக்கட்டமைப்பு உடன்பாடு அமைந்து விடுமெனவும் இவ்விரு கட்சிகளும் தெரிவித்துவருகின்றன.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதன் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரம் வழங்குவதாக அமைந்து விடும் என்ற வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடியதொன்றல்ல. சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் வகையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்கிக்கொள்ள நேர்ந்தது. போர்நிறுத்த உடன்பாடு மேற்கொள்ளப்பட்டதன் மூலம் அவ்வமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்க நேர்ந்தது. போர்நிறுத்த உடன்பாடு மேற்கொள்ளப்படுவதற்கு முன்பிருந்தே இரு தரப்புக்களும் தனித்தனி நிர்வாகப் பிரதேசங்களை நிர்வகித்து வந்தது மட்டுமன்றி, இவ்விரு தரப்புக்களும் தமது நிர்வாகப் பிரதேசங்களூடாக இடம்பெறும் போக்குவரத்துக்களின் போது பிரயாணிகளைத் தத்தமது தரப்புப பாதுகாப்புப் பிரிவினரின் பரிசோதனைகளுக்கு உட்படுத்தும் நடைமுறையும் கடைக்கொள்ளப்

## நாட்டை புதைகுழிக்குள் தள்ளுவதே ஜே.வி.பி., ஹெல உறுமயவின் நோக்கம்

விரு கட்சிகள் மட்டுமே இப்பொதுக்கட்டமைப்பு யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

பயங்கரவாத அமைப்பொன்றுடன் இவ்வித பொதுக்கட்டமைப்பு உடன்பாடொன்றைச் செய்து கொள்ளவதன்மூலம், அந்த அமைப்புக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரம் வழங்குவதாக

பட்டு வருகிறது.

ஒரு நாட்டில் இரு அரச நிர்வாகங்கள் இடம பெறுதல சாத்தியமானதல்ல. அத்தகைய நிலைமையை யுத்தத்தின் மூலம் மாற்றியமைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவும் தோல்வியுற்றமையால், கடைசியில் இருதரப்புக்களுக்குமிடையேயான பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும் முயற்சியாக மாற்றமடைந்தது. அத்தகைய முயற்சிகளுக்கு சர்வதேச சமூகமும் உதவ முன்வந்தது. இரு தரபபுக்களையும் சேர்ந்த பல உளவாளிகள் கொலையுற நேர்ந்தபோதிலும், மீண்டும் யுத்தமொன்றில் ஈடுபடும்நிலை உருவாகவில்லை. ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சு இடைநடுவில் தடைப்பட நேர்ந்த போதிலும், மீண்டும் சமாதானப் பேச்சு ஆரம்பித்துத் தொடர முடியுமென்ற நம்பிக்கை நிலவி வந்தது.

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாகவே பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்கிச் செயற்படுத்த வேண்டிய அவசியம் உருவானது. ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களில் 60 சத விகிதத்தினர் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். இந்த ஆழிப்பேரலை அனர்த்தத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளும் கூடப் பாதிப்படைந்தன.


பேரணியைத் தடுத்த பொலீஸாருடன் ஜே.வி.பியினர் வாக்குவாதம்

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளை மேற்கொள்ள இவ்வித பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவது தவறெனக் கூறும் ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும், இப்பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பது குறித்து இதுவரை எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை. இப்பிரச்சினைக்கான ஒரே தீர்வு மீணடும் யுத்தத்தை ஆரம்பிப்பதே என்பதே அவ்விரு தரப்பினரின் நோக்கமெனக் கருதவேண்டியுள்ளது. ஆனால், பிரச்சினைக்கான தீர்வை யுத்தத்தின் மூலம் எட்ட முடியாது என்பதே யதார்த்தம். அதுமட்டுமன்றி, நாட்டின் பெரும்பாலான பொதுமக்கள் மீண்டுமொரு யுத்தத்தை விரும்பவில்லை.

பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்கி அனர்த்த நிவாரணப்பணிகளை இணைந்து மேற்கொள்வதென்ற இந்தச் சிறிய விடயத்தில் கூட சிங்கள மக்கள் ஒன்றிணைந்து செயற்பட முடியாதாயின், முக்கிய மாபெரும் பிரச்சினையான இனப்பிரச்சினை விடயத்தில் எம்மால் எவ்விதம் ஒன்றிணைந்து பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்பதை நினைத்துப் பார்க்க முடியவில்லை. ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய இரு கட்சிகளும், இப்பொதுக் கட்டமைப்பு யோசனையை ஆதரிக்கும் பொது மக்களும் சரி, அமைப்புக்களும் சரி தேசத் துரோகிகள் என்ற வகையில் கருதப்படவேண்டியவர்கள் எனத் தெரிவித்துள்ளன. இதன் அர்த்தம் அவ்விதம் தேசத்துரோகிகள் எனக் கருதப்படுபவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டுமென இவ்விரு அமைப்புக்களும் கருதுகின்றனவா என்பது புரியவில்லை.

யுத்தமுனைப்புடன், சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமை இவ்விரு அமைப்புக்களுக்கும் இருப்பது போன்று, சமாதானத்தை விரும்பும் பொதுமக்கள் அதற்கான தமது விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான உரிமையைக் கொண்டுள்ளனர் என்பதனை இவ்விரு கட்சிகளும் உணரத்தவறுகின்றனர். யுத்த முனைப்புடன் செயற்படுதல் நாட்டுப்பற்று எனவும், சமாதானத்துக்காகக் குரல் கொடுத்தல் தேசத்துரோகம் எனவும் இவ்விரு தரப்பினரும் கருதுவார்களானால் நாட்டுப் பற்றாளராக வாழ்வதை விட தேசத் துரோகிகளாக மாறிவிடுவது நியாயமான தொன்றாக அமையும்.

தமிழில் : வீயெஸ்ரீ

# மறுசீரமைக்கப்பட்ட ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பு

மறுசீரமைக்கப்பட்ட இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்புத் தொடர்பாக கல்வியமைச்சின் செயலாளர் டாக்டர் தாரா டி மெல் வெளியிட்ட சுற்றறிக்கையின் முதற்பகுதி நேற்றைய உதயனில் வெளியானது. அதன் மிகுதிப் பகுதி இன்று பிரசுரமாகின்றது.

### மறுசீரமைத்தல்

2005.01.12ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்திற்கமைய இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பு 11ஆவது பிரிவின் 3:2 சரத திற்குக் கீழ் குறிப்பிடப்பட்ட உபசரத்து சேர்த்துக்கொள்ளப்படுகிறது.

(ஏ) மேற்கூறப்பட்ட (அ) மற்றும் (இ) சரத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சகல இரு ஆண்டுகளுக்கும் ஒரு புள்ளி வீதம் வழங்கும் போது எஞ்சும் இருப்பு ஓர் ஆண்டு அல்லது அதனை விட அதிகரிக்குமானால் அதன் சேவைக் காலத்திற்காக மேலும் ஒரு புள்ளி வழங்கப்பட வேண்டும்.

(ஐ) மேற்கூறப்பட்ட (ஆ) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சகல ஆண்டுகளுக்குமான ஒரு புள்ளி வீதம் வழங்கும் போது எஞ்சும் இருப்பு ஆறு மாதம் அல்லது அதனை விட அதிகரித்திருக்குமானால் அதன் சேவைக் காலத்திற்காக மேலும் ஒரு புள்ளி வழங்கப்படவேண்டும்.

### விடுவித்தல்

இலங்கை ஆசிரியர் சேவையின் ஏதாவதொரு வகுப்பு / தரத்தில் உள்ள அதனை விட உயர் வகுப்பு / தரத்திற்கு பதவி உயர்வு பெற்றுக்கொள்வதற்காக போதியளவு புள்ளிகளைப் பெற்று பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது சித்தியடைய வேண்டிய கீழ்க் குறிப்பிடப்பட்ட தேவைகளிலிருந்து 2004.12.31 ஆம் திகதி வரை விடுவிக்கப்படும்.

(I) சேவைக்கால பயிற்சி வேலைத்,திட்டத்திற்கான பங்கேற்பு

(II) தொழில் மீளாய்வு சித்தியடைந்திருத்தல்.

(III) தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

(IV) பெயர் குறிப்பிட்ட பாடசாலையில் உரிய சேவைக்காலத்தை கொண்டிருத்தல்.

### பதவி உயர்வு

இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிபபின் ஒழுங்கு விதிகள் மற்றும் மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பாக 2005.01.12ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய 2004.12.31 ஆம் திகதி வரை மாத்திரம் மேற்கூறப்பட்டவாறு செயற்பட அரச சேவைக் குழு அங்கீகரித்துள்ளது.

(I) இலங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட ஆசிரிய பயிற்சிச் சான்றிதழ்/ வெளிவாரி பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமை இதுவரையில் பெறாத பயிற்றப்படாத ஆசிரியராக இருந்தால் அவ்வாசிரியரின் பயிற்றப்படாத ஆசிரிய சேவைக்காலம் 10 ஆண்டுகளைப் பூர்த்திசெய்யும் தினம் அல்லது 1994.10.06 ஆகிய இரு தினங்களுக்கும் பின்னர் வரும் தினத்திற்கு ஏனைய தகைமைகளைக் கருத்திற் கொள்ளாது இலங்கை ஆசிரிய சேவையின் மூன்றாம் வகுப்பின் முதலாம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்கல்.

(II) இலங்கை ஆசிரிய சேவையின் மூன்றாம் வகுப்பின் முதலாம் தரத்தில் பயிற்சி, பயிற்சி டிப்ளோமாதாரர் மற்றும் தொழில் தகைமை அற்ற பட்டதாரி என 3 வகைக்குட்படும் ஆசிரியர்கள் மற்றும் அதற்குச் சமமான தகைமை கொண்ட ஆசிரியர்கள் III ஆம் வகுப்பின் சேவைக்காலத்திற்குள் உழைத்த 5 புள்ளிகள் பெற்ற தினம் அல்லது 1994.10.06 ஆகிய இரு தினங்களுக்குப் பின்னர் வரும் தினம் முதல் ஏனைய தகைமைகளைக் கருத்திற்கொள்ளாது 2ஆவது வகுப்பின் IIஆம் தரத்திற்குப் பதவிஉயர்வு வழங்கல்.

(III) இலங்கை ஆசிரிய சேவையின் 2ஆம் வகுபபின் II ஆம் தரத்தில் பயிற்சி, பயிற்சி டிப்ளோமாதாரர்கள் மற்றும் தொழிற்றகைமை கொண்ட பட்டதாரி ஆகிய ஆசிரியர்கள் மற்றும் அதற்குச் சமமான தகைமை கொண்ட ஆசிரியர்களில் 2ஆம் வகுப்பின் IIஆம் தரத்திற்கு 10 புள்ளிகளை உழைத்துக் கொண்ட ஆசிரியர்கள் ஏனைய தகைமைகளைக் கருத்திற்கொளளாது மேற்கூறப்பட்ட 10 புள்ளிகளை ஈட்டிக் கொண்ட தினம் அல்லது 1994.10.06 ஆகிய இரு தினங்களுக்குப்பின்னர் வரும் தினம முதல 2ஆவது வகுப்பின் முதலாம் தரத்திற்குப் பதவி உயர்வு வழங்கல்.

(IV) இலங்கை ஆசிரிய சேவையின் 2ஆம் வகுப்பின் முதலாம் தரத்தின் பயிற்சி, பயிற்சி டிப்ளோமாதாரர் தொழிற்றகைமை கொண்ட பட்டதாரி மற்றும் அதற்குச் சமமான தகைமை கொண்ட ஆசிரியர்களில் 2ஆம் வகுப்பின் முதலாம் தரத்தின் சேவைக்காலத்திற்குள் 5 புள்ளிகளை ஈட்டிக்கொண்ட ஆசிரியர்கள் ஏனைய தகைமைகளைக் கருத்திற்கொள்ளாது மேற்கூறப்பட்ட 5 புள்ளிகளைப் பெற்ற அல்லது 1994.10.06ஆம் திகதி ஆகிய இரு தினங்களுக்குப் பின்னர் வரும் தினம் முதல் முதலாம வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்கல்.

மேற்கூறப்பட்ட 2005.01.12ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்திற்கமைய ஆசிரியர்களின் பதவி உயர்விற்கான காரணியாக இருக்கும் புள்ளிகளைத் தவிர ஏனைய சகல தேவைகளும் 2004.12.31ஆம் திகதி வரை விடுவிக்கப்பட்டுள்ளது இதனடிப்படையில் மேற்கூறப்பட்ட சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டிய தினம் 2005.01.01 அல்லது அதற்கு முன்னரான தினமாக இருக்க வேண்டியதுடன் 1994.10.06ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னரான தினமாக இருப்பது அவசியமாகும். இலங்கை ஆசிரிய சேவைக்கு உளளீர்ப்புச் செய்யப்பட்ட 2005.01.01 அல்லது அதற்கு முன்னரான தினத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கும் இதனை பொருத்தமானவாறு உரிய தாக்கிக்கொள்ளவேண்டும்.

இச்சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளுக்கமைய உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு அல்லது பதவி உயர்வு பெறுவதனால் ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கும் வேளையில் 2004.12.31 ஆம் திகதி வரை நிலுவைக் கொடுப்பனவின்றி 2005.01.01ஆம் திகதி முதல் சம்பள உரிமையை வழங்கவேண்டும். மேற்கூறப்பட்ட பதவி உயர்வு வழங்கப்பட்டதன் பின்னர் சம்பளம் தயாரிக்கப்பட வேண்டியது பொதுநிர்வாகச் சுற்றறிக்கை 11/94 மற்றும் 7/2000 மூலம் மறுசீரமைக்கப்பட்ட தாபன விதிக்கோவையின் VII ஆவது வாசகத்தின் 5ஆவது சரத்திற்கமையவாகும்.

இச்சுற்றறிக்கையை அமுல்படுத்தும்போது தேவைப்படும் மேலதிக ஒதுக்கீட்டு அளவை மதிப்பீடு செய்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவும்.

இச்சுற்றறிக்கை வெளியிடப்படுவது அரச சேவையின் ஆணைக்குழு சபையின் இணக்கத்துடன் ஆகும்.

இதில் குறிப்பிட்டுள்ள மறுசீரமைப்புகள் மற்றும் அதற்குரிய ஆலோசனைகளின் பிரகாரம் பதவிஉயர்வு பெற உரிமை உள்ள சகல ஆசிரியர்களுக்கும் பதவி உயர்வு வழங்க தாமதமின்றி நடவடிக்கை எடுக்கவும். இச்சுற்றறிக்கையில் உள்ள ஒழுங்கு விதிகளுக்கமைய நடவடிக்கையை மேற்கொள்ளும் போது ஏதாவதொரு பிரச்சினை ஏற்பட்டால் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது. (ஒ-11)



## ஏகாதசித் தீர்த்தம்

**ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தானம்**

**நாகேஸ்வரம் - அளவெட்டி**

விழா நாளை (18-06-2005) சனிக்கிழமை
பகல் 8 மணிக்கு ஆரம்பமாகி,
10 மணியளவில் வசந்தமண்டபப் பூசையும்
தொடர்ந்து தீர்த்தமும் இடம்பெறும் என்பதை
அன்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

பொ.ப.சபை,
அளவெட்டி, நாகேஸ்வரம்.

(36562)(24-14-15)




சாவகச்சேரி வடக்கு, மடத்தடியைச் சேர்ந்த தர்மபாலன்- இராஜபூபதி தம்பதியின் செல்வப் புதல்வன் கௌரிசங்கர் இன்று (17.06.2005) வெள்ளிக்கிழமை இல் தனது 19ஆவது பிறந்த தினத்தை அமெரிக்காவில் உள்ள பெரியம்மா வீட்டில் கொண்டாடுகின்றார்.

மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையாரின் அருள்பெற்று, பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வளமுடன் வாழ -

அப்பா, அம்மா, தங்கைமாரான நர்மதா, தர்மிகா, மனோகரிப் பெரியம்மா, பெரியப்பா, சிந்து அக்கா(அமெரிக்கா), ராசாத்தி பெரியம்மா, பெரியப்பா, மீரா(ஜேர்மனி), ராசுமாமா அத்தை குடும்பம்(ஜேர்மனி, பாலுமாமா குடும்பம்(மீசாலை), கமலன் மாமா(கரணவாய்), சின்னம்மா அப்பம்மா (வயல்கரை), அத்தைமார், சித்தப்பாமார் அனைவரும் வாழ்த்துகின்றனர்.



மடத்தடி,
சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.

தர்மபாலன்
குடும்பத்தினர்.

## சக்தி T.Vயில் திரைப்படம்

இல.169, 171, மின்சார நிலைய வீதியில் இயங்கும் புனிதா நகைமாடம் வழங்கும் திரைப்படவிருந்து விஜய், இஷாகோபிகா நடித்த

**திருமலை**

**இன்று வெள்ளிக்கிழமை (17-06-2005) இரவு 9.45 மணிக்கு உங்கள் சக்தி T.Vயில் பாருங்கள்.**

☞ 239, கஸ்தூரியார் வீதியில் இயங்கிய எமது ஸ்தாபனம் தற்போது கீழ் உள்ள முகவரியில் இயங்கிவருகின்றது என்பதை அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**புனிதா நகைமாடம்**

*169, 171, மின்சாரநிலைய வீதி (யாழ். பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.*

(36580) (24-14-15) **T.P.: 021 222 7026**

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணக மலர்வு | | விண்ணக விரைவு |
|---|---|---|
| 12 - 04 - 1948 |  | 10 - 06 - 2000 |

**திருமதி கந்தசாமி அன்னலெட்சுமி.**

திதி: 17.06.2005

ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
அம்மா ஆறுமோ உன் துயரம்?
அன்றெமை ஆழ்துயரிலாழ்த்தி
அன்புத் தந்தை பிரிந்த பின்னே
அன்னையாய் தந்தையுமாய்

அனைவருக்கும் ஊன்றுகோலாய்
நின்றெமை வளர்த்த எம் அம்மா
இப்பிறப்பில் உமைப் பிரிந்தோம்
எப்பிறப்பில் காண்போமினி?
உங்கள் பேச்சும் மூச்சும் என்றும்
எம் உள்ளே வாழும் அம்மா!

*7ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(36403)(32-14-15-24)

## நயினாதீவில் வீதி புனரமைப்பு

நல்லூர்,ஜூன்17

நயினாதீவு, ஆலங்குளம் வீதி புனரமைப்புப் பணிகள் தற்சமயம் முடியும் தறுவாயில் உள்ளன. நயினாதீவு சமூக, பொருளாதார கல்வி அபிவிருத்தி ஒன்றியம் இந்த வீதியை இங்குள்ள வர்த்தகர்களின் உதவியுடன் புனரமைத்து வருகின்றது.

வீதியை அகலப்படுத்தும் பொருட்டு அயலில் உள்ள மக்கள் தமது காணிகளை இலவசமாக வழங்கியிருந்தனர். வீதி விசாலிக்கப்பட்டு தாரிடும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

ரூபா 45 லட்சம் வரை இந்த வீதிப் புனரமைப்புக்கென நிதியுதவி கிடைத்துள்ளதாகவும் தேவையான இடங்களில் மதகுகளை அமைக்கும் பொருட்டு வவுனியாவில் இருந்து குழாய்கள் எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் வேலணைப் பிரதேச சபை நயினாதீவு உப அலுவலகம் இந்த வீதித் திருத்தத்திற்கென ரூபா 5 லட்சம் நிதி உதவி வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (3-111)

## விபத்துகளில் மூவர் காயம்!

தென்மராட்சி,ஜூன்17

தென்மராட்சியில் கடந்த செவ்வாய்க்கிழமை அல்லாரை தெற்கில் இடம்பெற்ற விபத்தில் சிவசம்பு சிவயோகம் (வயது 18), சாவகச்சேரி, கச்சாய் வீதியில் இடம்பெற்ற விபத்தில் செல்லையா சின்னத்தம்பி (வயது 54), கெற்பேலிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் யு.பரமேஸ்வரன் (வயது 16) ஆகியோர் காயமடைந்தனர். இவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ-117)

## கரம்பைக் குறிச்சியில் 'வேரடிமண்' நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூன்17

கரம்பைக்குறிச்சி மேற்கு மாதர் சங்கமும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து நடத்தும் பாரம்பரிய கலை விளையாட்டு விழாவான 'வேரடி மண்' நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கரம்பைக் குறிச்சி மேற்கு பாலர் மைதான முன்றிலில் நடைபெறவுள்ளது.

மாதர் சங்கத் தலைவி அ.ஜெயராணி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிராம அபிவிருத்தி உத்யோகத்தர் எஸ்.உமாபாலன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக அகதிகள் புனர்வாழ்வு நிறுவன திட்ட உத்தியோகத்தர் ஆர். சுஜித்தா, கரம்பைக்குறிச்சி கிராம சேவையாளர் இ.மனோகரன், கரம்பைக்குறிச்சி அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த எஸ்.கந்தசாமி, அகதிகள் புனர்வாழ்வு நிறுவன முன்னாள் திட்ட உத்தியோகத்தர் நா.ஜெயந்தி ஆகியோர் கலந்துகொள்வர். (ஒ-204)

## டெனிஸ் நிறுவனத்தின் பிரதான அலுவலகம் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,ஜூன்17

யாழ்.மாவட்டத்தில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபடும் டெனிஸ் நிறுவனத்தின் பிரதான அலுவலகம் யாழ்ப்பாணத்தில் இயங்கவுள்ளது.

இத்தகவலை யாழ். செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டு அலுவ லக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

1996ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து குடாநாட்டில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபடும் டெனிஸ் நிறுவனத்தின் பிரதான அலுவலகம் வவுனியாவில் இயங்கி வந்தது.

அது தற்போது யாழ்ப்பாணம் வைமன் வீதியிலுள்ள ஒரு கட்டடத்தில் இயங்கவுள்ளது. (ஒ-13)

**Personal English Classes**

**G.A.Q., B.A.Part - I Revision and Paper**

**Mr.MAHESWARAN**
ஆரம்பம்: 18.06.2005
❖ 7.30 - 8.30
❖ 8.30 - 9.30 a.m.

**DCS நியூட்டன்** ஆரியகுளம் சந்தி அருகில் யாழ்.

(36617)(21-14-15-24)

**விற்பனைக்கு**

**A/L**
வணிகக்கல்வி -I
2006, 2007 பிரிவு
இ.செல்வநாயகம்
விலை 150 ரூபா
புத்தகசாலைகளில் உண்டு.

(36577) (21-14-15-24)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**வைத்திய கலாநிதி வை.தியாகராஜா J.P.**

**(தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை)**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய் அரிமாக் கழகம், வலி.கிழக்குப் பிரிவு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் இணைந்து நடத்திய சான்றோர் கௌரவிப்பு விழாவில்,

கல்வி, மருத்துவம், சமூக சேவை ஆகியவற்றில் சிறந்த முறையில் ஆற்றிய சேவையைக் கருத்திற்கொண்டு "கருமத்திருதி" என்னும் பட்டம் சூட்டியமையையிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளைச் சமூகம் அவரது சேவை மேன்மேலும் தொடரப் பாராட்டி வாழ்த்துகின்றது.

*73, கண்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

நிர்வாகிகள், அங்கத்தவர்கள்,
ஊழியர்கள், தொண்டர்கள்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை.

(சி-43462) (24-14-15)

## கூறுவிலை விற்பனை
## (Scaled Tender)

**வடபிராந்திய போக்குவரத்துச்சபை - யாழ். சாலை**

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பேருந்துகளில் இருந்து கழிக்கப்பட்ட பின்வரும் உதிரிப்பாகங்கள் கூறுவிலை விற்பனைக்காக யாழ். சாலையில் விடப்பட்டுள்ளன.

உடைந்த வில்லுத்தகடுகள், இரும்பு வகைகள், அலுமினியம், பாவித்த ரயர், ரியூப், பிளப், அடிச்சட்டம் போன்ற பொருள்களாகும்.

மேலே கூறப்பட்ட பொருள்களைக் கொள்வனவுசெய்ய விரும்புவோர் 20.06.2005 இற்கு பின்னர் "வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ் சாலையில்" சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய வேலை நாள்களில் காலை 9.30 மணியிலிருந்து மாலை 4 மணிவரை பார்வையிட அனுமதிக்கப்படுவர். மேலும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக ரூபா 1000/- உம், மீளளிக்கக்கூடிய வைப்புத் தொகையாக ரூபா 25,000/- உம் எமது பிராந்தியக் கணக்காளர், வ.பி.போ.சபை, கோண்டாவிலில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தங்கள் கூறுவிலைக் கோரிக்கைகளை அனுப்புவதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பலாலி வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தலைமைக் காரியாலயத்தில் விநியோக உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளவும். கொள்வனவுசெய்வதற்கான விண்ணப்பப் படிவங்களை 08.07.2005 இற்கு முன்னர் தலைவர், கூறுவிலைச் சபை, வ.பி.போ. சபை, பலாலி வீதி, கோண்டாவில் சாலை என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். 10.07.2005 காலை 10 மணிக்கு விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் பொழுது வ.பி.போ.சபை தலைமைக் காரியாலயத்திற்குத் தாங்கள் சமுகமளிக்கவேண்டும். இப்பொருள்கள் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்கப்படமாட்டா. பொருள்களின் பெறுமதியின் 25% இற்குரிய பணம் உடன் செலுத்தப்படுவதுடன், மிகுதிப்பணம் ஒருவார காலத்திற்குள் செலுத்தப்பட்டு இக்காலப்பகுதியில் பொருள்கள் சாலை வளவினுள் இருந்து எடுத்துச்செல்லப்படல் வேண்டும்.

தலைவர், கூறுவிலைச் சபை,
வ.பி.போ. சபை,
கோண்டாவில்.

(சி/43460)(32-14-15-24)

TAFREN
TASK FORCE FOR REBUILDING THE NATION

# POST TSUNAMI RECOVERY

### Rapid Imcome Recovery Framework
### District Livelihood Units

TAFREN with the assistance of the Internation Labor Organization is Facilitating communities affected by the Tsunami to regain their livelihoods. As part of this Initiative District Units are being established to provide critical services to District and Divisional Committess.

The following opportunities are now available in three districts.

- ❒ **District Livelihood Coordinators**
- ❒ **Livelihoods Database Officer**
- ❒ **Committee Facilitator / Trainer**

Attractive Salary packages are available for these positions to be based in the first instance in Galle, Batticoloa and Jaffna with additional opportunities to be made available in the other Isunami Affected Districts.

Eligibility criteria and detailed job Descriptions are available on the TAFREN website or by contacting Olinka Berenger.
E-maill Olinka @ tafren.gov.lk Telephion: 2426161
Website: www.tafren.gov.lk
Please submit written applications on or before 22nd June 2005
Livelihood Section
TAFREN
21, Janadhipathi Mawatha., Clombo 01.

(C/43461) (24)

# மின்சார சபையின் பணிகள் கிளிநொச்சியில் விஸ்தரிப்பு

கிளிநொச்சி,ஜூன்17

இலங்கை மின்சாரசபை கிளிநொச்சி மாவட்டத்தில் மின்விநியோகத்தை மேற்கொள்கிறது.

மின்பிறப்பாக்கி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் தற்போது சுமார் 60 பாவனையாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

திருநகர், பரந்தன், குமாரபுரம், இரத்தினபுரம ஆகிய பகுதிகளுக்கே மின்சாரம் விநியோகிககப்படுகின்றது. எனினும், பல இடங்களுக்கு மின் விநியோகத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இப்பகுதிக்குப் பொறுப்பான மின் அத்தியட்சகராக எஸ்.குமாரகுலசிங்கம் கடமையாற்றுகின்றார்.

இங்கு கடமையாற்ற ஊழியர் நியமனம் செய்யப்படவில்லை என்றும் -

யாழ்ப்பாணம் பகுதியில் கடமைபுரியும் ஊழியர்களைக் கொண்டே சுழற்சி முறையில் இவ் வேலைத்திட்டம் நிறைவேற்றப்படுகின்றது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(ஒ-81)

# மின்விநியோக மேம்பாடு குறித்து ஸ்கந்தபுரத்தில் கருத்தரங்கு

ஸ்கந்தபுரம்,ஜூன் 17

ஸ்கந்தபுரம் பிரதேசத்தில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடத்தப்பட்டு வரும் 'நறுமை' மின்வழங்கல் சேவையில் உள்ள குறைபாடுகள் மற்றும் மாற்று யோசனைகள் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொருண்மிய மாவட்டப் பொறுப்பாளர் செந்தில், கிளிநொச்சி கோட்டப் பொறுப்பாளர் மாறன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். அக்கராயன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் திருமாறன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

மின்கட்டணத்தில் குறைப்புச் செய்யுமாறும், மினவழங்கல் நேரத்தினை அதிகரிக்கச் செய்ய வேண்டும் எனவும் இதனால் மாணவர்கள் மற்றும் வர்த்தகர்கள் பயன்பெறமுடியும் எனவும் பிரதேச மக்கள் விடுத்த கோரிக்கை குறித்து ஆராயவே இச்சந்திப்பு ஒழுங்குசெய்யப்பட்டது.

எனினும், உடனடித்தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. மக்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டன. இதுகுறித்து விரைவில் நடவடிக்கைகள் எடுப்பதாகப் பொருண்மிய மாவட்டப் பொறுப்பாளர் தெரிவித்தார். (ஒ-381)



முழங்காவில் அரசினர் வைத்தியசாலையில் தொண்டு அடிப்படையில் சேவையாற்றுவோருக்குத் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் முழங்காவில் அபிவிருத்தி நிறுவனத்தினரால் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டன. மேற்படி நிறுவன இணைப்பாளர் சிவசாமி பயனாளி ஒருவருக்குப் பொருள்கள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)*

# முல்லைத்தீவு கல்வி வலயத்தில் ஆசிரியர்களுக்கு தொடருறு பயிற்சி

முல்லைத்தீவு,ஜூன்17

முல்லைத்தீவு கல்விவலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கு ஆசிரிய மத்திய நிலையம் நடத்தும் தொடருறு பயிற்சிநெறி இடம்பெறவுள்ளது.

ஆசிரியர் சேவை சம்பள அளவுத்திட்டங்கள், நிதிசார் விடயங்கள் மற்றும் தாபனக் கோவை பிரமாணங்கள் பற்றிய செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை முள்ளியவளை ஆசிரிய மத்திய நிலையத்திலும் -

அதே செயலமர்வு எதிர்வரும் 21ஆம் திகதி புதுக்குடியிருப்பு கல்வி வள நிலையத்திலும் -

தரம் 5 புலமைப்பரிசில் வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயற்பாடுகள் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 24, 25ஆம் திகதிகளில் முள்ளியவளை ஆசிரிய மத்திய நிலையத்திலும் இடம்பெறவுள்ளன.

சம்பந்தப்பட்ட செயலமர்வுகளுக்குப் பொருத்தமானவர்களைத் தவறாது அனுப்பிவைக்குமாறு முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

(ஒ-410)

# தாண்டிக்குளம் புனரமைப்பு

பரந்தன்,ஜூன்17

வவுனியாவில் உள்ள தாண்டிக்குளம் புனரமைக்கப்பட்டு வருகிறது. 10ஆயிரம் குளங்கள் புனரமைப்புத்திட்டத்தின் கீழ் இப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

வவுனியா மாவட்டத்தில் கோவில்குளம் கமநல கேந்திர நிலையத்திற்கு உட்பட்ட காணிகளுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட குளங்களில் தாண்டிக்குளம் புனரமைப்பு முதலில் இடம் பெறுகிறது.

இந்தப் புனரமைப்புப் பணியின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் வவுனியா மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் செ.இராகுலன், வவுனியா மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் தெய்வேந்திரம் மற்றும் கோவில்குளம், செட்டிகுளம், கனகராயன்குளம் ஆகியவற்றின் கமநல சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், கமக்கார அமைப்பினர், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-352)

# கால்நடை வளர்ப்பு குறித்த கலந்துரையாடல்

பரந்தன்,ஜூன்17

கால்நடை வளர்ப்பை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை வட்டக்கச்சியில் இடம்பெற்றது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வல் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட அரச கால்நடை மருத்துவர் மற்றும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் திட்டமிடல் பிரிவின் பொறுப்பாளர் கலைவாணன், செயலாளர் சி. அமிர்தலிங்கம், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மிகிந்தன் உட்பட பலரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

(ஒ-352)

# பனைமரங்களைத் தறிப்பதற்கு பொருண்மியம் தீவிர கட்டுப்பாடு

பரந்தன்,ஜூன்17

அருகிவரும் பனைவளத்தைக் காப்பாற்றுவதற்காகப் பனைமரம் தறிப்பதற்கான கட்டுப்பாடுகள் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்படும் என்று தமிழீழ பொருண்மிய நிறுவனம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழப் பிரதேசத்தில் பனைவளம் அருகி வருகிறது. பனைமரங்களைத் தறிப்பதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, கட்டட நிர்மாணங்களுக்கு இடையூறாகவோ அல்லது குடியிருப்புகளுக்கு அச்சுறுத்தலாகவோ அல்லது பட்டுப்போன நிலையிலோ உள்ள பனை மரங்கள் மட்டுமே தறிக்க அனுமதிக்கப்படும். அதிலும் தமிழீழ பொருண்மிய நிறுவனத்தின் இணைப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களது அனுமதியுடனேயே மேற்குறிப்பிட்ட நிலைமையில் உள்ள பனை மரங்கள் தறிக்கப்படவேண்டும்.

இதேவேளை, நல்ல நிலைமையிலுள்ள பனை மரங்களைத் தறிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. (ஒ-352)




# வன்னி வீதிகளில் புழுதி மண்டலம்; இதனால் மக்களுக்குப் பாதிப்பு!

உயிர் வாழ்வதற்கு மிகவும் முக்கியமானது காற்று. நாம் அனைவரும் சுவாசிக்கிறோம். ஆனால், நாம் சுவாசிக்கும் வளி மாசடைவதால் ஆரோக்கியம் கெடுகிறது.

குறிப்பாக வன்னிப் பிரதேசத்தைப் பொறுத்தவரை நகரமாக இருந்தாலும் கிராமமாக இருந்தாலும் வளி மிகவும் மாசு நிறைந்ததாகவே உள்ளது. இப்பகுதி வீதிகள், பெருந்தெருக்கள் மிக நீண்ட காலமாகவே புனரமைக்கப்படாது புழுதி நிறைந்ததாகக் காணப்படுகின்றன. இதினால், கோடைகாலங்களில் வாகனங்கள் செல்லும்போது புழுதிமண்டலமாக வீதிகள் மாறுகின்றன. இது மக்களின் சுவாசத்தினூடாக உட்சென்று பலவிதமான நோய்களை உண்டு பண்ணுகிறது.

இதனால், மிகவும் பாதிக்கப்படுவோர் மாணவர்களே ஆவர். அவர்களே அதிகமான நேரத்தை வெளியிலே செலவிடுகிறார்கள்.

**பாடசாலைகளின் அமைவிடங்கள்**

வன்னிப் பகுதியில் பெரும்பாலான பாடசாலைகள் பெருவீதிகள் அல்லது சிறுவீதிகள் அருகே அமைந்துள்ளன. இவ்வாறு அமைந்துள்ள பாடசாலைகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் படும் அவலம் சொல்லொணாத் துயரமாக உள்ளது.

வீதிப் புனரமைப்பின்போது அடிக்கட்டுமானமாக கற்கள் இடப்பட்டு தார் போடப்பட்ட வீதிகள் யாவும் செம்மண் கிரவலால் மூடப்படுவது வழக்கமாகி வருகிறது. இதேவேளை, புதிய வீதிகள் பலவும் அடிக்கட்டுமானம் இன்றி செம்மண் கிரவல் போடப்படுகின்றன. இவ்வாறு அமைக்கப்படும் வீதிகள் செப்பனிடப்பட்டு சிறிது காலம் சென்றதும் செம்மண் புழுதி பரவுகிறது. வாகனங்கள் அந்த வழியே செல்லும் போது இந்தப் புழுதி காற்றில் பறந்து புழுதி மண்டலமாகிறது.

இந்த வீதிகள் வழியே பாடசாலை மாணவர்கள் காலையிலே செல்லும்போது வெள்ளை நிற உடைகளை அணிந்து செல்கின்றனர். ஆனால், திரும்பிவரும்போது புழுதி படிந்த உடைகளாகவே அவை மாறிவிடுகின்றன. இதிலிருந்து அம்மாணவர்கள் எவ்வளவு அசுத்தக்காற்றைச் சுவாசிக்கின்றார்கள் என்பது புலனாகிறது.

நாம் சுவாசிக்கின்ற வளியில் உள்ள தூசுகளும் அசுத்த வாயுக்களும் சேர்ந்து தடிமன், மூக்கிலிருந்து நீர் வடிதல், நீண்டகால இருமல், இழுப்பு போன்ற பல விதமான நோய்களைச்

முழங்காவில், ஒட்டுசுட்டான் செய்தியாளர்கள்

சிறுயோர் முதல் பெரியோர்வரை அனுபவிக்க வைக்கின்றன.

வீதிகள் மட்டுமல்ல, மக்களால் வீசப்படும் கழிவுகள், இறந்த மிருகங்களை வீதியோரங்களில் வீசுவது. அப்படியே விட்டுவைப்பது, வீதியோரங்களில் மலங்கழிப்பது இப்படியான செயற்பாடுகளாலும் கொடிய நோய்களை நாம் எதிர்கொள்ள நேரிடும். வீதிகளை மாசுபடுத்தாது பார்த்துக்கொள்வது ஒவ்வொருவரின் கடமையாகும்.

**சுவாசத்தொற்று அதிகரிப்பு**

தற்போது வன்னிப் பிரதேசத்தில் சுவாச வளித் தொற்று அதிகரித்து வருவது மருத்துவ நிலையக் குறிப்புகளிலிருந்து தெரிய வருகிறது.

அண்மைக்காலங்களில் ஆஸ்துமா மற்றும் அதனோடு தொடர்புபட்ட நோய்களினால் பாதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். இதற்குக் காரணம் வளி மாசுபடுதலே. இதனால், பாடசாலை மாணவர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட வாய்ப்பாக உள்ளது.

ஆகவே, வீதிகளின் புனரமைப்பு அல்லது அமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்போது தார் வீதிகளைச் செம்மண் வீதிகளாக மாற்றுவது எவ்வகையிலும் பொருந்தாது என்று பொதுமக்கள் தரப்பில் கூறப்படுகிறது.

ஆகவே, சுற்றுச்சூழலை மாசுபடுத்தி பொதுமக்களின் ஆயுளைக் குறைக்கும் வகையில் வீதிகள் அமைக்கப்படுவதைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தடுக்கவேண்டும் என்பதே வன்னி மக்களின் எதிர்பார்ப்பாகும்.

# உப்பளத்தில் அறுவடைவிழா

கிளிநொச்சி,ஜூன் 17

ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தின் 2005ஆம் ஆண்டுக்கான அறுவடை விழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை குறிஞ்சாத்தீவு உப்பு உற்பத்தி நிறுவனத்தில் நடைபெற்றது.

குறிஞ்சாத்தீவு உப்பு உற்பத்தி நிறுவனப் பொறுப்பாளர் எஸ்.புஸ்பராசா, தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் மற்றும் துறைசார் அலுவலர்கள், பணியாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சம்பிரதாய பூர்வமாக உப்பு அறுவடையை ஆரம்பித்து வைத்தார். (ஒ-305-203)

# வருமான அதிகரிப்புத் திட்டத்தில் அக்கராயனில் பொருளுதவிகள்

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் 'நொராட்' மற்றும் 'போரூட்' நிதியுதவியுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தால் கண்ணகைபுரம் கிராம அலுவலர் பிரிவில் நடைமுறைப்படுத்தப்படும் வருமான அதிகரிப்புத் திடடப் பயனாளிகளுக்கான உதவி வழங்கும் நிகழ்வு சமீபத்தில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வு நிறுவன இணைப்பாளர் ம.சுதர்சன் தலைமையில் நடைபெற்றது. தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவிப் பணிப்பாளர் கோ.நல்லையா, அக்கராயன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் மாறன், 'போரூட்' நிறுவன வெளிக்கள அலுவலர் செல்வி சிவனேஸ்வரி ஆகியோர் இதில் சிறப்புரை வழங்கினர்.

இந்நிகழ்வில் வருமானத் திட்டத்திற்கான பொருள்களாகக் கோழி வளர்ப்போருக்கு கோழிக் கூடும் ஆடு வளர்ப்போருக்கு ஆடுகளும் மீன் வியாபாரம் செய்வோருக்கு சைக்கிள்களும, சிறு வியாபாரம் செய்வோருக்குத் தராசுகளும் வழங்கப்பட்டன.

இவற்றினை நிகழ்வில் கலந்துகொண்ட தமிழீழ காவல் துறையின் அக்கராயன் பிரதேசப் பொறுப்பாளர் நவநீதன், பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் மாறன், தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவிப் பணிப்பாளர் நல்லையா மற்றும் 'போரூட்' நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் வழங்கினர். (ஒ-381)





மாமனிதர் பேராசிரியர் துரைராஜாவின் 11ஆம் ஆண்டு நினைவுநாள் நேற்றுமுன்தினம் மாலை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றுவதையும் பொதுச் சுடரினை யாழ்.பல்கலைக்கழக ஊழியர்சங்கத் தலைவர் சி.தங்கராஜா, வணிக முகாமைத்துவ பீடாதிபதி க.தேவராஜா ஆகியோர் ஏற்றுவதையும்

மாமனிதரின் திருவுருவப்படத்துக்கு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: பிரபா)*

# ஆங்கில மொழிக்கல்வி அபிவிருத்திக்கு 'வெளிச்ச வீடு பாடசாலை' திட்டம்

## கருத்தரங்கில் வள ஆசிரியர் விளக்கம்

**கடந்த முதலாம் திகதி வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற வெளிச்ச வீட்டுப் பாடசாலையில் பெற்றோருக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் தொகுப்பு இது.**

அடுத்த ஆண்டில் சமயம், மொழி, கணிதத்துடன் ஆங்கிலமும் கட்டாய பாடமாகிறது. தாய்மொழிக் கல்வித்திட்டத்தினால் ஆங்கிலம் பின்தள்ளப்பட்டபோதும் அதன் முக்கியத்துவம் இப்போது மீண்டும் உணரப்படுகிறது. அதன் வெளிப்பாடாகவே 'வெளிச்சவீடு பாடசாலை' திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது எனலாம் என்று தெரிவித்தார் வள ஆசிரியர் லெஸ்லி.

கடற்கரையில் அமைந்திருக்கும் வெளிச்ச வீடுகள் கடலோடு சம்பந்தப்பட்ட அனைவருக்கும் எவ்வாறு உதவுகின்றனவோ அதேபோல, பாடசாலை வெளிச்சவீடும் கல்வியோடு தொடர்புடையவர்களுக்கு உதவுகிறது.

உலக வங்கியின் உதவியுடன் கல்வி அமைச்சு, கல்வித்திணைக்களம், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், வள ஆசிரியர், சிரேஷ்ட ஆங்கில ஆசிரியர்கள், யூனெஸ்கோ, ஏசியா பவுண்டேசன் பிரிட்டிஷ் கவுண்சில், றெஸ்க் போன்ற கல்விசார் நிறுவனங்கள், துறைசார் நிபுணர்கள், கொடை வள்ளல்கள் நலன்விரும்பிகள் எனப் பலரும் இதனுடன் தொடர்புடையவர்களாயினும் பிரதான பயனாளிகள் மாணவர்களே என்று விளக்கினார் அவர்.

### பெற்றோருக்கும் பங்கு

வீடு, சமூகம், பிரதேசம், நாடு என்பன இதனால் பயனடைகிறது. எனவே, பெற்றோர்கள் பங்காளிகளாக இருந்தால் மட்டுமே இத்திட்டம் வெற்றிபெறும் என்பதால் வெளிச்ச வீடு பாடசாலை பெற்றோர்களுக்கான இந்தக் கருத்தரங்கு இடம்பெறுகிறது எனவும் வள ஆசிரியர் லெஸ்லி குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐந்து வலயங்களிலும் ஐந்து வள அறைகள் உள்ளன. யாழ். வலயத்திற்கான வள அறை வைத்தீஸ்வரா கல்லூரியில் அமைந்துள்ளது.

வெளிச்சவீடு பாடசாலை வள அறையூடாக வசதி குறைந்த பயிறறப்பட்ட ஆங்கில ஆசிரியர்களற்ற பாடசாலைகளில் வேறு பாடங்களைப் படிப்பிக்கும் ஆசிரியர்கள் (Non English Teachers) ஆங்கிலம் கற்பிப்பதுண்டு. இவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கமுடியும்.

சிறுவர்களுக்கு உகந்த ஆங்கில சிறுகதைகள் இலகுவானதாக உள்ள நூல்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள், ஓகன் போன்ற இசைக் கருவிகள் எனப் பல தரப்பட்ட பொருள்கள் இங்கு உள்ளன. சிறுவர்கள் இவற்றைத் தமது விருப்பம போல் கையாண்டு படிக்க வாய்ப்புகள் இருக்கின்றன.

வகுப்பறையில் ஒரு வரையறை இருககிறது. இங்கே அது இல்லை. எந்தவேளையிலும் எவரும் வந்து படிக்க முடியும். அதிபரின் சிபார்சுடன் பிள்ளைகளை அழைத்து வந்து தங்கி நின்று படிக்கவும் வாய்ப்புகள் உண்டு. (English Education Camp) ஆங்கில கல்வி முகாம என இது கூறப்படும். பிள்ளைகளுக்கு உரிய வசதிகள் செய்துதரப்படும். வள அறையில் இருந்து பிள்ளைகள் விருப்பமான எதையும் எடுத்துச்சென்று பின் ஒப்படைக்கமுடியும். பாடத்திட்டத்திற்கு அப்பால் ஆங்கிலத்தை மாணவர்களிடையே எவ்வாறு கொண்டு செல்லமுடியுமோ அவ்வாறு அதை இந்த வெளிச்சவீடு பாடசாலை செய்கிறது.

பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம் என்றெல்லாம் போட்டிகள் நடைபெறுகின்றன. பல பாடசாலைகளில் திறமையிருந்தும் வசதிகுறைவால் மாணவர்கள் தமது திறமையை வெளிப்படுத்த முடியாத நிலையில் போட்டிகளிலேயே கலந்துகொள்ள முடியாதவர்களாகிறார்கள். மாணவர்களைத் தயார்ப்படுத்த வசதியற்றவர்களாக ஆசிரியர்கள் கஷ்டப்படுகிறார்கள். இந்த நிலையை வள அறை இல்லாமல் செய்கிறது. என்று விளக்கினாராம்.

### ஆங்கிலத்தின் அவசியம்

தொழில்துறைகள், உயர்கல்விக்கு ஆங்கிலம் முக்கியமாகிறது. இன்று பலருக்கு வெளிநாடு சென்று வேலைபார்க்கவேண்டும் என்ற ஆசை இருக்கின்றது. ஆங்கிலம் தெரியாமல் அங்கே எவ்வாறு உயர்நிலையை எட்டமுடியும்?

உலகவங்கி இதற்கான நிதியை வழங்குகிறது. ஒரு சதம்கூடச் செலவு இல்லாமல் வெளிச்சவீடு பாடசாலை மூலம் ஆங்கில அறிவைப் பெறக்கூடிய வாய்ப்பு இப்போது மாணவர்களுக்குக் கிட்டியுள்ளது.

மாணவர்களே பயனாளிகள். என்றாலும் பெற்றோர்களின் உதவியும் விழிப்புணர்வுமே அவசியம் என்றார் வள ஆசிரியர் லெஸ்லி. ஆசிரியர்களுக்கு வசதி இல்லையெனின் பெற்றோர்கூடத் தமது பாடசாலை அதிபரின் சிபாரிசுக் கடிதத்துடன் பிள்ளையை வள அறைக்கு அழைத்துச் செல்லமுடியும் - என்றார்.

வள அறையைத் தேடி மாணவர்கள் வரவேண்டும் என்பதல்ல, வசதிகள் குறைந்த கிராமப் புறங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களைத் தேடி வள அறையும் செல்லும். ஒரு கிராமத்தில் தங்கி நின்று செயற்பட வேண்டியபோது சில உதவிகளைப் பெற்றுக்கொள்ள பழையமாணவர் சங்கம் பாடசாலை அபிவிருத்திச் சபைகளை நாடலாம். உதவியை மட்டும் நீங்கள் வழங்கினால் போதும் பணம் செலவு என்றெல்லாம் நீங்கள் யோசிக்கத் தேவையில்லை.

ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சியும் புலமையும்பெற வெளிச்சவீடு பாடசாலை மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. உங்கள் பிள்ளைகளின் வள அறை உங்கள் பிள்ளைகளுக்கு உன்னத எதிர்காலத்தை வழங்கத் தயாராக இருக்கிறது. கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தும் விழிப்புணர்வு பெற்றோர்களுக்கு ஏற்படவேண்டும் என ஒவ்வொரு பெற்றோர்களையும் வெளிச்சவீட்டுப் பாடசாலை கேட்கிறது. ✣

தொகுப்பு:
**நெடுந்தீவு லக்ஸ்மன்**


உ

**புங்குடுதீவு**

**பாரதி சனசமூக நிலைய புதிய கட்டடத் திறப்புவிழா**

**இன்று (17.06.2005) வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உயர்திரு மாவை. சேனாதிராஜா அவர்களால் திறந்துவைக்கப்படும். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**புங்குடுதீவு.** **நிர்வாகத்தினர்.**

(36360(38-15-45-42)

**GREEN INN RESTAURANT**

FOR ALL OUR CUSTOMERS AND FRIENDS

WE PROUDLY OPEN OUR OUT DOOR CATERING SERVICE AND TAKE AWAY COUNTER ON 18th JUNE 2005

(AVAILABLE ALL KIND OF CHINESE & SRILANKAN FOODS AT OUR TAKE AWAY COUNTER)

ALSO WE UNDERTAKE SPECIAL ORDERS FOR WEDDING, BIRTHDAY AND ALL OTHER SPECIAL FUNCTIONS)

எமது வாடிக்கை யாளர்களுக்கும் நண்பர்களுக்கும்

எமது நிறுவனத்தின் உணவு வழங்கும் பிரிவை 18.06.2005 முதல் தொடங்க இருக்கின்றோம் என்பதைப் பெருமையுடன் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

சைனீஸ் மற்றும் இலங்கை உணவு வகைகள் யாவும் பார்சல்சேவை மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

திருமணம், பிறந்தநாள் மற்றும் ஏனைய வைபவங்களுக்கும் எமது வெளிப்புற சேவையை முன்கூட்டி ஓடர்செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**No. 60, கண்டி வீதி,**
**சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.**
**Tel.: 021 222 3898, Fax: 021 222 2298, Mobile: 077-6917030.**

(36635) (42-15-45)

**பெண்பணியாளர் தேவை**

கீழ்க்காணும் ஸ்தாபனத்தில் கணக்குப்பதியுநர் வேலைக்கு பெண் பிள்ளைகள் தேவை. (மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)

முகவரி:

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,**
**ஒஸ்மானியா கல்லூரி வீதி,**
**ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.**
**T.P.: 4590008.**

(36336) (42-15-45)

**நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்**
**CENTRE FOR HEALTH CARE**
Reg No. L-85305

**Psychosocial Project Manager**

Excellent opportunity for enthusiastic, energetic and competent project managers. Several opportunities to travel around Srilanka with very attractive salary and benefits.

**Candidates**

1. must have at least 3 passes in A/L
2. must be able to communicate (written & spoken) in English
3. must be computer literate and have experience in MSOffice
4. must be able to network with I/NGOs & government psychiatrists
5. must have previous experience in preparing project proposals
6. must be a good team player
7. working experience in the public/private health sector would be an advantage (Public health inspector, Medical Nurse or Psychosocial health worker backgrounds would be preferred)
8. awareness of or working experience in MSProject would be an advantage
9. interests in sports would be an advantage

Please send your Curriculum Vitae (CV) to the following address before 30 June 2005:

**Head Office,**
**Centre for Health Care,**
A9 Road, Kilinochchi, Sri Lanka

(A/43473)

# ‘அஸ்ரா’ கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி; யாழ்.இந்து, சென்பற்றிக்ஸ் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜுன்17

‘அஸ்ரா’ கிண்ணத்திற்காக அகில இலங்கை ரீதியில் பாடசாலை அணிகளுக்கு இடையில் - 17 வயதுப் பிரிவினருக்கான - கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ்.இந்துக்கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிகள் வெற்றிபெற்றன.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக்கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 153 ஓட்டங்களைப்பெற்றது. இதில், கிருபேசன் 41 ஓட்டங்களையும் நேசவர்மன் 24 ஓட்டங்களினையும் கௌதமன் 24 ஓட்டங்களினையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கௌசிகன் 15 ஓவர் பந்து வீசி 34 ஓட்டங்களினைக் கொடுத்து 3 விக்கெட்டினையும் மயூரப்பிரியன் 10 ஓவர் பந்து வீசி



சென்.ஜோன்ஸ் - யாழ்.இந்து மோதிலில்...

32 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டினையும் யாதவன் 4 ஓவர் பந்துவீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 2 வித்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக்கல்லூரி அணியினர் 8 விக்கெட்டினை இழந்து 168 ஓட்டங்களைப்பெற்றனர்.

மயூரப்பிரியன் 34 ஓட்டங்களினையும் நவயோகன் 78 ஓட்டங்களையும் பெற்றனர்.

வினேஸ்குமார் 15 ஓவர் பந்துவீசி 43 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டினையும் அக்சேயன் 13 ஓவர் பந்துவீசி 24 ஓட்டங்களையும் கொடுத்து 2 விக்கெட்டினையும் யனுஸ்சன் 8 ஓவர் பந்துவீசி 21 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மற்றோர் ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினர்



சென்.பற்றிக்ஸ் - கொக்குவில் இந்து மோதலில்...

சகலவிக்கெட்டினையும் இழந்து 118 ஓட்டங்களினைப் பெற்றது.

ஜெயந்திரன் 12 ஓட்டங்களையும் ஜெனராஜ் 17 ஓட்டங்களையும் யூட்சன் 17 ஓட்டங்களையும் ஜக்சன் 11 ஓட்டங்களையும் பத்மமுரளி 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

கொக்குவில் இந்துக்கல்லூரி அணி வீரர்களான சுஜான் 11 ஓவர் பந்துவீசி 29 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டினையும், வினோஸ்கன் 8.4 ஓவர்பந்துவீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய கொக்குவில் இந்துக்கல்லூரி அணியினர் சகல விக்கெட்டினையும் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றது.

வினோசன், 15 ஓட்டங்களையும் சிவஸ்கர் 08 ஓட்டங்களையும் ஜெயறூபன் 06 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

சென்.பற்றிக்ஸ்கல்லூரி அணிவீரர்கள் கொலின் 9 ஓவர் பந்து வீசி 19 ஓட்டங்களினைக் கொடுத்து 4 விக்கெட்டினையும் ஜெனன்ராஜ் 5 ஓவர்பந்துவீசி 14 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டினையும் யூட்சன் 4 ஓவர் பந்துவீசி 10 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை இரண்டாம் இன்னிங்ஸுக்காக மீண்டும் துடுப்பாடப் பணித்தது. ஆட்ட நேரம் முடிவடையும் போது கொக்குவில் இந்துக்கல்லூரி 8 விக்கெட் இழப்பிற்கு 96 ஓட்டங்களினைப் பெற்றது.

செந்தூரன் 21 ஓட்டங்களையும் வகிசன் 10 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். இதனால், போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்த போதும் முதல் இனிங்சில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றதால் அந்த அணிக்கு வெற்றி அளிக்கப்பட்டது.

இச்சுற்றுப் போட்டியில் முதல் இன்னிங்ஸ் முடிவுப்படியே வெற்றி வழங்குவது குறிப்பிடத்தக்கது. (3-190)

## 100 மீற்றர் ஓட்டத்தில் சாதனை படைப்பு

கிரீஸின் தலைநகரம் ஏதென்சில் உலக தடகளப் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன.

இந்த தடகளப் போட்டிகளில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஜமைக்கா நாட்டு வீரரான அசபா பவல் புதிய உலக சாதனையைப் படைத்துள்ளார்.

இவர் தனது ஓட்டத் தூரத்தை 9.77 வினாடிகளில் கடந்து புதிய உலக சாதனையை படைத்துள்ளார்.

இதற்கு முன்னர் பிரான்சில் நடைபெற்ற 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் டிம்மான் கொமெரி 9.78 வினாடிகளில் ஓட்டத் தூரத்தைக் கடந்து சாதனையை படைத்திருந்தார். இவரது சாதனையைத் தற்போது அசபா பவல் முறியடித்துள்ளார். (3-203)

## வை.எம்.சி.ஏயின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜுன்17

யாழ்.வை.எம்.சி.ஏயினால் அங்கத்தவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட உள்ளக விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் கடந்த வாரம் யாழ்.வை.எம்.சி.ஏ பொதுமண்டபத்தில் இடம்பெற்றது.

இப் பரிசளிப்பு விழாவிற்கு முன்பதாக சிறப்பு நிகழ்வாக காட்சி மேசைப்பந்தாட்டப் போட்டி இடம்பெற்றது. (3-190)

## முன்பள்ளியின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜுன்17

நவக்கிரி எல்லாளன் முன்பள்ளியின் விளையாட்டுவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நவக்கிரி வாணி முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

க.சயந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் சிறப்புவிருந்தினர்களாக தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் இ.ஜெயராஜ், சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி ந.ஜெகதீசன், புத்தூர் உப அலுவலகப் பொறுப்பாளர் இ.ஜெயகாந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (3-203)

## ஞாயிறு, திங்கள் நடக்கும் ஆட்டங்களின் விவரம்

அஸ்ரா கிண்ணத்திற்காக அகில இலங்கை ரீதியில் பாடசாலை அணிகளுக்கு இடையில் 17வயதுப் பிரிவினருக்காக நடத்தப்பட்டுவரும் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் திங்கட்கிழமையும் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

**ஞாயிற்றுக்கிழமை**

**‘ஏ’ பிரிவு**

★ விக்டோறியாக் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி (விக்டோறியா மைதானம்)

★ யாழ்.இந்துக் கல்லூரி எதிர் ஹாட்லிக் கல்லூரி (யாழ்.இந்து மைதானம்).

**‘பி’ பிரிவு**

★ ஸ்கந்தா எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் (ஸ்கந்தா மைதானம்),

★ யூனியன் கல்லூரி எதிர் யாழ்.மத்திய கல்லூரி (யூனியன் மைதானம்).

**திங்கட்கிழமை**

**‘ஏ’ பிரிவு**

★ சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் சென்.ஜோன்ஸ் கல்லூரி (சென்.பற்றிக்ஸ் மைதானம்).

**‘பி’ பிரிவு**

★ யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் கிளிநொச்சி ம.வி. (யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்). (3-190)

## சர்வதேச ஒலிம்பிக்குழு வெளியிட்ட அறிக்கையில் புதிய விளையாட்டுக்களுக்கு அனுமதியில்லை

சர்வதேச ஒலிம்பிக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் புதிய போட்டிகள் சேர்க்கப்படுவது குறித்து தகவல் ஏதும் இடம்பெறவில்லை.

தற்போது ஒலிம்பிக்கில் 28 வகையான விளையாட்டுக்கள் இடம்பெற்றுள்ளன. இதுவரை ஒலிம்பிக்கில் இடம்பெறாத 5 விளையாட்டுக்களை இதில் மேலதிகமாக சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. ஆனால், சர்வதேச ஒலிம்பிக் குழு வெளியிட்ட அறிக்கையில் அது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

எதிர்வரும் ஜூலை 8 இல் சிங்கப்பூரில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் திட்ட தலைமையகக் கூட்டத்தில் புதிய விளையாட்டுக்களை சேர்ப்பது தொடர்பாக ஒலிம்பிக்குழு பரிந்துரைக்கவில்லை. அப்படி பரிந்துரைக்கும் பட்சத்தில்தான் அந்த உறுப்பினர்கள் புதிய விளையாட்டுக்களுக்கு வாக்களிக்கமுடியும்.

தற்போது, நடைமுறையில் உள்ள 28 போட்டிகளுடன் ஸ்குவாஷ், ரக்பி, கோல்வ், கராத்தே மற்றும் ரோலர் ஸ்போர்ட்ஸ் ஆகிய புதிய விளையாட்டுக்களை ஏதென்ஸில் வகுக்கப்பட்ட 33 நெறிமுறைகளுக்கு ஏற்ப ஒலிம்பிக்குழு பரிசீலித்துப் பார்த்தது.

சர்வதேச அளவில் விளையாட்டுக்கு உள்ள மதிப்பு, தொலைக்காட்சி ஒளிபரப்பு, பத்திரிகையில் இடம், பெண்களுக்கு வாய்ப்பு, மற்றும் டிக்கெட் விற்பனை ஆகியன இதில் கணக்கில் கொள்ளப்பட்டன. தற்போதுள்ள 28 வகையான விளையாட்டுக்களும் சிங்கப்பூர் தலைமைக்குழு உறுப்பினர்களிடம் வாக்கெடுப்புக்கு விடப்படும். அதில் ஏதாவதொரு விளையாட்டுப் போதுமான வாக்குகளைப் பெறாவிட்டால் 2012 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டியிலிருந்து அவ்விளையாட்டு நீக்கப்படும். அதற்குப் பதிலாக புதிய விளையாட்டு ஒன்று சேர்க்கவும் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

கடந்த வாரம் ஜெனீவாவில் நடைபெற்ற ஒலிம்பிக்குழு உறுப்பினர்களின் சந்திப்பின்போது, தற்போதுள்ள 28 விளையாட்டுக்கள் நன்றாக இருப்பதால் அதை அப்படியே வைத்துக்கொள்வது என்று தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது. இதனால், தற்போதுள்ள விளையாட்டுக்களுக்கு ஆபத்து இல்லை. அதே சமயம் புதிய விளையாட்டுக்களும் இடம்பெற வாய்ப்பில்லை. (க-3)

## வழுக்கையைத் தடுக்க வோர்ன் நவீன சிகிச்சை



ஆஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் வோர்ன் தலை வழுக்கையைத் தடுக்க நவீன சிகிச்சை ஒன்றை மேற்கொண்டார்.

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோர்னிற்கு தலையில் உள்ள முடிகள் சில நாள்களாகக் கொட்டி வருகின்றன. இதனால் சீக்கிரமே அவருக்கு வழுக்கை விழக்கூடிய நிலை உள்ளது. இதைத் தடுத்துநிறுத்த வோர்ன் விரும்பினார்.

இதற்காக அவர் சிட்னியில் உள்ள பிரபலமான மருத்துமனையில் விசேட சிகிச்சை பெற்றார். அவருக்குக் கதிரியக்க கருவிகள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது. இதன் மூலம்முடிகளுக்கு உயிர்சத்து ஏற்றப்பட்டது. சில முக்கிய மாத்திரைகளையும் வோர்ன் சாபபிட்டார்.

இதுகுறித்து வோர்ன் கருத்து வெளியிடுகையில்:-

“நான் இப்போது பெற்றுள்ள சிகிச்சையால் தலைமுடி உதிர்ந்த இடத்தில் மீண்டும் முடி வளரும், அதுபோல தற்போதுள்ள முடி உதிர்வதும் நின்றுவிடும்”-என்றார். (க-3)

விளையாட்டு

## ஆஸியை வீழ்த்தியது சமர்செட் 4 விக்கெட்டுக்களால் வெற்றி

### ஸ்மித், ஜயசூரிய அதிரடிச் சதம்

சமர்செட் கவுண்டி அணிக்கும் - ஆஸ்திரேலிய அணிக்குமிடையே நேற்றுமுன்தினம் டோவுண்டனில் நடைபெற்ற பயிற்சி ஒருநாள் ஆட்டத்தில் ஸ்மித், ஜயசூரியவின் அதிரடிச் சதங்களால் சமர்செட் அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றியடைந்தது.

இதன்படி பயிற்சி ஆட்டங்களில் ஆஸ்திரேலிய அணிக்கே கிடைக்கும் இரண்டாவது தோல்வி இதுவாகும்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடியது. அனைத்து வீரர்களுமே மிகவும் அதிரடியாக ஆட ஆஸ்திரேலியாவிற்கு ஓட்டங்கள் குவிந்தன.

அணித்தலைவர் பொர்ன்ரிங், கில்கிறிஸ்ட்ட, கிளார்க் ஆகியோரின் ஆட்டம் மிகச் சிறப்பாக இருந்தது.

50 ஓவர்கள் முடிவில் அந்த அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 342 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பாக பொன்ரிங் 80 ஓட்டங்களையும், கில்கிறிஸ்ட்ட 76 ஓட்டங்களையும், கிளார்க ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சமர்செட் அணி சார்பாக ஸ்மித், ஜயசூரிய, பிரான்ஸிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

343 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற கடின இலக்குடன் பதிலளித்தாடியது சமர்செட், ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக தென்னாபிரிக்க அணித்தலைவர் கிரஹம் ஸ்மித்தும், இலங்கை அதிரடி வீரர் சனத் ஜயசூரியவும் களமிறங்கினர்.

இவர்கள் மிகச் சிறப்பாக ஆடி ஒட்டங்களைக் குவித்தனர். முதலாவது விக்கெட்டுக்கு இணைப்பாட்டமாக இவர்கள் 197 ஓட்டங்களைக் குவித்தனர்.

ஸ்மித் 74 பந்துகளில் 108 ஓட்டங்களை அடித்தார். இதில் 17 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கும். அதேபோல ஜயசூரிய 79 பந்துகளுக்கு முகம்கொடுத்து 101 ஓட்டங்களைப் பெற்றார். இதில் 9 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கும்.

இவர்களுக்கடுத்து வந்த வீரர்கள் சற்றுத் தடுமாறினாலும்கூட தொடக்க வீரர்கள் ஏராளமாக ஓட்டங்களைக் குவித்துவிட்டதால் சமர்செட் அணி எளிதாக வெற்றிபெற்றது. 46.5 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 345 ஓட்டங்களைப் பெற 4 விக்கெட்டுக்களால் இந்த அணி வெற்றியடைந்தது.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக மெக்ராக், ஹஸி தலா 2 விக்கெட்டுக்களையும், வொட்சன், கிளார்க் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். (க-3)

# யாழ்.வீடமைப்புத் திட்டப் பயனாளிகளுக்கு முதல் பகுதி கொடுப்பனவு வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூன்17

வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு முதலாவது கட்டக்கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன், யாழ்மேலதிக அரசஅதிபர் ஆ.சிவசுவாமி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சார்பில் மதனராஜன் மற்றும் தமிழர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிறேமச்சந்திரன், பத்மினி சிதம்பரநாதன், மா.க.ஈழவேந்தன், கி.சிவநேசன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் பிரதேச செயலர்கள், பயனாளிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் பிரமுகர்கள் குறிப்பிட்டதாவது:

## அரச அதிபர்

இவ்வீடமைப்புப் பணிக்கென வழங்கப்படும் 2இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவில் வீடு ஒன்றைக் கட்டுவது கடினமானதுதான். எமது பிரதேசத்தில் மூலப்பொருள்கள், தொழிலாளர் பற்றாக்குறை, மக்களின் பங்களிப்பு இன்மை என்பவை இப்பணிக்குப் பெரும் சவாலாக உளளன. இந்தச் சவாலை நாங்கள் ஏற்று வெற்றி கொள்வோம் என்றார்.

## சுரேஷ் பிரேமச்சந்திரன்

எமது பிரதேசத்தில் 3 லட்சத்து 21 ஆயிரம் வீடுகள் யுத்தத்தால் முழுமையாகவும் பகுதியாகவும் அழிக்கப்பட்டன. அவற்றில் 31 ஆயிரம் வீடுகளைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. இத்திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் 10 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்க ஏற்பாடாகியுள்ளது. இவ்வீடுகள் யாவும் அடுத்து வரும் 4-5 வருடங்களுக்குள் கட்டி முடிக்கப்படவேண்டும்.

இதைவிட சுனாமி அனர்த்தத்தாலும் எமது பிரதேசத்தில் பல ஆயிரம் வீடுகள் அழிவடைந்துள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இவ்வருடம் ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கு மட்டுமே அனுமதி கிடைத்துள்ளது. இது அடுத்த வருடம் 3, 4 மடங்காக மாறினால்தான் இந்த 10 ஆயிரம் வீடுகளும் கட்டிமுடிக்கப்படும். இதற்கு பிரதேச செயலர்களும், கிராம சேவகர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

## சிவாஜிலிங்கம்

யுத்தம் மோசமடைந்த காலத்திலிருந்து 20 வருடங்கள் கழித்துத்தான் யுத்தத்தால் சேதமடைந்த வீடுகளை மீளக் கட்டியெழுப்பும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் எமது பகுதிக்கென அனுப்பப்பட்ட சர்வதேச நிவாரணங்களில் பல கோடி ரூபா மோசடி நடந்துள்ளது. றான் திட்டத்தில் கூட கோடிக்கணக்கான ரூபா மோசடி நடந்தது. இது வெளிவரவில்லை.

ஆனால் இது போன்ற நிலை எமக்கு இத்திட்டத்தில் ஏற்படாது. இத்திட்டம் சிறந்த வழிநடத்தலுடன் நடத்தப்படும்.

## மாவை சேனாதிராசா

எமக்கு மிகவும் கவலையும் வேதனையும் தரக்கூடிய விடயம் அரசின் புனர்வாழ்வு அமைச்சு எமது மக்களை மிக மோசமாக புறக்கணித்தமையே. ஒரு பொது நிறுவனம் மலசல கூடம் அமைப்பதற்கு ஒன்றுக்கு 55 ஆயிரம் ரூபாவை வழங்கியது. ஆனால் புனர்வாழ்வு அமைச்சு கடந்த காலங்களில் எமது மக்களின் வீடுகளைப் புனரமைப்பதற்கு 25 ஆயிரம் ரூபா, 35 ஆயிரம் ரூபா என்றுதான் கொடுத்தது. பிறகு அது 1.50 லட்சமாகி தற்போது 2.5 லட்சம் ரூபாவாக மாறியுள்ளது.

எமது பிரதேசத்தில் பல ஆயிரம் குடும்பங்களுக்கு வீடு கட்டுவதற்கு நிலமில்லாத பிரச்சினை உள்ளது. யாழ்.குடாநாட்டு நிலப்பரப்பில் 30 வீதம் உயர்பாதுகாப்பு வலயமாக உள்ளது, அவை அனைத்தும் மக்களின் குடியிருப்புக்களே. ஆழிப்பேரலை அனர்த்தத்தினாலும் கடற்கரைப் பிரதேச காணிகளை எமது மக்கள் இழந்துள்ளனர். இதனால் எமது மக்களுக்கான வீடுகளை அமைப்பதில் பெரும் சிக்கல் எழுந்துள்ளது.

இப்போது எமது பிரதேசத்தில் குடிதண்ணீர்ப் பிரச்சினை பாரிய அளவில் எழுந்துள்ளது. சிறந்த நீரைப் பெற்ற திருநெல்வேலிப் பிரதேசத்தில் கூட தற்போது நீர் மாசடைந்துள்ளது. இது சுகாதாரக் கண்காணிப்பாளர்களின் கவனயீனம் என்றே சொல்லவேண்டும்.

எமது பிரதேசத்தில் மழைநீர் சேகரிப்பு என்பது மிக அவசியம். இதற்கான முயற்சியை நாம் எடுக்கவேண்டும்.

20 ஆண்டுப் போரினால் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் 9 லட்சம் குழந்தைகள் முழுமனிதனாக வாழும் ஆற்றலற்றிருக்கிறார்கள். 70 ஆயிரம் பிள்ளைகள் பாடசாலைக் கல்வியிலிருந்து விலகி வாழுகின்றார்கள்.

## யாழ்.அரச அதிபர் கே.கணேஷ்

காணி தொடர்பாக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக விசேட காணிகளை இனங்கண்டு மக்களுக்கு வழங்குவது தொடர்பாக செயற்பட்டு வருகின்றது.

குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆசிய வங்கியின் நிதியுதவியுடன் குடிதண்ணீர் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வருட இறுதிக்குள் இவ்வாராட்சி முடிவடையும் மழைநீர் சேகரிக்கும் திட்டம் தொடர்பான ஆராட்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எமது பிரதேசத்தின் கல்வியை மேம்படுத்துவதற்கு யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## திட்டப்பணிப்பாளர் செ.பத்மநாதன்

எமது திட்டத்தின் மூலம் நான்கு வருடங்களில் வடக்கு - கிழக்கின் எட்டு மாவட்டங்களில் 31 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன. சுனாமியால் பாதிக்கப்பட்ட 15 ஆயிரம் வீடுகளும் அமைக்கப்படவுள்ளன. இதற்கு 400 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

31 ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கான அங்குரார்ப்பண வைபவம் அண்மையில் மட்டக்களப்பு வவுணதீவில் இடம்பெற்றது.

இத்திட்டத்தில் எந்தவித ஒழுங்கீனமோ முறைகேடோ நடக்காது என உறுதி கூறுகிறேன். நடக்கும் பட்சத்தில் எனக்கு முறையிட்டால் நான் உடனடித் தீர்வுகாண்பேன்.

கூடிய விரைவில் ஆயிரம் வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டால் காலம்கடத்தாமல் உடனேயே அடுத்தகட்டத்திற்கான பயனாளிகளைத் தெரிவு செய்யலாம்.

காணிப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு காணிச் செயலணிக் குழுவுடன் தொடர்பு கொள்ளலாம். இன்னுமோர் வசதியாக பயனாளிகளுக்குள் இருந்தே ஆள்களைத் தெரிவு செய்து பயிற்சிகளை வழங்கி கட்டட வேலைகளில் ஈடுபடுத்த ஊக்கமளிக்கவுள்ளோம்.

கடந்த 2003 - 2004 ஆம் ஆண்டுகளில் ஆயிரம் வீடுகளை புனரமைப்பதற்கென யு.என்.எச்.சி.ஆர் மூலம் தலா 50 ஆயிரம் ரூபா மட்டுமே பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. அவர்கள் இத்திட்டத் தெரிவில் புறக்கணிக்கப்பட்டதை அறிந்தோம்.

இவர்களை அரச அதிபர் இனங்கண்டு விவரம் எடுத்துத்தந்தால் அவர்களுக்கு வீடுகளைத் திருத்துவதற்கென மேலதிக நிதிகளை வழங்க நாம் முயற்சிப்போம்.

தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் உருவாக்கிக் கொடுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் அழிந்த வீடுகளைப் புனரமைப்பதை ஓர் உபதிட்டமாக செய்யவுள்ளோம். உதாரணமாக நாவற்குழி வீட்டுத்திட்டம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

குருநகர், நாவாந்துறை, பாஷையூர் போன்ற சனநெருக்கடி மிகுந்த கிராமங்களில் இந்தத் திட்டதின் மூலம் அழிவடைந்த வீடுகளைப் புனரமைப்ப தென்பது சாத்தியமற்றது. ஏனெனில் இத்திட்டத்தின்படி 500 சதுர அடிப் பரப்பில் வீடுகளைக் கட்டவேண்டும்.

எனவே, இக்கிராம மக்கள் வேறு இடங்களில் காணிகள் பெற்று வீடு கட்ட விரும்பினால் நாம் உதவிசெய்வோம்.

எம் திட்டத்திற்கு உதவிசெய்ய வேறு பல உலக நிறுவனங்களும் உதவி வழங்க முன்வந்துள்ளன. உதாரணமாக ஐரோப்பிய ஒன்றியம் எமது திட்டத்திற்கு 150 கோடி ரூபாவை வழங்கியுள்ளது - இவ்வாறு பிரமுகர்கள் தெரிவித்தனர்.

தொடர்ந்து யாழ். செயலக பிரதிதித்திட்டப் பணிப்பாளர் சாம்பசிவம் தலைமையில் கொடுபனவுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. (ஒ-202)




கொழும்புத்துறை,ஜூன்17

சுண்டுக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய வருடாந்த திருவிழா நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

நவநாள் ஆராதனைகள் தினமும் மாலை 6 மணிக்கு நடைபெறும். நற்கருணைத் திருவிழா 23ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கும், திருவிழாத்திருப்பலி 24ஆம் திகதி காலை 6.30 மணிக்கும் இடம்பெறும். தொடர்ந்து திருச்சொருப பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

★ ★ ★

வலி.தென்மேற்கு,ஜூன்17

மானிப்பாய் மேற்கு, கட்டுடை அரசடி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் அடுத்த மாதம் 13ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்று ஆலயத் திருப்பணிச்சபைத் தலைவர் ச.சிவகுமாரன் தெரிவித்துள்ளார். (135-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்17

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நவநாள் ஆராதனைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நாளை சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நற்கருணை வழிபாடு இடம்பெறும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 5.45 மணிக்கு முதல் திருப்பலியும் 7 மணிக்குத் திருநாள் திருப்பலியும் இடம்பெறும்.

திருப்பலி முடிவடைந்ததும் திருச்சொருப பவனி, சொருபா ஆசீர்வாதம் வழங்கல் என்பவற்றுடன் விழா நிறைவடையும். (203)

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு.பொ.கமலநாதன்
(அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி)
அவர்களின் அன்புத் தந்தை

**கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை**


அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினரின் துயரத்தில் நாமும் பங்கு கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தக்கின்றோம்.

யூரியன் கல்லூரிச் சமூகம்,
பொன் பரமானந்தர் ம.வி. சமூகம்.

தெல்லிப்பழை. (36649)(11-15-38)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 15 - 04 - 1926



உதிர்வு 19 - 05 - 2005

**அமரர் கணபதிப்பிள்ளை தங்கவடிவேல்**

*(உரிமையாளர், C.W.E. கட்டடத் தொகுதி, பருத்தித்துறை)*

19-05-2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி நிகழ்வுகள் நாளை (18-06-2005) சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு பருத்தித்துறை திருநாவலூர் தெணியம்மன் (எரிஞ்சம்மன்) அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பத்திரகாளி கோயில் ஒழுங்கை.
பருத்தித்துறை. (36647)(26-11-15-38)

சிவதாஸ்,
விக்ரம் அன் சன், பருத்தித்துறை.

## 7 ஆண்டு நினைவஞ்சலி

**சிவத்திரு. கனகரத்தினம் ஐயா**
**பாலசுப்பிரமணிய ஐயா**

(தீர்த்தாங்குளம் பிள்ளையார் கோயில் ஆதீன கர்த்தாவும், பிரபல முத்துச்சப்பர அமைப்பாளரும்)

திதி: பூர்வபக்க தசமி

அன்னாரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கும்

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தீர்த்தாங்குளப் பிள்ளையார் கோயில்.
பத்தமேனி.
அச்சுவேலி. (36633)(11-15-38)

UNIT

எமது வாடிக்கையாளர்களது வேண்டுகோள் ஏற்கப்பட்டுள்ளது

UNIT ன் UNIQUE Offer

இன்றுடன் முடிவடைகிறது

எல்லா கணனி உதிரிகளும் குறைக்கப்பட்ட விலையில்

TV Tuner/Webcam/Woofer/UPS/Table Printer/Scanner & CD Cleaner, Screen Filter, Dust Cover, Mouse Pad Totally Free

3 வருட முழு உத்தரவாதம்

UNIT 347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021 - 4590720 / 0773134737

15.06.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்



செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 200367017 இலிருந்து 200385263 வரை

சீட்டிழுப்பு இல. 1615

34 47 54 64 — சுப்பர் எண் 12

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.1,19,12,500/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,19,12,500/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 33 | 5,000/- | 1,65,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 482 | 1,000/- | 4,82,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,566 | 500/- | 7,83,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 23,898 | 40/- | 9,55,920/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 22,692 | 20/- | 4,53,840/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,38,979 | 10/- | 33,89,790/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 87,29,550/-

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 1,28,18,500/-

200367540-3-26
200373774-1-20
200382091-2-36
200381391-3-16
200372574-5-33

இல. 33,செண்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



பேரினவாத நடவடிக்கைகளைக் கண்டித்து கைதடியில் நேற்று நடத்தப்பட்ட அடையாள உண்ணாவிரதத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. உண்ணாவிரதத்தில் கலந்துகொண்ட பொதுமக்களைப் படங்களில் காணலாம்.
(படங்கள்:நேசன்)

# மிதிவெடி அகற்றிய இரு இடங்கள் 'ஹலோ ரெஸ்ட்'டினால் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்17

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மிதிவெடி அகற்றப்பட்ட இரு இடங்கள் கடந்த 10 ஆம் திகதி கையளிக்கப்பட்டுள்ளன.

சிறுப்பிட்டி குருநாதர் கோயிலடியில் மிதிவெடி அகற்றப்பட்ட இரண்டாயிரத்து 775சதுர நிலப்பரப்பும் -

இருபாலைப் பகுதியில் மூவாயிரத்து 722 சதுர நிலப்பரப்பும் இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளன. சிறுப்பிட்டியில் 286 மதிவெடிகளும் இரண்டு வெடிக்காத குண்டுகளும் இருபாலையில் 405 மிதிவெடிகளும் வெடிக்காத குண்டு ஒன்றும் மீட்கப்பட்டதாக இவ்விரு இடங்களிலும் மிதிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்ட 'ஹலோ ரெஸ்ட்' நிறுவனம் அறிவித்துள்ளது.

மேற்படி இருஇடங்களிலும் மிதிவெடி அகற்றப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் பத்திரம் 'ஹலோ ரெஸ்ட்' நிறுவனத்தின் பிரதேச மேற்பார்வையாளர் எஸ்.திவ்யனால் யாழ்.செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டு அலுவலக திட்டமிடல் நடவடிக்கை அலுவலர் செ.டெனிஷனிடம் கையளிக்கப்பட்டது. (எ-13)

## ஆசிரியர் சங்கத்தின் ஆட்சிக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்17

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆட்சிக் குழுக்கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திருகோணமலை பெருந்தெரு விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நாடுமுழுவதிலும் உள்ள 60 இற்கும் மேற்பட்ட கிளைகளின் செயலாளர்களும் தாய்ச்சங்க, மாவட்ட,வலய மட்டப் பிரதிநிதிகள் இதில் பங்கேற்பர். (எ)

## மருந்துக் கலவையாளர் பதவி வெற்றிடம்

வலி.தென்மேற்கு,ஜூன்17

இளவாலை அரசினர் வைத்தியசாலையில் கடந்த ஒருவருட காலத்துக்கு மேலாக மருந்துக் கலவையாளர் பதவி நிரப்பப்படாது வெற்றிடமாக இருந்துவருகிறது.

இதனால் வைத்தியசாலையில் கடமையாற்றும் சிற்றூழியர்களே வைத்தியசாலை பொறுப்பதிகாரியின் மேற்பார்வையில் நோயாளர்களுக்கான மருந்துகளை விநியோகம் செய்து வருகின்றனர். (எ-135)

# எல்லாளன் படையின் அறிவிப்பு

வடமராட்சி,ஜூன்17

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.எப்.எம்.,தென்றல் வானொலிகளுடன் ஆக்கங்களை அனுப்பிவைத்தோ,தொலைபேசி மூலம் உரையாடியோ எதுவிதமான தொடர்புகளையும் வைத்துக்கொள்வதை இந்த நிமிடத்திலிருந்தே நிறுத்திக்கொள்ளுமாறு 'எல்லாளன்படை' என்ற பெயரிலான சுவரொட்டி மூலம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

'பொதுமக்களுக்கான எச்சரிக்கை' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இச்சுவரொட்டி வடமராட்சிப் பிரதேசத்தில் பல இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளது.

இந்த ஒலிபரப்பில் பணியாற்றும் சிலரது பெயர்களும் குறிப்பிடப்பட்டு அவர்களால் எமது கலாசாரம் அழிக்கப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே படையால் வெளியிடப்பட்டுள்ள மற்றொரு சுவரொட்டியில் 'முக்கிய கவனத்துக்கு' என்ற தலைப்பில் யாழ்.எப்.எம். வானொலிக்கு விளம்பரங்களை வழங்கும் நிறுவனங்கள் உடனடியாக விளம்பரங்கள் வழங்குவதை நிறுத்த வேண்டும். முடிவு உங்களைப் பொறுத்தது செயல் எங்களைப் பொறுத்தது எனவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-173)

## மாவை எம்.பியின் கருத்துரை

யாழ்ப்பாணம், ஜூன்17

கோண்டாவிலில் இயங்கும் சி.பி.கணனிக் கல்வி நிறுவகத்தின் விரிவுரைகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா இந்த விரிவுரைகளை ஆரம்பித்து வைத்து 'தகவல் தொழில்நுட்பமும் இன்றைய உலகமும்' என்னும் தலைப்பில் கருத்துரை வழங்குவார். (3-203)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி துரைராசா இராஜேஸ்வரி



தையிட்டியைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைராசா இராஜேஸ்வரி நேற்று (16.06.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி - செல்வலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் மணிக்கம் துரைராசா அவர்களின் அன்பு மனைவியும் கேமா (ஜேர்மனி), சிறிபாமா (முன்பள்ளி ஆசிரியர், மாதர் சங்கம், சித்தன்கேணி) பிரகாஸ் (கமலேஸ்வரி புடைவையகம், யாழ்ப்பாணம்), கிருபாகரன், கஜந்தினி ஆகியோரின் அன்புத் தாயும் விக்கினேஸ்வரனின் (ஜேர்மனி), அன்பு மாமியும் சிவஞானசுந்தரம் (விவசாயத் திணைக்களம், முல்லைத்தீவு), கௌரீஸ்வரி, காலஞ்சென்ற குலஞானசுந்தரம், சிவநேசா (ஆசிரிய ஆலோசகர், கிளிநொச்சி), தனேஸ்வரன் (விவசாயபீடம், யாழ். பல்கலைக்கழகம்), தங்கேஸ்வரி (கிளி/சாந்தபுரம் ம.வி. ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் டனுஸ்ரிகா, சாருகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சித்தன்கேணி. (36659)(29-12-16) தகவல்: கணவன்.

### மார்க்கண்டு சின்னத்தம்பி

**(முன்னாள் போடிங் மாஸ்டர் யாழ்.இந்துக் கல்லூரி, வருமானவரித் திணைக்களம், கொழும்பு)**



சிவலிங்கப்புளியடி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் 5,ராமகிருஷ்ண ரெறேஸ், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சின்னத்தம்பி நேற்று(16.06.2005) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகலட்சுமியின் அன்புக் கணவரும் சிவராமலிங்கம்,செல்வறாணி, மார்க்கண்டன் (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், தபால் திணைக்களம்), சிவானந்தன் (பிரதி ஆணையாளர் மதுவரித் திணைக்களம்) காலஞ்சென்ற விஜயகுமார் [J-Cey-Tea (pvt) Ltd.] நகுலேந்திரன் (கணக்காளர், லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.06.2005) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் ஒரு மணியளவில் கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5, ராமகிருஷ்ண ரெறேஸ், வெள்ளவத்தை. (36656)(29-12-16) தகவல்: சி.மார்க்கண்டன் (மகன்).

## தவறிவிட்டது

இராசரத்தினம் அகிலாண்டேஸ்வரி என்பவரின் மோட்டார் சைக்கிளின் காப்புறுதிப்பத்திரமும் மற்றும் வரி வேறுசில ஆவணங்களும் கோண்டாவில் சந்திக்கும் உரும்பிராய் ஞானவைரவர் கோயிலுக்குமிடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உரும்பிராய பெற்றோல் நிலையத்தில் ஒப்படைக்கவும்.

(36658) (12-16-29)

## விற்பனைக்கு

அச்சக பயன்பாட்டுக்குரிய கட்டர், பிளேட்டின், பேபிறேற்றர் மெஷின் விற்பனைக்குண்டு.
தொடர்பு: (சி-43469) (21-12-16-29)
செந்தில் அச்சகம், சாவகச்சேரி.

## மனோகரா யாழ்ப்பாணம்

இன்று முதல் மிகப்பிரமாண்டமான வெளியீடு இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
'சீயான்' விக்ரம், சதா, பிரகாஷ்ராஜ், விவேக், சார்ளி நடித்த
அந்நியன்
காட்சி நேரம்:
10.30 a.m.,
2.30. p.m. 6.30 p.m.,
9.30 p.m.
(விசேட காட்சிகளும் உண்டு)
(C/43464)

## நாதன்ஸ் சினிமா

குளிரூட்டப்பட்டது. ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

"இன்டி பெண்டன்ஸ் டே" டைரக்டர் ரோலண்ட் எம்ரீச் மீண்டும் முத்திரை பதிக்கும் படைப்பில்!
கா.நே.: 10.30,2.30, 6.30,9.30. (பு.நே.)
THE DAY AFTER TOMORROW (ரீகல்) நாளை மறுநாள் (தமிழாக்கம்)
சுனாமி போன்ற அழிவுகளைச் சித்திரிக்கும்.

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

சரத்குமார், அறிமுகம் ரமேஸ், பூஜா நடித்த
ஜித்தன் (ரீகல்)
காட்சிகள்: 11.00. 3.00 (பு.நே.)
(C/41380)(29.16.17)

## ராஜா யாழ்ப்பாணம்

ரஜனிகாந்த், பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல் நடித்த
சந்திரமுகி (ரீகல்)
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)
(C/41381)(12.17)

## மனமுவந்து பாராட்டி வாழ்த்துகிறோம்

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் 12 வருடங்கள் அதிபராகப் பணியாற்றி பாடசாலை வளர்ச்சிக்கும் எமது கல்வி நிறுவன வளர்ச்சிக்கும் கிராம வளர்ச்சிக்கும் அளப்பரிய சேவையாற்றி இன்று கல்லூரிச் சமூகத்தால் பாராட்டிக் கௌரவிக்கப்படும் -
உயர்திரு நா.சண்முகரத்தினம் (S.L.P.S.-I)
அவர்களையும்
இப்பாடசாலையில் ஆசிரியப்பணிபுரிந்து இளைப்பாறிச் செல்லும்
திருமதி ஞா.திலகராசா (S.L.T.S.-I)
திருமதி அ.குணசிங்கம் (S.L.T.S.-I) ஆகியோரையும்
பல்லாண்டு காலம் சிறப்புடன் நீடுழி வாழ வாழ்த்தி நிற்கும்.

இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கலைவாணி கல்வி நிறுவனம்
கோப்பாய்.

(36657)(29-12-16)

## வீடுகள் வாடகைக்குத் தேவை

**போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள் தங்குவதற்கு சகல வசதிகளும் கொண்ட யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் வீடுகள் வாடகைக்குத் தேவைப்படுகின்றது. ஆகையால் வாடகைக்குக் கொடுக்க விரும்புபவர்கள் விண்ணப்பிக்கவும் அல்லது வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

வைத்திய கலாநிதி எஸ்.ரவிராஜ்
பணிப்பாளர்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(C-43478)(29-12-16)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



எங்கள் அன்புத் தெய்வமாயிருந்து 19.05.2005 வியாழக்கிழமை அன்று இறையடி எய்திய எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

### சின்னையா கிருஸ்ணபிள்ளை

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் (18.06.2005) சனிக்கிழமை முற்பகல் 6 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம ஈடேற்றத்திற்கான பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

*தனிப்பட்ட அழைப்புகள் தவறவிடப்பட்டிருப்பின் மன்னித்து வருகை தருமாறு வேண்டுகின்றோம்.*

'கணக்கர் வளவு' (36653)(29-12-16)
இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி. -குடும்பத்தினர்

## புலிகளின் பாண்டிருப்பு அலுவலகத்துள் புகுந்த இருவர் துப்பாக்கிச் சூடு!

போராளிகள் இரண்டு பேர் காயம்

அம்பாறை மாவட்டத்திலுள்ள விடுதலைப் புலிகளின் பாண்டிருப்பு பிரதேச அரசியல்துறை அலுவலகத்தினுள் புகுந்து நேற்று நண்பகல் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு போராளிகள் காயமடைந்தனர். நவநீதன் மற்றும் ராஜன் ஆகிய போராளிகளே இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களாவர். அலுவலகத்தில் போராளிகள் மக்கள் சந்திப்பை நடத்திக்கொண்டிருந்த சமயம் அங்கு வந்த இருவர் திடீரெனக் கைத்துப்பாக்கியை எடுத்து போராளிகளை நோக்கிச் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றனர் என்று புலிகள் தெரிவித்தனர். (எ-ரி-க)

## திங்களன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் -

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பெரும்பாலும் இன்று மூன்று பீடங்களினதும் மகாநாயக்கர்களையும் சந்தித்துப் பேசுகிறார். புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு உடன்பாடு செய்யும் திட்டத்தை அப்போது இறுதியாகவும், உறுதியாகவும் ஜனாதிபதி அவர்களிடம் தெரியப்படுத்துவார் எனக்கூறப்பட்டது.

பொதுக்கட்டமைப்பு உடன்பாடு தொடர்பான பத்திரத்தில் இலங்கை அரசின் சார்பில் அதன் புனர்வாழ்வு நிவாரணம், நல்லிணக்க அமைச்சின் அதிகாரி ஒப்பமிட்ட பின்னர் அதனை கிளிநொச்சிக்கு நோர்வேத் தரப்பினர் எடுத்துச்சென்று புலிகளின் தரப்புப் பிரதிநிதியிடம் ஒப்பம் பெறக்கூடும் என ஊகிக்கப்பட்டது. (எ-க)

## 'சுயநிர்ணயத்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுப்பிரகடனமாக அவர்களின் கையொப்பங்களுடன் வெளியிடப்படும்.

பௌத்த சிங்களப் பேரினவாதத்தை தமிழ் மக்கள் நிராகரித்துவிட்டனர் என்பதையும் -

தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைகளுடன வாழ்வதென முடிவுசெய்துவிட்டனர் என்பதையும் - சர்வதேச சமூகத்துக்கும் தெற்குத் தலைமைகளுக்கும் தெரியப்படுத்தவே இந்தப் பிரகடனம் வெளியிடப்படுகின்றது.

கிராம மட்டத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் மக்களின் கருத்துக்களை பிரதிபலிக்கக் கூடியதாக இந்தப் பிரகடனம் அமையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நண்பகல் நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழு அலுவலகத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் இது தொடர்பான விளக்கம் அளிக்கப்பட்டது.

மேற்படி ஒன்றுகூடலை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள பிரகடனத்தில் பௌத்த - சிங்களப் பேரினவாதம் தெற்கில் தலைவிரித்து ஆடுகின்றது. தமிழ் பேசும் மக்களின் குறைந்தபட்ச நிர்மாணத்துக்குக் கூட அது பெருந்தடையாக அமைகிறது. பேரினவாதக் கோலத்தைக் கண்டித்து தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணயத்துக்கான தேசியத்தின் குரலை ஓங்கி ஒலிக்க வேண்டியது எங்கள் தார்மீகப் பொறுப்பு. தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாய் ஊர்கள்தோறும் நிறுவனங்கள் தோறும் அமைப்புகள் தோறுமிருந்து ஆயிரமாய்கூடி விடுதலைக்கான குரலை எழுப்புவோம் வாருங்கள் என்று குறிபபிடப்பட்டுள்ளது. (எ-3)

## ஜே.வி.பி. வசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது எனக் கூறப்பட்டது.

அதேசமயம் இந்த அமைச்சுகளின் பிரதியமைச்சுப் பதவிகளையும் இப்போது பிரதியமைச்சர்களாக இருக்கும் ஏனையவர்களிடம் ஜனாதிபதி வழங்கவுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஜே.வி.பியின் நான்கு அமைச்சர்மாரும் அனுப்பிய இராஜினாமாக் கடிதங்களை ஜனாதிபதி நேற்றுமாலை ஏற்றுக்கொண்டுவிட்டார். அதேபோல் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து விலகுவதாக ஜே.வி.பியின் தலைமைச்செயலர் அனுப்பியகடிதத்தைகூட்டமைப்பின் செயலாளர் சுசில்பிரேம் ஜயந்த ஏற்றுக்கொண்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-க)

## மத்திய மற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க இந்தச் செய்தியாளர் மாநாட்டில் மேலும் கூறியதாவது:-

நீண்ட கலந்துரையாடல்கள், பேச்சுகளின் பின்னர் நாம் இந்த அரசிலிருந்து வெளியேறுவதற்குத் தீர்மானித்தோம். மத்திய அரசிலிருந்து விலகியதுபோல் மாகாணசபைகளிலும் விலகி எதிர்வரிசையில் அமரத் தீர்மானித்திருக்கிறோம் இனிமேல் நாம் சுயாதீனமாக இயங்குவோம். நாட்டின் நலன்கருதி நாம் எடுத்த அரசியல் தீர்மானமே இது. எமது விலகலினால் ஏற்படும் விளைவுகள் இன்னும் ஓரிரு நாள்களுள் தெரியும். ஏற்கனவே உறுதிவழங்கியபடி மக்களுக்கான சேவைகளை முழுமையாக வழங்க முடியாமல்போனதையிட்டு நாம் மக்களிடம் மன்னிப்புக் கோருகிறோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும், எமக்குமிடையில் இது முதலாவதும், இறுதியுமான கூட்டணியல்ல எதிர்காலத்திலும் இவ்வாறான ஒன்று உருவாகக்கூடும். நாட்டின் இறையாண்மை, பாதுகாப்பு, ஆள்புல ஒருமைப்பாட்டின் மீது அக்கறை கொண்ட எவருடனும் கைகோர்க்க நாம் தயார். இப்போதைய சூழலில் இந்த விடயங்களுக்கு ஐக்கிய தேசியக்கட்சி உட்பட எந்தக் கட்சி உடன்பட்டாலும் அவர்களுடனும் கைகோர்க்க நாம் தயார்.

அரசிலிருந்து விலகுவது சம்மந்தமாக நாம் அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்கவில்லை. கடந்த மார்ச் மாதம் முதல் நாம் இதுதொடர்பில் பேச்சுக்களை நடத்தினோம். அதிகபட்ச பொறுமையைக் கடைப்பிடித்தோம். ஆனால், எந்தவித ஆக்கபூர்வமான முடிவும் எட்டப்படவில்லை. வேறு வழியில்லாத காரணத்தினால்தான் அரசிலிருந்து விலகினோம். நாட்டில் முக்கியமான பல பிரச்சினைகள் இருப்பதை நாம் அறிவோம். ஆனால் நாடு என்று ஒன்று முதலில் இருக்கவேண்டும்.

ஜனாதிபதி எம்மைப் பேச்சுக்கு வருமாறு சில சமயம் அழைத்தால், அந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டின் நலன்கருதி நாம் செயற்படுவோம். பொதுக்கட்டமைப்பு ஒன்று கைச்சாத்திடப்பட்டால் நாம் எமது முழுப்பலத்தையும் பிரயோகித்து எதிர்ப்பை வெளிப்படுத்துவோம். இப்போது பொதுக்கட்டமைப்பை நாடாளுமன்றத்திற்கு அறிவிப்பதில் எதுவித அர்த்தமும் இல்லை. இப்போதைய சூழ்நிலையில் புலிகளால் யுத்தமொன்றுக்குச் செல்லமுடியாது. ஐக்கிய தேசியக் கட்சியினால் எவ்விதத்திலும் ஆட்சிக்கு வர முடியாது - இவ்வாறு சோமவன்ஸ அமரசிங்க மேலும் கூறினார். (எ-க-ரி)

## ஜே.வி.பி.விலகலால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திபதி மாளிகையிலிருந்து தேசிய தொலைக்காட்சியூடாக நேரடியாக கண்டிக்கூட்டத்திற்காக ஜனாதிபதி உரையாற்றினார். அப்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

(எஞ்சிய ஜனாதிபதியின் உரை நாளைய உதயனில்) (எ-க-ரி)

## ஒஸ்லோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் தலைவியான ஜனாதிபதி இக்கட்டான நேரங்களில் தனது நிறைவேற்று அதிகாரங்களைத் துணிச்சலுடன் பயன்படுத்தவேண்டும். முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

அதேபோன்று ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமரானவுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்டார். இவை நாட்டின் நலன்கருதி செய்யப்பட்டவை. அவர்கள் இந்த ஒப்பந்தங்களைத் தாங்கள் அதோ செய்கிறார்கள், இதோ செய்கிறார்கள் என்று இழுத்தடித்துக் கொண்டிருக்கவில்லை.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த மூன்று மாதங்களாகப் பொதுக்கட்டமைப்பை செய்தே தீருவேன் என்று பம்மாத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றார். ஆனால் எதையும் செய்யவில்லை.

ஜனாதிபதியின் இந்த பம்மாத்துக்களாலேயே அவரது கூட்டாளிகளான ஜே.வி.பியினரும், ஜாதிகஹெல உறுமயவினரும் ஆர்ப்பாட்டங்களையும், உண்ணாவிரதப் போராட்டங்களையும் நடத்தி நாட்டில் பதற்றநிலையை உருவாக்கிவிட்டனர்.

பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமென்பதில் ஜனாதிபதி உண்மையாகவே உறுதியாக இருந்தால் காலம் கடத்தாமல் புலிகளுடன் இணைந்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

அரசும், புலிகளும் செய்து கொள்வது ஓர் உடன்படிக்கை மட்டுமே. இது ஒரு சட்ட மூலமோ அல்லது திருத்தச்சட்டமோ அல்ல. இதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்போகிறேன் என்று அவர் கூறுவது ஒரு கேலிக்கூத்து.

ஜனாதிபதி தனது பொறுப்புகளிலிருந்து விலகிக்கொள்ள மேற்கொள்ளும் ஒரு தந்திரோபாயமே இது. தனக்குரிய நிறைவேற்று அதிகாரங்களைக் கூடப்பயன்படுத்த முடியாமல் சக்தி இழந்துவிட்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. தனது இயலாமையை ஒப்புக்கொண்டு அவர் உடனடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டும். அதைத் தவிர வேறு மாற்றுவழிகள் இல்லை.

நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவதாலோ, பொதுத்தேர்தலை நடத்துவதாலோ இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது. நாடு இப்பொழுது கொந்தளிப்பான நிலையில் இருக்கின்றது. அமைதியற்ற ஒருபதற்றம் நிலவுகிறது. மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கக் கூடிய ஓர் அரசு இப்போது இல்லை. துணிச்சலான தலைவரும் இல்லை.

எனவே, பொறுப்பான ஒரு தலைமையை உருவாக்க ஜனாதிபதி இடமளிக்க வேண்டும் - எனவும் பேராசிரியர் பீரிஸ் கூறினார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.க. பிரதி பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்கவும் சமுகமளித்திருந்தார். (எ-க)

## ஓரிரு நாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுத் தலைவர்களும் தயாராக இருக்கின்றார்கள் என்ற செய்தியும் நோர்வே மூலம் புலிகளின் சமாதானச் செயலகத்துக்குத் தெரிவிக்கப்பட்டதாக நோர்வே வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஏற்பாடும் புலிகளின் தலைமைக்கு ஏற்புடையதாகுமா என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. இலங்கை அரசுக் கட்டமைப்பின் ஓர் அமைச்சுக்குக் கீழ்வராமல் சுயாதீனமாகப் பொதுக் கட்டமைப்பு இயங்குவதையும், இது தொடர்பான ஒப்பந்தத்தில் அரச மற்றும் புலிகளின் சமாதானச் செயலகப் பிரதிநிதிகள் ஒப்பமிடுவதையுமே புலிகள் விரும்புகின்றார்கள் என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால், இலங்கை அரசின் சமாதானச் செயலகம், முன்னர் இருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் தனது நிர்வாகப் பணிகளுக்கும், ஆலோசனைகளுக்கும் என உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பே தவிர, அமைச்சுகளுக்குரியது போன்ற சட்ட அல்லது கட்டளை ரீதியான அதிகாரம் அதற்கு இல்லை என்றும் -

எனவே, சமாதானச் செயலக மட்டத்தில் செய்யப்படும் ஒப்பந்தம் அரச கட்டமைப்பு ஏற்பாட்டுக்குள் அதிகாரம் கொண்ட ஒன்றாக இருக்காது என்றும் - இவ்விடயத்தில் விளக்கம் கூறப்படுகின்றது.

அதுமட்டுமல்ல, இந்தப் பொதுக்கட்டமைப்பு ஏற்பாடு அரசின் அமைச்சு ஒன்றின் கீழ்வரும் என்றும் - அமைச்சு ஒன்றின் செயலாளரே இதில் ஒப்ப மிடுவார் என்றும் -

இலங்கை ஜனாதிபதி பரவலாகப் பிரசாரம் செய்துள்ள நிலையில் அதனை மாற்றமுயல்வது உத்தேசப் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்துக்கு எதிரான உணர்வலைகளைத் தென்பகுதியில் கிளப்பும் என்பதால் இதில் விட்டுக் கொடுத்து நடக்கும்படி விடுதலைப் புலிகளை அனுசரணைத் தரப்புக் கோரும் என்றும் கூறப்பட்டது.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் நிபந்தனை ஏதும் விதிக்காமல் ஆரம்பம் முதலேயே முழு விட்டுக் கொடுப்புடன் நடந்து தனது தாராளத்தையும், பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் தனக்குள்ள நேர்மையான ஈடுபாட்டையும் சந்தேகத்துக்கு அப்பால் புலிகள் நிரூபித்துள்ளனர்.

இந்த நிலையில், பொதுக்கட்டமைப்பைத் தாமதமின்றி உடன் செய்யும்படி இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமை அமைப்புகளான அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய யூனியன், நோர்வே ஆகியன வற்புறுத்திக் கேட்டுள்ளன. இந்தியாவும் ஏனைய சர்வதேச நாடுகளும் இப் பொதுக்கட்டமைப்பை வரவேற்றுள்ளன.

இந்தப் பின்னணியில் புலிகள் இதுவிடயத்தில் தங்களின் விட்டுக் கொடுக்கும் தாராள - தளர்வு - போக்கைத் தொடர்ந்தும் கைப்பிடித்து இந்த ஒப்பந்தத்தை விரைந்து ஏற்படுத்த ஒத்துழைக்க வேண்டும் என்ற கோரிக்கை சம்பந்தப்பட்ட வட்டாரங்களினால் முன்வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

மக்களின் பேரழிவோடு சம்பந்தப்பட்ட விடயத்தில் கொள்கை, கோட்பாடுகளை நுழைத்து அதனைச் சிக்கலாக்காமல், பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக அரசுத் தரப்புடன் சேர்ந்து பணியாற்ற முன்வந்துள்ள விடுதலைப் புலிகள், அதே காரணத்துக்காக எஞ்சியுள்ள விடயங்களிலும் விட்டுக் கொடுப்பார்கள் என நம்பிக்கை தெரிவித்துள்ள அந்த வட்டாரங்கள், எஞ்சியுள்ள சிக்கல்கள் விரைந்து தீர்க்கப்பட்டு ஓரிரு நாள்களில் ஒப்பந்தம் கைச்சாத்தாகும் என உறுதி தெரிவித்தன.

புலிகளின் தரப்பில் இந்த உத்தேச ஒப்பந்தத்தில் யார் கையெழுத்திடுவார்கள் என்பது இன்னும் தெரியவரவில்லை. (எ-க)


**விக்னா கல்வி நிறுவனம்**

பிரிவு 2
A/L 2007
அளவையியல்
திரு. சயந்தன்
ஆரம்பமாகிவிட்டது
சனி, ஞாயிறு 8.30 மணி
(C/43444)

**D.C.S நியூட்டன்**

ஆரியகுளம் சந்தி அருகில் யாழ்.நகர்.
A/L 2006, 2007 (கலைப்பிரிவு)
வலிகாமம் பிரபல முன்னணி ஆசிரியர்கள் யாழ்.நகரில்...

| | |
|---|---|
| Tam-M.சுரேஸ் | Dra.-I.சத்தியா |
| Chr.-S.ரங்கன் | H.C-S.சுரேஸ் |
| Po.sc.-T.திருமுருகன் | Hi-R.ஜெனகன் |
| Eng.-R.மகேஸ்வரன் | Geo.-S.கிருஸ்ணா |

ஆரம்பம்:-18.06.2005 சனி காலை 8 மணி.
G.A.Q., B.A. Part I, II யாழ்., பேராதனை விரிவுரைகள் நடைபெறுகின்றன. (36620)(16-29-12)

**தென்னிந்தியாவில் இருந்து**

ஏழாவது முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்



**ராஜகுருசாமி** அவர்கள்

வியாழமாற்றம், சனிமாற்றப் பலன்களை அறிவதற்கு மீண்டும் யாழ்.மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க வருகை தந்துள்ளார்.

பார்க்கும் நேரம்: காலை 9 மணிமுதல் மாலை 6 மணி வரை. கைரேகை மட்டும் 9 மணிமுதல் ஒரு மணிவரை.

★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம் ★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்

இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.

ராஜகுருசாமி மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ் (38-16-18)
60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA.
(சி-43217)

**C.B. Computer Academy**

அன்பான மாணவர்களே!

எமது நிறுவனத்தின் விரிவுரைகள் யாவும் 18.06.2005 அன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

முதல் பயிற்சிநெறியினை கௌரவ மாவை சேனாதிராஜா (நா.உ) அவர்களினால் ஆரம்பித்து வைத்து 'தகவல் தொழில் நுட்பமும் இன்றைய உலகமும்' என்னும் கருப்பொருளில் கருத்துரை வழங்குவார். அனைத்து மாணவர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

021-4590291 (C/43466) பணிப்பாளர் R.சுகுமார்.

**மானிப்பாய் தூய அந்தோனியார் திருத்தல பெருவிழா**



19.06.2005
ஞாயிற்றுக்கிழமை
காலை 7 மணிக்கு
யாழ்.ஆயர் தலைமையில்
பக்தர்களை அன்புடன் வரவேற்கின்றோம்.

(36610) பங்குத்தந்தையும் அருட்பணி சபையினரும்.


## மரண அறிவித்தல்கள்

### தம்பிப்பிள்ளை தவமணி

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை தவமணி அவர்கள் நேற்று (16.06.2005) காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2005) அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகலிங்கம் வீதி,* (36661)(29-12-16) தகவல்:
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* சகோதரர்கள்.

### திருமதி பாலசிங்கம் மகேஸ்வரி (பரமேஸ்வரி)

மருதடி வீதி, நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பாலசிங்கம் மகேஸ்வரி நேற்று மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் ராஜ்குமார், ரஜனி (பிரான்ஸ்), ரஜனிக்காந், ராஜேந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2005) பிற்பகல் நான்கு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

*இல.77, மருதடி ஒழுங்கை,* தகவல்:
*நல்லூர்.* (36660)(29-12-16) பா. ராஜ்குமார் (மகன்).


**EXPOAIR எக்ஸ்போ ஏயார்**

your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com
(சி-43138)(16-29-12)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.